# இளந்தென்றல்



106
Appropriate Technology Services
161, POINT PEDRO ROAD,
NALLUR, JAFFNA
No. 812
NO. 3137
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

N. RAJENDRA
No.9 PENNYCUICK ROAD
WELLAWATTA

# இளந்தென்றல்

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 3137

1976

ஆசிரியர் :

அந்தனி சத்தியசீலன்

அட்டைப்படம் : ஆ. பத்மநாதன்

தமிழ்ச் சங்கம்
இலங்கைப் பல்கலைக் கழகம்
கொழும்பு வளாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments
from

# PANDATERUPPU PARISH M. P. C. S. LTD.

*Phone :* **808**

*Head Office :*
36, Wholesale Dept.
**PANDATERUPPU**

*T'Grame :* **' PANDAI COOP "**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை

நாடி நரம்பொடுங்க நாளும் உழைத்திந்த
நானிலத்தைக் காத்திடு வோர் உடம்பில்
ஓடி வழிகின்ற வியர்வை துடைத்திட
நீடு வீசுக " இளந்தென்றல் "

இதுவே நம் காணிக்கை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்படம்

விஞ்ஞானமோ...

இயற்கையோடு

விளையாடுகின்றது...... :

கலைகளோ

இதயத்தோடு

விளையாடுகின்றன...... !

சமயங்களோ

இறைவனோடு

விளையாடுகின்றன...... !

ஆனால்......

ஏழையோ...... ?

அவன் சுமையை

ஏழ்மையை

இவைகளில் எது

தீர்க்கப்போகின்றது ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# காப்பாளர் ஆசியுரை

இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பகாலம் முதல் இற்றை வரை உலகின் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு துறைகளிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சி வேகம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. விஞ்ஞான வளர்ச்சி மனிதனின் சிந்தனையைப் பல்வேறுதுறைகளில் அக்கறையையும் அபி விருத்தியையும் ஏற்படுத்தியுள்ளது. நாடுகள்தோறும் பண்பாட்டு உணர்வும் மொழி ஆர்வமும் ஏற்பட்டுவரும் இந்நாட்களில் இளைஞர்களின் ஒத்து ழைப்பும், முழுவலிமையும் நம்நாட்டு அபிவிருத்திக்கு அவசியமாகின்றன. உலகெங்கும் இளைஞர் குரலே மேலோங்கி ஒலிக்கின்றது. இவ்வேளையில் எமது பல்கலைக் கழகத் தமிழ் இளைஞர்கள் படைத்தளிக்கும் இளந் தென்றலும் இளைஞர்களுக்கு புத்துணர்வை ஊட்டி புதுப்பாதையை வகுத்துக் காட்டும் என நம்புகின்றேன்.

எதிர்காலத்தில் நம்பிக்கை பூண்டு, அயரா ஊக்கத்துடன் கல்வியில் ஈடுபட்டுள்ள எம்மாணவர்கள் தமிழ்ச் சங்கத்தின் மூலம் பட்டிமன்றம் நாவன்மைப் போட்டி, கவியரங்கம் என்பன நடாத்தியும், கலைவிழா வைத்தும் தமிழ்ப்பண்பாட்டைப் பேணிவருகின்றார்கள் என்பதைக் காணும் போது நாம் பூரிப்படைகின்றோம். பெருமிதம் கொள்கிறோம்,

அரைநூற்றுண்டு ஆயுளைத் தாண்டி ஐம்பத்தோராவது இதழாக வெளிவரும் இந்த இளந்தென்றல் பல்வேறுதுறைப்பட்ட சிறப்புக் கட்டுரை களைத் தாங்கி வெளிவருகின்றது. இளந்தென்றலின் நறுமணமும் அதன் இனிமையும் வாசகரை மகிழ்விக்கும் என்ற நம்பிக்கையுடன் இளந் தென்றலின் குறிக்கோள் நிறைவுபெற வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர், ஆ. சதாசிவம்**
*மொழிபண்பாட்டுத் துறைத்தலைவர்*
*இலங்கைப் பல்கலைக் கழகம்*
*கொழும்பு வளாகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பாளர் ஆசியுரை

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் மூத்த சங்கங்களிலொன்றுன இத் தமிழ்ச்சங்கம் தமிழ் மாணவர்களிடையே ஒற்றுமையையும், ஒருமைப் பாட்டினையும் பரஸ்பர நல்லெண்ணத்தையும் பேணிக் காப்பதில் பெரும் பங்காற்றி வருகிறது. கொழும்பு வளாகத்தின் பல்வேறு பீட மாணவர்களிடையே உள்ள திறமைகளை ஊக்குவிப்பதில் சங்கம் காட்டி வரும் பேரார்வம் போற்றுதற்குரியது.

இந்த வகையில், இம்முறையும் துடிப்புடன் இயங்கும் செயற்குழுவின் முயற்சியின் சிகரமாக அமையப்போகும் ''இளந்தென்றல்'' கலைவிழா சிறப்புற அமைய எனது இதயம் நிறைந்த ஆசிகள் உரித்தாகுக.

கலைவிழாவில் மலரப்போகும் ''இளந்தென்றல்'' சஞ்சிகைக்காக அயராது உழைத்துவரும் இதழாசிரியரின் முயற்சியும், சங்கச் செயற்குழுவின் தமிழ்ப்பற்றும், அவர்களது குறிக்கோளின் வெற்றிக்கு உதவட்டுமென வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர், ஆ. அ. ஹுவர்**
**B. Sc. (Lond.) Phd. (Lond.)**
*உயிரியல் இரசாயனப் பகுதி*
*மருத்துவபீடம்*
*கொழும்பு*
*1-6-76*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No

# இதழாசிரியர் இதயத்திலிருந்து......

நாடு அறிவுப் புரட்சியையும், சிந்தனைப் புரட்சியையும் வேண்டி நிற்கின்றது. மக்களோ யாவரும் இன்புற்றிருக்க நாட்டிலே சமநிலை, சமவாய்ப்பு சமுதாயம் ஒன்றினை கட்டி எழுப்ப முயல வேண்டிய ஒரு காலக்கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்பணியினைச் செய்து முடிப்பதிலேதான் எமதனைவரினதும் எதிர்கால முழுமையும் தங்கியுள்ளது.

பணியினைச் செய்து முடிப்பதற்கான சரியான பாதையிலேதான் நாம் பயணத்தைத் தொடருகிறோம். இடையே எமது உணர்வுகளையும், அபிலாசைகளையும் நிராகரித்திடும் சமூக சக்திகள் மலையென உயர்ந்து வருவதைக் கண்டு நாம் மலைப்புக்கொள்ளவில்லை. அவற்றால் எம்மைத் திசை திருப்பி விடவும் முடியாது.

எமது எண்ணங்களும், உணர்வுகளும், அபிலாசைகளும் சுதந்திரமாக விடிவை நோக்கி முன்னேறுகின்றன.

நாம் பயனற்ற உணர்ச்சி வெளிப்பாட்டால் வழி நடத்தப்படவில்லை. அன்றி சமுதாயம் வேண்டி நிற்கும் மாற்றங்களுக்கு முரணான உந்தல்களாலும் நாம் முன் தள்ளப்படவில்லை

சமுதாய நீதியில் நாம் கொண்டுள்ள அர்த்தமுள்ள கருத்துக்கள் எமக்கு வழி காட்டுகின்றன.

அத்தகைய சீரிய கருத்துக்கள்தாம் இங்கு தெள்ளென வீசும் ''இளந்தென்றலாக'' உங்கள் முன் தவழ்ந்து வருகிறது; மணம் கமழ்ந்து வருகிறது.

எம் இளம் உள்ளங்களில் தோன்றிய கருத்துக் குவியலாயும் அறிவிற் சிறந்த அறிஞரின் அறிவுக் களஞ்சியமாயும் தவழ்ந்து மணம் கமழும் இவ் ''இளந்தென்றலினை'' நுகர்ந்து பாருங்கள்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் தகவுரை :

எழில்மணம் வீசும் இலக்கிய கலை கலாசார அறிவியல் மலரென இளந்தென்றலின் ஐம்பத்தியோராவது மலரினை உங்கள் கைகளிலே தவழவிடுகின்ற வேளையில் இலங்கைப் பல்கலைக் கழக வளாகங்களின் மலர்களில் இளந்தென்றலே மிகநீண்ட வரலாற்றையுடையதும், சிரஞ்சீவியானதும் என்னும் பெருமை எமக்குண்டு.

இன்றைய ஈழத்தின் தேவை மலர்ச்சி மிக்க மானுடம் பாடும் யதார்த்தங்களே என்பதைக் கருத்திற்கொண்டே இம்மலரினைத் தொகுத்திருக்கின்றோம். எம்மிடம் இதை ஆக்கி முடித்து விடமுடியும் என்கின்ற இறுமாப்பில்லை; இதை இதை ஆக்க எம்மாலானதைச் செய்வோம் என்கின்ற உணர்ச்சி இருக்கின்றது; அந்த உணர்ச்சிதானே புரட்சியின் வெடிப்பு.

புரட்சியென்பது மாற்றமெனப் பொருள் படுமானால் காலத்திற்கேற்ற நியாயமான மாற்றங்கள் தேவையானவை தானே; தேவைகள் வரையறைகளை' இலக்கணங்களை மீறக்கூடியதாகவும் சிலவேளை அமைந்து விடலாம். இலக்கணங்களை மீற வேண்டும் தான் என்ற ஆவேசம் எங்களிடமில்லை அதேவேளை இலக்கணங்களை மீறக்கூடாது என்ற குறுகிய வட்டமும் எம்மிடமில்லை, அப்படியானால், எமது படைப்புகள் எவ்தவிதமான வார்ப்புக்கள் என்பது தெளிவாகிறது தானே.

கல்வி பெற்றோரின் உயர்மட்டத்தினர் என்று பேசப்படுகின்ற பட்டதாரிகளின் படைப்பான இம்மலர், உயர் மட்டத்தினருக்காக மட்டுமா என்ற மட்டக்கோல்கள், மதிப்பீடுகள் இளந்தென்றலின் இளமையைக் குலைத்துவிடக்கூடாது! இத்தென்றல் மானுடத்துக்காக! மக்களுக்காக! எனவே இனி மெல்லென வீசும் இளந்தென்றலை – இனியராகத்தினை நீங்களும் அனுபவித்தது மகிழலாம்!

இ. ஸ்ரீரஞ்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்றலிலே . . .

## பொருளியல்


அபிவிருத்திப் பொருளியல் ஓர் அறிமுகம் — கலாநிதி, வி. நித்தியானந்தன்
இலங்கையில் தேயிலைக் கைத்தொழிலின் தோற்றமும் வளர்ச்சியும் — சிவப்பிரகாசம் இரத்தினராஜா
இலங்கை மத்திய வங்கியின் அபிவிருத்திப் பணி — த. கோவிந்ததாஸ்
மக்கள் தொகைப் பெருக்கமும் பொருளாதார அபிவிருத்தியும் — செ. காந்தி


## புவியியல்


நகர கிராமிய திட்டமிடலும் மானிட சூழலினைப் பாதுகாத்தலும் — மா. செ. மூக்கையா
பொருளாதார அபிவிருத்தியில் இயற்கை வளங்களின் பங்கு — இ. ஜெயராசா


## விஞ்ஞானம்


மனிதனை மிஞ்சும் விலங்குகளின் நுண்ணறிவு — கலாநிதி, மனோ சபாரட்ணம்


## உளவியல்


கனவெல்லாம் பொருளாமோ — எம். எல். நஜிமுதீன்


## சட்டம்


கண்டிய இராச்சியத்தின் நீதியியல் பற்றிய ஓர் கண்ணோட்டம் — செல்வி யோகேஸ்வரி இராமலிங்கம்


## இலக்கியம்


ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் சதாவதானம் நா. கதிரவேற்பிள்ளையும் — கலாநிதி, பொ. பூலோகசிங்கம்
பழமொழி இலக்கியம் ஓர் அறிமுகம் — இ. பாலசுந்தரம்


## ஆக்க இலக்கியம்


அழகென்ற மகளே நீ வாழ்க — என். சண்முகலிங்கம்
கோபுரம் சரிகிறது — செல்வா
அளவுக்கு மிஞ்சினால் — சங்கையன்
பெருமூச்சு — த. கோபாலசிங்கம்
ஏய் மனிதா — மாசிலாமணி நடேசராசா
நாற்றம் போக்கி நாம் மகிழ்வோம் — நெல்லை நடேசன்
வழிகாட்டும் வள்ளுவம் — செல்வி வசுந்தராதேவி பெரியதம்பி
ஆஷாட பூதிகள் — தரணியூரான்
என்னுயிர்த் தோழனுடன் என் கருத்தைப் பகிர்ந்து — வ. திவ்வியராசா
இரவுகள் தாண்டிய நிகழ்வுகள் — ச. வாசுதேவன்
சங்கச் செய்திகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பொருளியல்:

# ஓர் அறிமுகம்

**கலாநிதி வி. நித்தியானந்தன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர் — பொருளியற்றுறை**

இன்றைய பொருளியல் மாணவனொருவனுக்கு, அபிவிருத்திப் பொருளியல் என்ற ஒரு பாடம் இற்றைக்குச் சுமார் இருபது வருடங்களுக்கு முந்திய பல்கலைக்கழகப் பாட போதனையில் இடம் பெற்றிருக்கவில்லையென்பது ஆச்சரியமாயிருக்கலாம். எனினும் அதுவே உண்மையாகும். 18-ம், 19-ம் நூற்றுண்டின் பொருளியலாளரும், 20-ம் நூற்றுண்டின் ஆரம்ப வருடங்களில் எழுதிக்கொண்டிருந்த அவர்களுடைய வாரிசுகளும் அபிவிருத்திப் பொருளியலில் அக்கறை கொண்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாகப் பொருளியலின் பிரதான பகுதி எனக் கருதப்படும் முதலாளித்துவப் பொருளியல் அம்சங்களிலேயே கவனம் செலுத்திக்கொண்டிருந்தனர். அபிவிருத்தி பற்றி எழுதப்பட்ட பாடநூல்கள் மிகக் குறைவாகவும், நீண்ட காலத்துக்கொருமுறை தோன்றுவனவாகவும் இருந்தன. ஆனல் இன்றைய நிலைமை வேறுபட்டது. அபிவிருத்திப் பொருளியல் என்பது பலரது கவனத்தையும் ஒருங்கே கவர்ந்ததொரு துறையாகக் காணப்படுகின்றது. அதுபற்றி ஏராளமான நூல்கள் வெளியிடப்படுவதுடன், அபிவிருத்தியடைந்த நாடுகளின் பல பல்கலைக்கழகங்களிலும், குறைவிருத்தி நாடுகளின் பல்கலைக்கழகங்களிலும் அபிவிருத்திப் பொருளியல் ஒரு விசேட பாட போதனையாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது இதுமட்டுமன்றிச் சமீப காலத்தில், குறிப்பாக இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பின்பு, அபிவிருத்தியை வேகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பல தேசிய, சர்வதேச அமைப்புக்களும் நிறுவப்பட்டிருக்கின்றன. அபிவிருத்திப் பொருளியல் என்றுல் என்ன, அது ஏன் இதுவரை ஓரளவுக்குப் புறக்கணிக்கப்பட்டிருந்தது, திடீரெனப் பொருளியலாளரதும், உலக நாடுகளினதும் கவனம் அதன்மீது திரும்பியதற்குரிய காரணங்கள் எவை, அதன் சிறப்பம்சங்கள் யாவை என்பவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## I

அபிவிருத்திப் பொருளியல் என்பது குறைவிருத்தி நாடுகளின் குறைவிருத்தி நிலையை விளக்கி, அதனை நீக்குவதற்குக் கையாளப்படுகின்ற அல்லது கையாளப்படக்கூடிய நடவடிக்கைகளை ஆராய்கின்றது. ஆகவே அபிவிருத்திப் பொருளியலானது குறைவிருத்தி நாடுகளின் பொருளியல் எனப் பொதுவாக விளக்கப்படலாம். இவ்வகையில் நோக்குமிடத்து இது அரசியற் பொருளாதாரத்தின் ஒரு கிளையேயாகும். அரசியற் பொருளாதார ஆய்வில் அரசியல் சமூக நிறுவன ரீதியான காரணிகளை முற்றுக ஒதுக்கிவிட முடியாது. அபிவிருத்திப் பொருளியல் ஆய்வில் இததகைய காரணிகளுக்குக் கூடிய முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. ஏனெனில் குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியில் இக்காரணிகள் பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கு கொள்கின்றன. இவற்றை ஒதுக்கிக் குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார அபி விருத்தியை ஆராய்வது முடியாத காரியமெனலாம்.

இவ்வாறாகக் குறைவிருத்தி நாடுகளின் பொருளியலை ஆராய முற்படும் அபிவிருத்திப் பொருளியல், பொருளியலின் புதிதாக உருவெடுத்த கிளைகளில் ஒன்று எனலாம். பொருளிய லாளர் இதன்மீது கொண்ட அக்கறை மிகச் சமீப காலத்தில் ஏற்பட்டதொன்றேயாகும். இதன் கருத்து, இதற்கு முன்பு உலக நாடுகளெதுவும் குறைவிருத்தி நிலையில் இருக்கவில்லை என்பதல்ல. அபிவிருத்திப் பொருளியல் தோன்றுவதற்கு முன்பும்கூட உலகின் ஏறக்குறைய முக்காற் பங்கு நாடுகள் ஏதோ ஒருவகையில் மிக வறிய நிலையிலிருந்தபோதும், இவை 'அபிவிருத்தியடையாத' நாடுகள் எனப் பெயர் சூட்டப்பட்டு முற்றாகப் புறக்கணிக்கப்பட் டிருந்தன. எனினும் இந்நிலைமை தொடர்ந்து நீடித்திருக்கவில்லை. இரண்டாவது உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து பலரது கவனமும் இந்நாடுகள் மீது திரும்பத் தலைப்பட்டது. இதன் விளைவாக இந்நாடுகளை விளக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட 'அபிவிருத்தியடையாத' என்ற மொட்டையான பதம் கைவிடப்பட்டுக் 'குறைவிருத்தி' என்பதிலிருந்து 'உருப்பெறுகின்ற' என்பது வரை பலவேறு விதமான பதங்களும் இவற்றைக் குறிப்பதற்குக் கையாளப்படு கின்றன. எந்த ஒரு பதம் கையாளப்பட்டாலும், இந்நாடுகளின் அபிவிருத்தியில் நம்பிக்கை வைக்கும் பண்பு அவற்றில் தொக்கி நிற்கின்றது. பொருளியலின் 'மறக்கப்பட்ட அம்சங்களுள்' ஒன்று என இதுவரை கருதப்பட்ட குறைவிருத்தி நிலைமை பற்றிப் பொருளியலாளரும் கூடி யளவு கவனம் செலுத்தத் தலைப்பட்டிருக்கின்றனர். குடியேற்ற நாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுபடும் ஒரு செய்முறையுடன் சேர்ந்து சர்வதேச சமூகத்தின் பார்வையும் உலகின் வறிய நாடுகளை நோக்கித் திரும்பியுள்ளது. இதனுடைய ஒரு விளைவே அபிவிருத்திப் பொருளியலின் எழுச்சி எனலாம்.

ஆனால் இவ்வாறாக உலக நாடுகளின் கவனம் ஓரளவு சடுதியான முறையில் ஏன் உலகின் வறிய நாடுகளின்மீது திரும்ப வேண்டுமென்பதற்கும், அதனையொட்டிப் பொருளிய லாளர் குறைவிருத்திப் பிரச்சனைகளை ஏன் ஆராயவேண்டிய அவசியம் ஏற்பட்டதென்பதற் குரிய காரணங்கள் ஆராயப்பட வேண்டும். இக்காரணிகள் மூன்று சக்திகளின் பின்னணியில் உருப்பெறுவதைக் காணமுடிகின்றது.

இதில் முதலாவதாகக் குறிப்பிடக்கூடியது குறைவிருத்தி நாடுகளின் அரசியல் நிலை மையில் ஏற்பட்ட மாற்றமாகும். இரண்டாவது உலக மகாயுத்தத்தையடுத்து வந்த வருடங் களில் இந்நாடுகள் பலவும் குடியேற்ற நாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திர அரசு களாக உருப்பெறவே, அவை தமது அரசியல் அந்தஸ்தில் மாத்திரமன்றிப் பொருளாதார நிலை யிலும் பெருமளவு ஆர்வம் காட்டின. அரசியற் பலத்துக்கு அடிப்படை பொருளாதாரப் பலமே என்பதையும் அவை உணர்ந்திருந்தன. இதனால் இந்நாடுகள் இயல்பாகவே தமது விரைந்த பொருளாதார அபிவிருத்திக்கு ஆவன செய்வதில் ஆர்வமுடையவையாயிருந்தன. அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் குறைவிருத்தி நாடுகள் கொண்டிருந்த தொடர்பு மேன் மேலும் அதிகரித்துச் சென்றவிடத்து, இரு சாராருக்குமிடையிலான ஏற்றத்தாழ்வுகள், விரைந்த அபிவிருத்திக்கான அவசியத்தைக் குறைவிருத்தி நாடுகளுக்குத் தொடர்ந்து உணர்த் திக்கொண்டிருந்தன. இதனால் இந்நாடுகளின் பொருளியலறிஞர் பலரும் தத்தம் நாடுகளின் அபிவிருத்தியைத் தடுத்து வைத்திருக்கும் காரணிகளைப் பகுத்தறிய முற்பட்டனர். அபிவிருத்தி யடைந்த நாடுகளின் தலா வருமானத்தை விடத் தமது நாட்டின் தலா வருமானம் மிகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவாக இருப்பதையும், அதன் அடிப்படையில் மக்களுடைய வாழ்க்கைத்தரம் கீழ்நிலையிலிருப்பதையும் கண்ட இவர்கள், அதற்குரிய காரணங்களை ஆராய்வதுடன்மட்டும் நின்றுவிடாது. அதற்கான தீர்வுகளையும் எடுத்துக்கூற முன்வந்தனர். இத்தகைய இவர்களுடைய ஆய்வுகளின் தொடுப்பே அபிவிருத்திப் பொருளியல் எனலாம். தமது நாடுகளின் பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்துவதற்குப் பல புதிய பொருளாதார நுட்பங்களை இவர்கள் பயன்படுத்த முன்வந்ததுடன், வெளிநாடுகளிலிருந்து (குறிப்பாக அபிவிருத்தியடைந்த நாடுகளிடமிருந்து) கிடைத்த உதவியைப் பயன்படுத்துவதையும் ஊக்குவித்தனர். ஆகவே குறைவிருத்தி நாடுகள் பலவும் சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து, அபிவிருத்திப் பொருளியல் தோன்றுவது பெருமளவுக்குத் தவிர்க்க முடியாததாயிருந்ததெனலாம். இரண்டாவதாக அபிவிருத்தியடைந்த நாடுகள் பலவும், அதுவும் குறிப்பாக முதலாளித்துவம், சமவுடமை என இரு முகாம்களாகப் பிரிந்திருந்த உலக வல்லரசுகள், தமது அரசியல் அபிலாஷைகளின் அடிப்படையில், அவற்றைப் பேணும் முகமாக உலகின் வறிய நாடுகளுடனான அரசியல், பொருளாதாரத் தொடர்புகளைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. புதிதாக உருவாகிய சுதந்திர அரசுகள், குறைந்தது வெளிப்படையாக ஆவது, பெருமளவுக்கு உலக வல்லரசுகள் எதையும் சாராத ஒரு நிலை காணப்பட்டது. வல்லரசுகளிடையே நிலவிய தண்போர், இப்புதிய நாடுகளின் ஆதரவை வல்லரசுகள் வேண்டிநிற்கும் கட்டாய நிலையை உருவாக்கியிருந்தது. இந்த ஆதரவை அவை பெறவேண்டுமாயின், இந்நாடுகளின் தேசியவாதத்தைப் புரிந்துகொண்டு, அவற்றின் பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்க்கும் வகையில் உதவி புரியவேண்டியது அவசியமாயிருந்தது. இதனுல் இவ்வல்லரசுகளே, ஒருகாலத்தில் தமது குடியேற்ற நாடுகளாயிருந்த இந்நாடுகளின் பொருளாதாரப் பிரச்சனைகளை அலசி ஆராய்வதிலும், அவற்றுக்கு வேண்டிய உதவி புரிவதிலும் புதியதொரு உற்சாகத்தைக் காட்டிநின்றன. இந்த நோக்குடன் பொதுநல அமைப்புப் போன்ற புதிய பல அமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டன. இந்த வகையிலேயே குறைவிருத்தி நாடுகள் 'மூன்ருவது மண்டல' நாடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன. அதாவது இவை உலகின் முக்கிய பொருளாதார அமைப்புக்களாகிய முதலாளித்துவம், சமவுடமை என்ற இரண்டையும் சாராமல், தனித்தன்மை வாய்ந்தனவாக மூன்ருவது மண்டலமாக விளங்குகின்றன. இம் மூன்ருவது மண்டல நாடுகள் பொருளாதார ரீதியிலும், சமூக ரீதியிலும், ஏனைய இரு மண்டல நாடுகளையும் விடப் பின்தங்கியவையாகக் காணப்படுகின்றன. இவ்வாறு அரசியல் நோக்குடன் குறைவிருத்தி நாடுகளுக்கு உதவி வழங்கவும், அவற்றின் பிரச்சனைகளைப் பகுத்தறியவும் அபிவிருத்தியடைந்த நாடுகள் முற்படுமிடத்துப் பல குறைவிருத்தி நாடுகள் வல்லரசுகளின் அரசியற் போர்க்களங்களாகவும் மாறிவிட்டிருக்கின்றன. எனினும் இது குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்தியில் தவிர்க்கமுடியாத வகையில் ஏற்பட்டிருக்கும் ஒரு பக்கவிளைவு என்றே இன்று கருதப்படுகின்றது. எவ்வாருயினும், வறிய நாடுகளின் ஆதரவை அபிவிருத்தியடைந்த நாடுகளாகிய உலக வல்லரசுகள் பெற முற்பட்டமை அபிவிருத்திப் பொருளியலின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி புரிந்துள்ளதென்பதை மறுக்க முடியாது.

மூன்ருவதாகக் கல்வியின் மரபுவழியும் அபிவிருத்திப் பொருளியல் ஒரு தனி இயலாக உருப்பெறுவதைத் தவிர்க்க முடியாததாக்கியிருந்ததெனலாம். மனிதனை எதிர்நோக்கும் பல வேறுபட்ட பிரச்சனைகளையும் பகுத்து ஆராய்ந்து, அவற்றிற்கான தீர்வுகளைப் பெற்று அவனுடைய வாழ்க்கையைச் சுலபப்படுத்துவதே கல்வியின் நோக்கமாகும். ஆகவே இன்று உலகின் பெரும்பகுதி நாடுகளைப் பீடித்திருக்கும் வறுமை நிலையைப் புறக்கணித்து, அவற்றின் பிரச்சனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பொறுத்துப் பாராமுகமாயிருப்பது சிறந்த கல்வி மரபாக மாட்டாது. இதனுலேயே உலக நாடுகளிடையிலான பொருளாதார அபிவிருத்தியிற் காணப்படும் பெரும் வேறுபாட்டை அறிந்து அபிவிருத்தியடைந்த நாடுகளைப்போலக் குறைவிருத்தி நாடுகள் ஏன் முன்னேற முடியவில்லை யென்பதற்குரிய காரணங்களை அறியவேண்டியது அவசியமாகின்றது. சுருக்கமாகக் கூறின் இந் நாடுகளில் நிலவுகின்ற வறுமையின் தன்மையையும், அதனைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளையும் ஆராய்வது அத்தியாவசியமாகின்றது. இதனையே அபிவிருத்திப் பொருளியல் செய்கின்றது எனலாம். தவிர இப்பிரச்சனைகளைத் தீர்ப்பது ஓரளவு அவசரமானதாகவும் இருந்தது. ஏனெனில் இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பின்பு உலக சமாதானத்திற்கான சீர்குலைவு இந்த வறிய நாடுகளினின்றும் எழலாம் என்றதொரு பொதுவான பயமும் நிலவி வந்துள்ளது. உலக வல்லரசுகளின் தலையீட்டின் விளைவாகவோ அல்லது அவ்வாறில்லாமலோ பல சர்வதேசக் கொந்தளிப்புகளுக்கு மையமாக இந்நாடுகள் விளங்கி வந்துள்ளன. ஆகவே சமாதானத்தைப் பாதுகாத்து, அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது அபிவிருத்தியைப் பேணவேண்டுமாயின் குறை விருத்தி நாடுகளின் பிரச்சனைகளை ஆய்ந்தறிவதுடன் அவற்றைத் தீர்ப்பதிலும் உதவி புரிய வேண்டுமென்பதை இவை உணர்ந்து கொண்டன. இந்த உணர்வு குறைவிருத்தி நாடுகள் பற்றிய ஆய்வுக்கு ஒரு முக்கிய தூண்டுகோலாயிருந்ததென்பதிற் சந்தேகமில்லை.

## II

இவ்வாருக அபிவிருத்திப் பொருளியல் மேற்கூறிய காரணங்களினுல் ஓரளவு சடுதி யான முறையிலே தோன்றியதெனக் கூறியபோதும் கூட, இன்னும் சிறிது நுணுக்கமாக இதனை ஆராய்ந்து பார்ப்பின், வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றிற் பொருளியலாளர் காட்டிய ஆர்வம் முற்றும் புதியதொன்றெனக் கூறுவதை விடப் புதுப்பிக்கப்பட்டதொன்றெனக் கூறுவதே கூடி யளவு பொருத்தமுடையதாகும். ஏனெனில் மக்களதும், நாடுகளதும் லௌகீக நலன்களை ஆராய்வது எப்போதுமே பொருளியல் ஆசிரியரின் ஒரு மரபாக இருந்து வந்துள்ளது. இவ்வகை யில் நோக்குமிடத்துப் பொருளியலின் தந்தை என வர்ணிக்கப்படும் அடம் ஸ்மித் அவர்களே முதலாவது அபிவிருத்திப் பொருளியல்வாதி எனவும் கூறிக்கொள்ளலாம். இவரைத் தொடர்ந்து வந்த றிக்காடோ, மால்தஸ், மில், மாக்ஸ் போன்ற எல்லாப் பழம்பொருளியலாளரும் பொரு ளியல் முன்னேற்றத்துக்கான காரணங்களையும், அதன் விளைவுகளையுமே விரிவாக ஆராய்ந் தனர். அபிவிருத்தியின் வேறுபட்ட அம்சங்கள் பொறுத்து அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் மாறுபட்டவையாயிருந்த போதும், அவர்கள் அனைவரும் ஆராய்ந்த விடயம் ஒன்றுகவே இருந்தது.

அத்துடன் இன்று குறைவிருத்தி நாடுகளின் பொருளியலிற் காட்டப்படும் அக்கறையும் அன்று மேற்கு நாடுகளின் பொருளியலிற் காட்டப்பட்ட ஆர்வமும் பெருமளவுக்கு இயல்பான அம்சங்கள் என்றே கூறலாம். ஏனெனில் இவை அவ்வக் காலப் பகுதிகளில் முன்னணிக்கு வந்த விடயங்களின் ஆய்வாகவே காணப்படுகின்றது. உதாரணமாகப் பிரித்தானியாவின் கைத்தொழிற் புரட்சியும், அதன் மூலம் அது அடைந்த பொருளாதார முன்னேற்றமும் அக்கால முக்கிய நிகழ்ச்சிகளாயிருந்தன. பிரித்தானியாவின் முன்னேற்றத்தின் அடிப்படையில் ஏனைய மேற்கத் திய நாடுகள் வளர்ச்சியடைந்தமையும் பொருளியலாளரை வெகுவாகக் கவர்ந்திருந்தது. இத ஞல் இவர்களுடைய சிந்தனைகளும் இயல்பாகவே இவற்றைச் சுற்றி வருபனவாகவே காணப் பட்டன. கைத்தொழிற் புரட்சி ஏற்பட்டதற்கான காரணங்கள். அது வளர்ச்சியடைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற முறைமை, அதன் மூலம் ஏற்பட்ட விளைவுகள் போன்ற இன்னோரன்ன அம்சங்களை இவர்கள் ஆராய முற்பட்டிருந்தனர். இதன் ஊடாக முதலாளித்துவப் பொருளாதாரமொன்றின் பலவேறு தன்மைகளும் விளக்கப்பட்டன எனலாம். அன்று கைத்தொழிற் புரட்சி வகித்த அதே இடத்தை இன்று உலகின் பெரும்பகுதி நாடுகளின் வறுமையும், அதற்குக் காரணமாயிருக்கும் குறைவிருத்தி நிலையும் வகிக்கின்றதெனலாம். இதனால் இயல்பாகவே பொருளியலாளரின் கவனம் இப்பிரச்சனைகளின் பாற் திரும்பியுள்ளது. ஆகவே இந்நாடுகளின் பிரச்சனைகளையும், அவற்றிற்கான தீர்வுகளையும் இவர்கள் ஆராய முற்பட்டுள்ளனர். முடிவாகக் கூறுமிடத்துப், பொருளியலாளர் பொருளியலை நோக்கும் அடிப்படை வேறுபாடில்லை என்பதையே இங்கு வலியுறுத்துகின்றோம். நாளாந்த வாழ்க்கையில் சாதாரண மக்களின் கவனத்தை ஈர்கின்ற பிரச்சனைகளே பொருளியலாளரது கவனத்தையும் ஈர்த்துள்ளன. இவ்வகையில் பொருளியலானது மனிதனது சாதாரண வாழ்க்கையின் நடைமுறைகளைப் பற்றிய இயல் என்ற கருத்தையே அபிவிருத்திப் பொருளியல் ஆய்வும் வலியுறுத்துகின்றதெனலாம்.

மேலும் உலக நாடுகளின் இன்றைய வறுமை நிலை, ஒரு வகையில் பொருளியலாளருக்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாகவும் கருதப்படுகின்றது. 1930-ம் ஆண்டுக் காலப்பகுதியில் உலக நாடுகளை எதிர்நோக்கிய பொருளாதார மந்தம், வேலையின்மை என்பன எவ்வாறு பொருளியலறிஞரின் திறமையைச் சோதித்தனவோ அதே போன்று இன்றைய குறைவிருத்தி நாடுகளின் பிரச்சனை அவர்களது திறமைக்கொரு சவாலாக அமைந்துள்ளதெனலாம். இதனால் இப்பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடிய மார்க்கங்களை அவர்கள் பல்வேறு நுட்பங்களின் மூலம் கண்டறிய முற்பட்டுள்ளனர். இதற்கேற்ப அபிவிருத்தி பற்றிய தமது ஆய்வுக்குத் துணையாகத் தாம் கொண்ட எடுகோள்களையும் அவர்கள் மாற்றியமைக்க முன்வந்துள்ளனர். இதிலேயே பழம் பொருளியல் வாதிகளுக்கும், தற்போதைய அபிவிருத்திப் பொருளியல்வாதிகளுக்குமிடையிலான முக்கிய வேறுபாட்டையும் கண்டறியக் கூடியதாயுள்ளது.

வளர்ச்சிக் கோட்பாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், திட்டமிடலிலும், வளங்களை ஒதுக்குவதிலும் ஏற்பட்டுள்ள சீர்திருத்தம் என்பவற்றின் அடிப்படையில் விரைந்த பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய சில கோட்பாட்டு மாதிரிகளையும், நுட்பங்களையும் இன்றைய அபிவிருத்திப் பொருளியலாளர் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி விகிதத்தை அடைவதற்குத் தேவையான மூலதனத்தைக் கணிப்பீடு செய்வது அபிவிருத்தித் திட்டங்களின் ஒரு முக்கிய பகுதியாக இருந்து வருகின்றது. இதற்கென உள்ளீட்டு வெளியீட்டுப் பாகுபாடு, நேர்க்கோட்டுத் திட்டமிடல், கணிதத் திட்டமிடல் போன்ற புதிய நுட்பங்கள் கையாளப்படுகின்றன. இவ்வகையில் நோக்குமிடத்து, இன்றைய அபிவிருத்திப் பொருளியல்வாதிகள் வளர்ச்சிச் செய்முறையின் முக்கிய காரணிகளைக் கண்டறிவதுடன் மட்டும் திருப்தியடைவதில்லை. அத்துடன் வளங்களின் ஒதுக்கீட்டில் திட்டமிடல் வகிக்கும் பங்கு, அதன் வழி நிலையான வகையிலும் இயக்க ரீதியிலும் இந்த ஒதுக்கீட்டில் ஏற்படக்கூடிய திறமை என்பவற்றிலும் அவர்கள் கூடிய கவனம் செலுத்துகின்றனர். அடிப்படையில் இன்றைய அபிவிருத்திப் பொருளியலாளர் கையாள முற்படும் நுட்பங்கள் அனைத்தும் சந்தைப் பொறிமுறையில் தலையீட்டை வேண்டிநிற்கின்றன. திட்டமிட்ட வகையில் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும்போதுதான் இந்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும். சந்தைப் பொறிமுறையில் அபிவிருத்திக்கான நிபந்தனைகள் தாமாக உருவாகின்றனவென்றால், அபிவிருத்தி திட்டமிடப்படும்போது, அபிவிருத்திக்கான நிபந்தனைகள் முன்கூட்டியே வேண்டப்படுகின்றன என்பது மட்டுமன்றிச் சந்தைப் பொறிமுறையில் வேண்டப்படுவதை விட விரைவாகவும் வேண்டப்படுகின்றன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலிருந்து பழம் பொருளியலாளருக்கும் இன்றைய அபிவிருத்திப் பொருளியலாள ருக்குமிடையிலான வேறுபாடு தெளிவும் பழம் பொருளியலாளர் சந்தைப் பொறிமுறையில் ஏற்படக்கூடிய தலையீடு எதையும் அனுமதிக்கவில்லை. இத்தகைய தலையீடு தேவையற்றதொன் றெனவே அவர்கள் கருதினர். இதனால் சந்தையின் சுய இயக்கத்தைத் தடைப்படுத்தக் கூடிய அம்சங்களை ஆராய்வதற்கு, அல்லது அவற்றைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதக்குக் கூட அவர் கள் முன்வரவில்லை. ஒரு வகையில் அதற்கான அவசியமும் ஏற்பட்டிருக்கவில்லையென்றே கூற லாம். ஆனால் இன்று சந்தைப் பொறிமுறையில் தலையிட வேண்டியதன் அவசியம் எல்லா நாடு களிலும் உணரப்பட்டுள்ளது. திட்டமிடல் மூலம் தான் குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்திச் செய்முறையைத் துரிதப்படுத்தலாமென்பது இன்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சில அபிவிருத்திப் பொருளியல் வாதிகள் இதனை மேலும் விரிவு படுத்திச் சாதன ஒதுக்கீட்டில் சந்தைப் பொறிமுறையைக் கைக்கொள்வது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டுமெனவும் வாதிடு வர். திட்டமிடல் மூலம் சோவியத் ரஷியா அடைந்த பெருமுன்னேற்றத்தையும், அதனை யொட்டி ஏனைய சமவுடைமை நாடுகள் அடைந்துவரும் முன்னேற்றத்தையும் இவர்கள் இதற் குரிய எடுத்துக்காட்டுகளாகக் காட்டுகின்றனர். எனினும் அபிவிருத்தி யடைந்துவரும் நாடு கள் பலவும் முதலாளித்துவ அம்சங்களையும், சமவுடைமை அம்சங்களையும் கொண்ட கலப்புப் பொருளாதாரங்களாகவே காணப்படுகின்றன.

ஆகவே உலக நாடுகள் எதிர்நோக்கிய பிரச்சனைகள் வேறுபட்டுச் சென்றவிடத்துப் பொருளியலும் தனது ஆய்வுமுறையினை வேறுபடுத்தியிருப்பதுடன், ஆய்வின்போது கையாளப் படக்கூடிய நுட்பங்கள் பலவற்றைப் புதிதாகக் கண்டுபிடித்துள்ளது. அல்லது ஏற்கனவே நிலவியவற்றைச் சீர்திருத்தி அமைத்துள்ளது. இவ்வாறு பின்தங்கிய நாடுகளின் அபிவிருத்தியை வேண்டி நிற்குமிடத்து ஏற்கனவே அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் இவற்றுக்குமிடையில் அடிப்படையில் காணப்படக்கூடிய வேறுபாடு என்ன, அபிவிருத்தியடைந்த நாடுகளின் அனு பவத்தைக் குறைவிருத்தி நாடுகள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்பவற்றைக் கட்டுரையின் இறுதிப் பகுதி ஆராய்கின்றது.

## III

இன்றைய குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி மேற்கத்திய நாடு களினால் எதிர்நோக்கப்பட்ட அபிவிருத்திப் பிரச்சனையிலிருந்து ஒரு முக்கிய வகையில் வேறுபட் டுள்ளது. பல மேற்கு நாடுகளில் கைத்தொழிற் புரட்சியானது, அரசியல் ரீதியில் மக்களாட்சி நிறுவப்படுவதற்கு முன்பு ஏற்பட்டிருந்தது. ஆனால் மூன்றாவது மண்டல நாடுகளைப் பொறுத்த வரை நிலைமை இதற்கு எதிர்மாறானதொன்றாகக் காணப்படுகின்றது. கைத்தொழிற் புரட்சிக் காலத்தில் இன்றைய அபிவிருத்தியடைந்த நாடுகளில் நிலவிய அரசியல் சமூக சூழ்நிலைகள் குறைந்த வேதனம், மிகக்குறைந்த வரிகள், உயர்ந்த லாபம் என்பவற்றை அனுமதிக்கக் கூடியவையாயிருந்தன. ஆகவே முதலாளிமார் தமது செல்வத்தை வேண்டிய அளவில் பெருக் கிக்கொண்டு அவற்றை மீண்டும் லாபந்தரக்கூடிய தொழில்களில் முடக்குவதன் மூலம் விரைந்த பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடியதாயிருந்தது. ஆனால் மக்களாட்சியும், தொழிற்சங்கவாதமும் மலர்ந்திருக்கும் இன்றைய சூழ்நிலையில் மூன்றாவது மண்டல நாடுகள் வேதனத்தைத் தாம் விரும்பியபடி குறைத்துக்கொள்வதும், வேண்டிய அளவு லாபம் உழைப் பதும் முடியாத காரியங்களாகும், இந்நிலையில் உயர்ந்த வரிகளின் அடிப்படையில் அரசாங்கமே பல பொருளாதார முயற்சிகளில் ஈடுபடவேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சுயமுயற்சித் தத்துவத்தின் அடிப்படையில் மேற்கத்திய நாடுகள் வளர்ச்சியடைவதற்கு நீண்டதொரு காலப்பகுதி எடுத்தது. குறைவிருத்தி நாடுகள் விரைவாக அபிவிருத்தியடைவதில்லை என்று குற்றம் சாட்டும் பலர் ஐரோப்பா ஒரு சீவனோபாய சமூகத்திலிருந்து பொருளாதார முதிர்ச்சியை அடைவதற்கு ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் சென்றதென்பதை மறந்துவிடுகின்றனர்.

அதுமட்டுமன்றிப் பழம் பொருளியல்வாதிகள் கொண்டிருந்த பல கொள்கைகள் கூட இன்று பொருத்தமற்றவையென நிரூபிக்கப்பட்டுவிட்டன. றிக்காடோ, மால்தஸ், மில் போன்றோர் தெரிவித்தது போலப் பொருளியல் முன்னேற்றமானது இறுதியில் தேக்கநிலையை ஏற்படுத்தும் என்ற பயம் இன்று கருத்தற்றதொன்றாகவே தெரிகின்றது. சனத்தொகை வளர்ச்சியும், குறைந்து செல்லும் விளைவுகளும், றிக்காடோவும், மால்தஸும் கருதியளவுக்குச் சீரான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய அம்சங்களாயிருக்கவில்லை. அதிகரித்துச் செல்லும் உற்பத்தித் திறமை, தலாவருமானம் என்பன சனத்தொகை வளர்ச்சி, விவசாய விரிவாக்கம் என்பவற்றுடன் இயைபுடையதாகவே காணப்படுகின்றன. பழம் அபிவிருத்திப் பொருளியல்வாதிகள் தொழில்நுட்ப முன்னேற்றம், சர்வதேச வர்த்தகம் என்ற இரண்டினதும் பங்கினைக் குறைவான ஒரு நிலையில் வைத்து மதிப்பீடு செய்திருந்தனர் எனலாம். தொழில்நுட்ப முன்னேற்றம் சர்வதேச வர்த்தகம் என்ற இந்த இரு அம்சங்களே பழம் பொருளியல்வாதிகளின் கோட்பாட்டிற் கூறப்பட்ட உண்மைகளைக் குறிப்பாகப் பொய்ப்பிப்பனவாகக் காணப்படுகின்றன. தொழில் நுட்பத்தின் உதவியுடன் இன்றைய குறைவிருத்தி நாடுகள், இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பு அபிவிருத்தியடையத் தொடங்கிய நாடுகளை விடக் கூடிய விரைவாக அபிவிருத்தியடையலாமென்பது தெளிவாகியுள்ளது. தொழில்நுட்ப அறிவின் அளவு, அதனைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு என்பன மிகப் பரந்ததாகும். இதனைப் பயன்படுத்திக் குறைவிருத்தி நாடுகள் அபிவிருத்தியடைய முடியுமென்பதும், பல நாடுகளின் அநுபவ வாயிலாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப அறிவு பயன்படுகின்ற அதே அளவுக்குச் சர்வதேச வர்த்தகம் குறைவிருத்தி நாடுகளுக்கு நன்மை வழங்குவதாகக் கூறமுடியாது. சர்வதேச வர்த்தகத்தின் அடிப்படையிலேயே அபிவிருத்தியடைந்த நாடுகள் பலவும் தமது செல்வத்தின் பெரும் பங்கைச் சேர்த்துக்கொண்டன. ஆனால் இன்று சர்வதேச வர்த்தகமானது பல குறைவிருத்தி நாடுகளுக்குப் பாதகமானதொன்றாகவே காணப்படுகின்றது. வர்த்தக மாறுநுவிகிதம், வியாபார நிலுவை என இந்நாடுகளுக்குப் பாதகமாக அமைந்திருப்பதுடன், வர்த்தகத்தின் மூலம் பெறப்படக் கூடிய நன்மைகளும் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் குறைவிருத்தி நாடுகளுக்கிடையே சமமற்ற முறையில் பங்கிடப்பட்டுள்ளன. ஆனால் சர்வதேச வர்த்தகம் இன்று குறைவிருத்தி நாடுகளுக்கு வேண்டிய பயன் தரவில்லையென்ற காரணத்தினால், சர்வதேச வர்த்தகம் அபிவிருத்திக்கு அவசியமற்றதென்றோ அல்லது பொருளாதார வளர்ச்சிக்கும், வர்த்தகத்துக்குமிடையில் ஒருவித இணைப்பும் இல்லையென்றோ கூறிவிட முடியாது. அதற்குப் பதிலாகச் சர்வதேச வர்த்தகத்தின் பாதகமான தன்மைகளைக் களைந்து மூன்றாவது மண்டல நாடுகளும் அதில் சமமாகப் பங்குபற்றும்படி செய்வதே அபிவிருத்திப் பொருளியலாளரின் முக்கிய கடமையாகின்றது. அதாவது சர்வதேச வர்த்தகத்தின் அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நாடுகளின் மத்தியிற் கூடியளவு வறுமையும், குறைவிருத்தியும் நிலவுவது யாவரும் கண்கூடாகக் கண்டறியக்கூடிய ஒரு விடயமாகும். பொருளாதார ரீதியிலே குறைவிருத்திப் பிர தேசங்களாகக் கருதப்படும் நாடுகளில் ஏறக்குறைய 900 மில்லியன் மக்கள் மிக வறிய நிலையில் வாழ்வதாகக் கருதப்படுகின்றது. இவர்கள், அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாழும் மக்களின் தலா கொள்வனவை விட, இருபத்தைந்து தடவை வரை குறைந்தளவுக்கே உலக வளங்களைக் கொள்வனவு செய்கின்றனர். ஆகவே குறைவிருத்தி நாடுகளின் பொருளாதாரப் பிரச்சனைகளை விளக்குவதிலும், அதற்கான தீர்வுகளை வழங்குவதிலும் உதவி புரியவேண்டியது ஒவ்வொரு பொருளியலாளனதும் கடமையாகும். உலக வங்கிக் குழுவின் தலைவரான றொபேட் மக்னமாரா 1972-ம் ஆண்டில் குறிப்பிட்டது போன்று 'முழுச் சர்வதேச சமூகம் — நாம் அனைவரும் கொள்கை ரீதியில் தரம் வாய்ந்ததும், நிதி ரீதியில் சாத்தியப்படக்கூடியதும், பொதுமக்களது ஆதரவைப் பெறக்கூடியதுமான நடைமுறைப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளுடன் இந்நாடுகளை உடனடியாக அணுகவேண்டும்.' இவ்வகையில் குறைவிருத்திப் பொருளாதாரமொன்றினையே எமக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கும் நாமும் இலங்கைப் பொருளாதாரத்தின் அடிப் படைப் பிரச்சனைகள் என்ன? அவை எவ்வாறு உருவாகின, அவற்றை என்னவகையில் தீர்த்துக் கொள்ளமுடியும் போன்ற இன்னோரன்ன அம்சங்களை ஆராய வேண்டியது அவசியமாகும்.

---

ஆணெல்லாம் கற்பை விட்டுத் தவறு செய்தால்
அப்போது பெண்மையுங் கற் பழிந்தி டாதோ,
நாணற்ற வார்த்தையன்றோ? வீட்டைச் சுட்டால்
நலமான கூரையுந்தான் எரிந்திடாதோ?

— பாரதியார்

## வேண்டும்

மனதி லுறுதி வேண்டும்
வாக்கினி லேயினிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்;
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்.

— பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சார உபகரணங்கள்
வானொலிப் பெட்டிகள்
சாய்ப்புச் சாமான்கள்
மற்றும் பொருட்களை

சில்லறையாகவும் மொத்தமாகவும்
கல்முனையில் பெறக்கூடிய
ஒரே ஒரு ஸ்தாபனம்

**T. M. Mohidean Abdul Cader & Bros**

**34, Main Street,**
**KALMUNAI.**

அழகிய பவுண் – தங்கப் பவுண்
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்

**க. சின்னத்தம்பி பத்தர்**

நகை வியாபாரம்

**47, பிரதான வீதி,**
**மட்டக்களப்பு.**

ஓடர் நகைகள்
குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

இங்கு நகை அடைவு பிடிக்கப்படும்.

**தேவி நகை மாளிகை**

**41, பிரதான வீதி,**
**மட்டக்களப்பு.**

★

அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**DAVI GOLD HOUSE**

**41, Main Street,**
**Batticaloa.**

ஓடர் நகைகள்
குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்

தேசிய லொத்தர்
மஹஜன சம்பத ஏஜென்ட்

**குமாரன் ஸ்ரோர்ஸ்**

**27, திருமலை, வீதி,**
**மட்டக்களப்பு.**

யாழ்ப்பாணம் திறம் சுருட்டு,
சினிமா பாடல் புத்தகங்கள்,
நாவல்கள், சஞ்சிகைகள்,
சாய்ப்புச் சாமான்கள்
இங்கே கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக உலகினிற்கோர் ஏணி

## மக்கள் குரல்

விளம்பர சேவையின் புதிய பாணி

*

**மக்கள் குரல்**

விளம்பர சேவை,

நவீன சந்தை — யாழ்ப்பாணம்



இலங்கைப் பல்கலைக் கழக கொழும்பு வளாகத் தமிழ்ச் சங்கத்திற்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்

↓

உங்களுக்குத் தேவையான பிடவைத் திணிசுகளுக்கு

↓

**OMTEX**

49, Modern Market,
JAFFNA

Head Office:-
BENARES SILK STORES
159, K. K. S. Road
JAFFNA



கவர்ச்சி மிகுந்த உயர்ந்தரக சாறிகளுக்கும் நவீன டிசையின்களில் றெடிமேட் ஆடைகளுக்கும் மற்றும் சகலவிதமான பிடவைகளுக்கும் விஜயம் செய்யுங்கள்

↓

**கணேசானந்தாஸ்**

[சில்க் பலெஸ்]

15, மக்கள் நவீன சந்தை
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Complimnets*

**Messrs. N. A. Varnakulasingam**

General Merchants & Commission Agents

No. 173, Keyzer Street,

COLOMBO - 11

வாழ்த்துக்கள்

குமாரவேல் கம்பனி

217, 5 -ம் குறுக்குத் தெரு,

கொழும்பு - 11

*With the Best Complimnets*

**S. PERIANNA PILLAI & CO.**

228 Keyzer Street,

COLOMBO - 11

சுவையான சாப்பாட்டு வகைகளுக்கு

“ ரஞ்சன் கபே ”

நம். 125, 5-ம் குறுக்குத் தெரு,

கொழும்பு - 11

தொ. பே. இல: 22388

Appropriate Technology Servic
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல உள்ளூர் உற்பத்தி
விற்பனையாளர்

## A. M. K. AGENCY

122, 4th Cross Street,

COLOMBO - 11

உற்பத்தியாளர்களும் நுகர்வாளர்
களும், உவகையுடன் நாடுவது

## S. P. N. & Company

181/185 Keyzer Street,

COLOMBO - 11

விவசாயப் பெருமக்களுக்கு விடுக்கும் நற்செய்தி!

உங்கள் விளைபொருட்களாகிய மிளகாய், வெங்காயம், கிழங்கு
மற்றும் ஏனைய உள்ளூர் உற்பத்திப் பொருட்களையும் மொத்தமாக
நியாயமான விலைக்கு விற்பனை செய்து தருவோம்.

★

## GENERAL TRADING AGENCY

General Merchant & Commission Agency

152, Forth Cross Street, COLOMBO — 11

T'Grams: "Gentrades" T'phone: 29562

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

From

# THIRU CHENTHURAN TRADER

No. 220, 4th Cross Street,

COLOMBO - 11

*Branch:*

SELVAN TRADER
38, Lawson Street
Nuwara Eliya

Phone: 23801

Phone: 433

With Best Compliments

From

# HOTEL SAPPHIRE

WELLAWATTE

Phone: 83306 — 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் விளை பொருட்களை உயர்ந்த விலையில் சந்தைப் படுத்தும் நம்பிக்கையும் நாணயமும் மிக்க உன்னத ஸ்தாபனம்

# வை. செல்வராஜா அன் கோ.

27, 4-ம் குறுக்குத் தெரு,

கொழும்பு—11

தந்தி: 'செல்வாஸ்'

அன்பளிப்பு

# இராஜேஸ்வரி அன் கோ.

91, நொறிஸ் வீதி,

கொழும்பு - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments
From

**CHATHAM TEX**

No. 82, Chatham Street

COLOMBO - 1

Phone: 20852

With Best Compliments
From

**JAYA CHITRA**

**JEWELLERY PALACE**

No. 109, Sea Street

COLOMBO - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

From

LEELA STORES

No. 249, Olcott Mawatta

COLOMBO - 11

With Best Compliments

From

JAYA GEM TEXTILES

No. 95, Main Street

COLOMBO - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தேயிலைக் கைத்தொழிலின் தோற்றமும் வளர்ச்சியும்:

சிவப்பிரகாசம் இரத்தினராஜா

விருத்திக் கல்வி இறுதியாண்டு

பல வருட காலமாக இலங்கையின் அந்நியச் செலவாணியில் பெரும்பங்கினை தேயிலை பெற்றுக் கொடுத்து வந்தது. இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தினை ஏற்றுமதி வருமானத்தின் மூலமோ அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பொருளுக்கான அந்நியச் செலவாணியைப் பெற்றுக் கொடுத்ததன் மூலமோ அல்லது "தேயிலைக்கு இலங்கை" என்ற வகையில் இலங்கையின் பொருளாதாரத்தில் தேயிலை முக்கிய இடத்தினைப் பெற்றது. எனவே தேயிலைக் கைத்தொழிலின் தோற்றத்தினையும் வளர்ச்சியினையும் தோற்றம் வளர்ச்சிக்கான சூழ்நிலை, தேயிலையின் வளர்ச்சி, வளரும் பிரதேசம், பாவனை தேயிலைச் செய்கையில் அரசின் பங்கு என்ற சிறிய தலையங்கங்களின் கீழ் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தோற்றம் :

1850 ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் அரை நூற்றாண்டு காலப்பகுதியாக பெரும் வருமானத்தைப் பெற்றுக் கொடுத்த கோப்பிப் பயிரானது அதற்கேற்பட்ட நோயின் காரணமாகப் படிப்படியாக வீழ்ச்சியுறத் தொடங்கியது. கோப்பிச் செய்கையானது கைவிடப்படவேண்டிய நிலையில் இச் செய்கையின் மூலம் பெறப்பட்ட ஊழியம், பெருமளவு வெளிநாட்டு முதல், நிலம் என்பன பயன்படுத்தப்படாது காணப்பட்டது. இந்நிலையில் கோப்பிக்குப் பதிலாக 1870-ல் சிங்கோனு எனும் பயிர் அறிமுகப் படுத்தப்பட்டது. இதிலிருந்து குயினைன் என்னும் மருந்து மலேரியா நோய்க்காக பெறப்பட்டது. ஆரம்பத்தில் கோப்பியுடன் உப பயிராக விளைவிக்கப்பட்ட இப்பயிர் அதிக வருமானத்தை கொடுப்பதாக அமைந்தது. கோப்பியின் வீழ்ச்சி உற்பத்தியாளர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பயிரினை உற்பத்தி செய்யத் தூண்டியது ஆரம்பத்தில் அதாவது 1875-ம் ஆண்டு காலப்பகுதியில் 500 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டது. 10 வருட காலத்தில் சிங்கோனைப் பயிரின் உற்பத்தி உச்சநிலையை அடைந்தது. இச் சமயம் 39 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் இப்பயிர் பயிரிடப்பட்டது. இக் காலப்பகுதியில் £38,700 பெறுமதியுடைய குயினைன் மருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. இவ்வாறு குயினைனின் நிரம்பல் அதிகரித்தமையைத் தொடர்ந்து கேள்வியானது அதிகரிக்கவில்லை. இதன் கேள்வி நெகிழ்ச்சியற்றதாக இருந்தது. அதாவது ஒரு குறித்த அளவிற்கு மேல் இத்தகைய பொருட்களின் கேள்வி எழுப்பப்படுவதில்லை. இவ்வாறான சூழ்நிலையில் இப்பயிர் குறுகிய காலத்தில் கைவிடப்படவேண்டிய நிலையில் காணப்பட்ட போதும் இன்னும் இதுவேறு பயிர்களுக்கிடையே பயிரிடப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து கோப்பிக்குப் பிரதியீடாக கொக்கோ அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் இது பொருளாதாரத்தின் கோப்பியின் இடத்தையோ சிங்கோனாவின் இடத்தையோ பெறவில்லை. 1878-ல் 300 ஏக்கர்களில் பயிரிடப்பட்ட கொக்கோ 10 வருடங்களில் அதாவது 1888—ல் 1200 ஏக்கர்களாக வளர்ச்சியடைந்தது இவ்வாறான கொக்கோ விலை வீழ்ச்சி இலங்கையில் பரந்த அடிப்படையில் விளைவிக்க முடியாமை குறித்த காலத்திலே பயிரிட முடிந்தமை போன்ற பல்வேறு காரணிகளினால் இப் பயிரையும் கைவிட வேண்டிய நிலைமை எற்பட்டது.

இச்சந்தர்ப்பத்திலேயே தேயிலையானது இப்பெரும் வெற்றிடத்தினை நிரப்பக் கூடியதாக உள்ளதை உற்பத்தியாளர்கள் உணர்ந்தனர். எனவே முன்பொருமுறையும் அறிமுகமில்லாத ''தேயா கம்மலியா'' என்ற இனத்தைச் சேர்ந்த தேயிலைச்செடி இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிலையில் சீன நாட்டுத் தேயிலையானது 1824 லும், அசாம் நாட்டுத் தேயிலை 1839 லும் அறிமுகப்படுத்தப்பட்டது. 1841 ல் வேம்ஸ் சகோதரர்களால் சீன நாட்டுத் தேயிலையை புசல்லாவையில் பரீட்சார்த்திகரமாக பயிரிடப்பட்டது. முதன்முதலாக உற்பத்தி செய்யப்பட்டமையும், இதன் மூலமான அதிக உற்பத்திச் செலவும், இதன் சாதகமற்ற தன்மையும் சீன நாட்டுத் தேயிலையானது இலங்கைக்கு ஏற்றதல்ல என்று அறியப்பட்டது.

இதன் பின்னர் 1867 ல் ஜேம்ஸ் டெய்லர் என்பவரால் அசாம் நாட்டுத் தேயிலை இலங்கையில் பரீட்சிக்கப்பட்டது. இது கூடிய பயனைத் தருவதைக் கண்டனர். எனினும் 1867 ம் 1870 ம் ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் கோப்பியின் ஆதிக்கம் வலுவுடையதாகக் காணப்பட்டது. ஆரம்ப காலத்தில் இது மந்தகதியுடனேயே வளர்ச்சியடைந்தது. பெருமளவு முதலுடன் கோப்பி வீழ்ச்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட நட்டத்தினால் புதிய பயிரான தேயிலையில் முதலீடு செய்ய உற்பத்தியாளர்கள் முன்னிற்கவில்லை. அத்துடன் தேயிலைத் தொழிலானது கோப்பி, சிங்கோனா, கொக்கோ போலல்லாது கூடிய தொழில் நுட்பம், நவீனமய இயந்திரம் என்பன தேவைப்பட்டது. இவற்றை அதிக விலை கொடுத்து உற்பத்தியாளர் வாங்க முன்னிற்காத அதே சமயம் கோப்பித் தோட்டத்தில் பணிபுரிந்த ஊழியர் தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியப் பின் நின்றனர். எனவேதான் ஆரம்ப காலத்தில் மிக மந்தகரமான வேகத்துடனேயே வளர்ச்சியடைந்து சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேயிலே வளர்ச்சிக்கான சுவாத்தியம் :

தேயிலேப் பயிர் ஓர் அயனவலயப் பயிராகும். இதற்குப் பகல் நேரத்தில் வெப்ப நிலையானது 75°F வரையிலும் இருக்கவேண்டும். மழை வீழ்ச்சியானது 80''க்கு மேலாகவும், நிலத்தில் நீரானது வழிந்தோடக் கூடியதாகவும் இருக்கவேண்டும். அதாவது செடியின் வேரைச் சுற்றி நீரானது தேங்கி நிற்றல் கூடாது. ஆழமான, வளமான மண் தேவை. காடுகள் அழிக்கப்பட்டு துப்பரவு செய்யப்பட்ட இடத்தில் செழித்து வளரும். இச்செடி வன்மையான தன்மை வாய்ந்த தோன்றுகையால் வளரும் காலம் நீண்டதாகவும், ஈரமுடையதாகவுமிருப்பின் மாரி கால உறைபனியிலும் சேதமுறமிட்டாது. இது 2000' குறைந்த பகுதியில் தாழ்ந்த நிலத் தேயிலேயாகவும், குறைந்த தரமுடையதாகவும் 2000' – 4000' வரையில் உள்ள பகுதிகளில் மத்திய நிலத் தேயிலேயாகவும், மத்திய தரமுடையதாகவும், 4000' மேலுயர்ந்த உயர்நிலத் தேயிலேயாக, உயர்ந்த தரமுடையதாகவும் வளர்கின்றது. இதனே வளர விட்டால் 20' – 30' வரையிலும் வளரும். ஆனல் தேயிலேக் கொழுந்துகளே இலேசாகக் கொய்வதற்காக 3' - 4' மேல் வளர விடப்படுவதில்லே. தேயிலே வரட்சிக் காலங்களில் தனது இலேப்பரப்பைச் சுருக்கிக் கொள்கிறது. பின்னர் மழை அதிகமான காலத்தில் இலேயைப் பரப்பி செழித்துச் செறிவாக வளரும். இதனேக்கொண்டு தேயிலேக்கு மழை அதிகம் தேவையெனக் கருதப்பட்டது. ஆனல் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட பரிசோதனேகளிலிருந்து தேயிலேச் செடியானது நிலேமைக்கேற்ப தன்னேப் பயன்படுத்துகிறது என்று அறியப்பட்டது. தேயிலே பின்வரும் நோய்களினுல் பாதிக்கப்படக்கூடியது. இதில் 1946 ல் விலிஸ்டர் பிளேட் (Blister Blight) நோயினுலும், 1909 ல் இலே கோ'பினுலும் (Leaf Deacse) 1899 ல் பிறவுண் பிளேட் (Brown Blight) நோயினுலும் இலங்கைத் தேயிலே பாதிக்கப்பட்டது. இதனேவிட சிவப்பு வேர் (Red-Root) கறுப்பு வேர் (Black Root) வெள்ளே வேர் (White Root) வேர் முடிச்சு (Root Knot) போன்ற நோய்களினுலும் பாதிக்கப்படக்கூடிய போதும் இச்செடி ஒரு வன்மையான செடியாகும்

## இலங்கைத் தேயிலேயின் வளர்ச்சியும், வளரும் பகுதியும் :

இவ்வாருன சூழல்கள், கால நிலேகள் என்பன தேயிலேயின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தது. 1873 ல் முதன் முதலாக 23 ருத்தல் தேயிலே இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆரம்ப காலத்தில் ஏற்றுமதியான தேயிலே '' இந்தியத் தேயிலே '' என்ற பெயரிலோ அல்லது அவற்றுடன் கலந்தோ விற்கப்பட்டது. ஆனல் இந்நிலேமை மாறி 1883 ல் இலங்கைத் தேயிலே லண்டன் சந்தையில் தனியாக விற்கப்பட்டது. தேயிலேக்கு ஏற்பட்ட கேள்வி அதிகரிப்பானது உற்பத்தியாளர்களே தேயிலே உற்பத்தியில் ஈடுபடத் தூண்டியது. இது மட்டுமல்லாது கோப்பிக்குப் பதிலாகப் பயிரிடப்பட்ட ஏனேய பயிர்கள் எதிர்பார்த்த பயனேக் கொடுக்கவில்லே. தேயிலே இலங்கையின் பெரும் பகுதியில் பயிரிடக்கூடியதாகவும், அசாம் நாட்டுத் தோட்டங்களில் பெற்ற உற்பத்தியை விடக் கூடிய பயனே அளிப்பதாகவும் இருந்தது. இவ்வாறு கோப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்குப் பதிலாகப் பயிரிடப்பட்ட தேயிலை 1886 ல் கோப்பி பயிரிடப்பட்ட நிலப்பரப்பிலும் கூடியளவில் பயிரிடப்பட்டது. தேயிலையின் தன்மையும் அதற்கேற்ப மண்வளம், மழை வீழ்ச்சி, உயரம் என்பன இலங்கையில் மலைநாட்டில் பெரும் பகுதியில் தேயிலையை பயிரிட வைத்தது. கோப்பியைவிட வேறுபட்ட தன்மைகளைக் கொண்ட தேயிலைச் செடி 2000' குறைந்த பகுதிகளாகிய காலி மாத்தறை போன்ற பிரதேசங்களிலும், களுத்துறையிலும் விளைவிக்கப்பட்டது. இதனைவிட இதற்கு கூடிய உயரத்தில் வளரும் உயர்நிலத் தேயிலை அதிகம் உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வாறு உயர்ந்த ரகமுடைய உயர்நிலத் தேயிலையானது தென் கரையாக மாத்தளை இரத்தினபுரியூடாகவும் பின்னர் மாத்தளை, பதுளை, பெல்மதுளை பிரதேசங்களிலும் விளைவிக்கப்பட்டது. இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பகாலப் பகுதி வரை தேயிலை வளரும் நிலத்தின் பரப்பானது அதிகரித்துச் சென்றது, இலங்கையில் தேயிலை விளையும் நிலத்தின் பரப்பளவு 1933 ன் பின்னர் பெருமளவு மாற்றம் ஏற்படவில்லை. 1955 ல் தேயிலை விளையும் நிலத்தின் பரப்பளவு 617,688 ஏக்கர்களாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டபோதும் 1965 ம் ஆண்டு வரை 594,000 ஏக்கர் நிலப் பரப்பிலேயே விளைவிக்கப்பட்டன.

## உற்பத்தியும், சந்தை பற்றிய நோக்கும் :

ஆரம்பகாலப் பகுதியில் உற்பத்திச் செலவுகள் அதிகமாக இருந்தபோதும் நீண்ட காலத்தில் இலங்கை சர்வதேசச் சந்தையில் தனக்கொரு இடத்தைப் பெற்றுக் கொண்டது. இலங்கைத் தேயிலை கூடிய சந்தையைப்பெற பல காரணங்கள் சாதகமாக அமைந்தன. இலங்கைத் தேயிலையுடன் போட்டியிட்ட சீன நாட்டுத் தேயிலை கூடிய விலை விற்றுக்கொண்டு இருந்த சமயம் தரம் கூடிய, சிறந்த சாயம் கூடிய கறுப்புத்தேயிலை ஐரோப்பிய மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது பணம் படைத்தவர்களிடையே மாத்திரமன்றி சாதாரண தொழிலாளர் வர்க்கத்தினரிடையேயும் தேனீர் அருந்தும் பழக்கம் ஏற்பட்டது. இச்சமயத்திலேயே ஐரோப்பிய மக்கள் அற்ககோல் கலப்பற்ற பாணத்தினை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதையும், அதனை தேயிலை நிரப்பக்கூடியதாகவும் தரங்கூடியதாகவும் ஈடு செய்யக்கூடியதாகவும் காணப்பட்டது. இச் சந்தர்ப்பத்திலேயே தேயிலை வெறும் நாகரீகத்திற்காக மட்டுமன்றி உடலுக்குத் தெம்பு தரும் பாணமாகவும் கருதினர். சீன நாட்டுத் தேயிலையானது, இலங்கைத் தேயிலையை விட விலை கூடுதலாகக் காணப்பட்டாலும் ஒரு ருந்தல் சீனத் தேயிலையில் இருந்து பெறக்கூடிய சாயத்தின் அளவு குறைவாகக் காணப்பட்டது. இலங்கைத் தேயிலையைப் பொறுத்தமட்டில் ஒரு ருத்தல் தேயிலையில் இருந்து 75-200 கோப்பைத் தேனீர் சாயத்தைப் பெறமுடிந்தது. இவ்வாறு இலங்கைத் தேயிலையின் வளர்ச்சி சீன நாட்டுத் தேயிலையின் வளர்ச்சிக்குப் பாதகமாகவும், அழிவுக்குக் காரணமாகவும் அமைந்தது. இன்று கூட சீன நாட்டுத் தேயிலைக்கு அழைக்கப்பட்ட பெயர்களான செச்கோங், பெக்கோஸ் என்பன இலங்கைத் தேயிலைக்குப் பெயரிடப்பட்டு அழைக்கப்படுகிறது. இன்று இலங்கை உலக உற்பத்தியில் ⅓ பங்கு தேயிலையை உற்பத்தி செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூர் நுகர்வு :

உலகப் போரின் முன்னர் உள்ளூர் நுகர்வு 10 மில்லியனாகவும், போரின் பின்னர் 14 மில்லியனாகவும் கூடியது. இன்று வரை உள்ளூர் நுகர்வானது தரங்குறைந்த தூள் தேயிலையாகக் காணப்படுகின்றது. இதனால் ஆரம்பிக்கப்பட்ட தேயிலை பிரச்சார சபையானது இலங்கையின் உள்ளூர் நுகர்வினையும், தேயிலையின் தரத்தினையும், அளவினையும் கூட்டுவதற்கு முனைந்துள்ளது. மொத்த உற்பத்தியில் 5% உள்ளூர் நுகர்வாகும். இது இலங்கையில் தேயிலை உற்பத்தியினை ஊக்குவிக்கமாட்டாது இலங்கையில் வருடத்துக்குரிய தலா நுகர்வானது 2 ருத்தலாகும். இதே சமயம் ஐக்கிய இராச்சியத்தின் வருடத்துக்குரிய தலா நுகர்வு 7 8 ருத்தலையும், அவுஸ்திரேலியா 6·5 ருத்தலையும் கொண்டுள்ளது.

## தேயிலைச் செய்கையில் அரசாங்கத்தின் பங்கு :

ஆரம்ப காலத்தில் அரசாங்கமானது தேயிலை உற்பத்திக்குப் பல வழிகளில் உதவியது. அந்நிய ஊழியத்தைக் கொண்டு வந்தது. இலங்கை அரசாங்கம் 1958 ல் இலங்கை அரசாங்க தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் அளவிடப்பட்ட 50,000 ஏக்கர் காணியை அபிவிருத்தி செய்ய முனைந்தது. ஆரம்ப காலத்தில் முடிக்குரிய காணியாக 1000 ஏக்கர்களை களுத்துறை மாகாணத்தில் பயிர் விளைவிக்க முனைந்தது 1958 ல் காட்டுப் பிரதேசங்களை வெட்டுதல், துப்பரவு செய்தல் என்பவற்றை மேற்கொண்டது. இதன் உற்பத்தியாக 1000 ஏக்கர்களில் 394 ருத்தல் தேயிலை விளைவிக்கப்பட்டது. இதில் உதவியாக 2 ஏக்கர் காணியைத் திருத்துவதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூபா 4000/- கொடுக்கப்பட்டது. அத்துடன் தேயிலையின் தரத்தினையும், கேள்வியையும் கூட்டும் நோக்கமாக திடீர் தேயிலை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் அபிவிருத்தி 1951 ல் ஆரம்பிக்கப்பட்டு 1961 ல் முன்னேற்றமடைந்தது. 1969 ல் இவ்வினத் தேயிலை 3 லட்சத்து 12 ஆயிரம் ருத்தல் ஏற்றுமதி செய்யப்பட்டது. 1967 ல் முடிக்குரிய ஆணைக்குழு, தேயிலை அபிவிருத்திக்காக ஆரம்பிக்கப்பட்டது. இது இலங்கைத் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல், விளை நிலங்களுக்கு உரமிடுதல் போன்றவற்றை சிபார்சு செய்தல் மீள நடுதல் போன்றவை அரசாங்கத்தால் சிபார்சு செய்யப்பட்டது.

1958 ல் எடுக்கப்பட்ட நிலத்துண்டாடல் கட்டுப்படுத்தும் சட்டம், தேயிலையின் தரத்தினை உயர்த்தும் நோக்குடன் தேயிலை ஆராய்ச்சி நிலையம், மண்ணரிப்பைத் தடை செய்தல் நிழல் மரங்களை நடுதல், 1949 ன் தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் 1951 ல் பிரதேசம் பேணுதல் என்ற சட்டங்கள் மூலம் தேயிலை வளர்ச்சிக்கு அரசாங்கம் பல வழிகளில் பணிபுரிந்தது.

## முடிவுரையும், அறிஞர்களால் கொடுக்கப்பட்ட சிபாரிசுகளும் :

இன்றைய நிலையில் தேயிலையின் நிரம்பலானது கேள்விக்கு மேலாகக் காணப்படுகின்றது. ஆனால் தற்காலத்தில் அதிகரித்து வரும் கேள்வியை அதாவது கேள்விக்கு மேலான நிரம்பலைத் தூண்டக்கூடிய நிலைமைகள் காணப்படுகின்றன. இன்று தேயிலையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியினை அதிகரிப்பதை, உற்பத்திச் செலவினை குறைத்துக் கொள்வது பெரும் பிரச்சனையாக அமைந்துள்ளது. இன்று பிரித்தானிய காலனித்துவ நாடுகள் பல இலங்கையுடன் தொகை ரீதியில் போட்டி போட முனைகின்றன. அத்துடன் பலவருட காலமாக பெருமளவு அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொடுத்த போதும் இன்றைய பற்றாக் குறை சென்மதி நிலுவை, அரசாங்கத்தின் புதிய கொள்கைகள், 1956 ல் இலங்கை விஜயம் செய்த ''உலக வங்கிக் குழு'' என்பவற்றின் சிபாரிசுகள் போன்ற காரணிகள் மூலம் இன்று இலங்கையை கைத்தொழிலாக்க நாடாக முனைந்துள்ளன. எனவே கைத்தொழிலாக்கம் இலங்கையில் அதிகரிப்பதன் மூலம் வேலை வாய்ப்பினை மக்களுக்கு அளிப்பதாகவும், விலை கூடிச்செல்லும் கைத்தொழிற் பொருட்களை உள்ளூரிலேயே நுகரக்கூடியதாக அமையும் எனவே இனி இலங்கைத் தேயிலையானது தர ரீதியிலேயே, உலக ரீதியிலேயும் போட்டியிடல் வேண்டும். எனவே உயரம் கூடிய பகுதியில் தேயிலை உற்பத்தி பண்ணப்பட வேண்டும். தாழ்ந்த பகுதியில் தேயிலை உற்பத்தி செய்வது நிறுத்தப்படல் வேண்டும். தொடர்ச்சியான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் வேண்டும். பிரசார சபைகள் மூலம் உள்ளூர் தேயிலை நுகர்வை அதிகரிக்க வேண்டும். வெளிநாடுகளில் பிரசாரம், விளம்பரம் முதலியன செய்தல் வேண்டும். எனவே வருங்கால இலங்கை தொகை ரீதியில் போட்டியிடாது, தர ரீதியாக மட்டுமே போட்டியிட வேண்டும்.

★ ★ ★ ★ ★

## பெண்கள்

நமது சமுதாயப் பண்ணைக்கு
விதை நெல்லைப் போன்றவர்கள்
வருகின்ற தலை முறையை நன்றாகப்
பயிர் செய்ய வேண்டிய வர்கள்
விதை நெல்லே கெட்டுச் சீரழிந்தால்
விளைவு என்ன ஆகும்
நினைக்கவே பயமாக இருக்கிறது.

*(இளந்தென்றல் — 1971-1972 மலரிலிருந்து)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மத்திய வங்கியின் அபிவிருத்திப்பணி

## த. கோவிந்ததாஸ்

பொது நிதியும், வரி விதிப்பும்
( 2-ம் வருடம் )

இன்று உலகின் சம உடைமை நாடுகளை விட மற்றைய விருத்தி அடைந்த, அடைந்து வருகின்ற சகல நாடுகளிலும் மத்திய வங்கி யானது பொருளாதாரத்தில் மையஸ்தா னத்தை வகிக்கின்றது. உலக மத்திய வங்கித் தொழில் வரலாறு 1694 இல் இங்கிலாந்து வங்கியின் ஆரம்பத்துடன் தொடங்குகிறது எனலாம். அடிப்படை நோக்கங்களைப் பொறுத்து மத்திய வங்கிகள் மரபு நீதியா னவை, மரபுரீதியற்றவை என இருவகைப் படுகின்றன. நாணய, பொருளாதார ஸ்தி ரத்தை முக்கிய நோக்கமாகக் கொண்ட இங் கிலாந்து வங்கி மரபுரீதியான மத்திய வங் கிக்குச் சிறந்த உதாரணமாகும். 20-ம் நூற் றூண்டின் ஆரம்பத்திலிருந்து நடுப்பகுதி வரை இலத்தீன் அமெரிக்கா, தென் கீழ் ஆசியா, ஆபிரிக்கா ஆகிய பிரதேசங்களின் குடியேற்ற நாடுகளில் மத்திய வங்கிகள் ஆரம்பிக்கப் பட்டன. இம்மத்திய வங்கிகள் முன்னர் விருத்தியுற்ற நாடுகளில் தோன்றிய மத்திய வங்கிகளிலிருந்து வேறுபட்டு "ஒருபுதிய மத் திய வங்கித்தொழில் எண்ணக்கருவை" அடிப் படையாகக் கொண்டு எழுந்தன. இத்தன்மை குறிப்பாக கடந்த 25 ஆண்டுகளில் விருத்தி அடைந்து வரும் நாடுகளின் மத்திய வங்கித் தொழில் வரலாற்றில் வெளிப்பட்டுள்ளது. இத்தன்மையை அரசாங்கம் பெதுத்துறை நிறுவனங்களுடனும், ஏனைய நிதி, வங்கித் தொழில் நிறுவனங்களுடனும் கொண்டுள்ள தொடர்புகளில் அவதானிக்கலாம். மத்திய வங்கியானது மரபுரீதியான கடமைகளை நிறைவேற்றுவதுடன் நாட்டின் பொருளா தார, சமூகநல அபிவிருத்தியிலும் பங்கு கொள்வதே மேற்குறிப்பிடப்பட்ட புதுத்தன் மையாகும். இத்தன்மையை எமது நாட்டு மத்திய வங்கித்தொழிலின் கடந்த 25 வருட கால வரலாற்றிலும் அவதானிக்கலாம்.

அமெரிக்க கூட்டு ஒதுக்கு வங்கியின் ஆளு நர் சபையைச் சேர்ந்த ஜோன் எக்ஸ்ரரின் விதப்புரையின் பேரில் இலங்கை மத்திய வங்கி, 1949-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட நாணயச் சட்டம் இல. 58 இன் அடிப்படை யில் ஆரம்பிக்கப்பட்டு 1950-ம் ஆண்டு ஆக ஷ்ட் மாதம் 28-ம் தேதி சம்பிரதாய பூர்வ மாக இயங்கத் தொடங்கியது மத்திய வங்கி யின் மரபுரீதியான கடமைகளைக்கூட திருப்தி கரமாக நிறைவேற்றுத நாணயச்சபை முறை யின் குறைபாடுகளைக் களைந்து, சுதந்திர இலங்கையின் நாணய, பொருளாதார உறுதி யைப் பேணவும், அபிவிருத்திக்கு உதவுவதுமே மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டதென்பதை மத்திய வங்கியினை ஆரம்பித்த நாணயச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அதனது நோக்கங்களிலிருந்து அறியலாம்.

**அந்நோக்கங்களாவன :**

i உண்ணாட்டு நாணயப் பெறுமதியை ஸ்திரப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii இலங்கை ரூபாயின் சமப்பெறுமதியை பேணுதலும். அது சர்வதேச நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்கட்கு தடையின்றி உபயோகப்படுத்த லை உறுதிப்படுத்துதல்.

iii உயர்மட்ட உற்பத்தி, வேலைவாய்ப்பு மெய்வருமானம், என்பனவற்றை விருத்தி செய்தலும், பேணுதலும்.

vi உற்பத்தித்திறன் கொண்ட நாட்டின் மூலவளங்களின் பூரண பயன்பாட்டை விருந்திசெய்தலும், ஊக்குதலும்.

இவற்றில் பின்னிரு நோக்கங்களும் அபிவிருத்திசார்ந்தவை என்பது தெளிவு. முன்னிருநோக்கங்களும் நாணய ஸ்திரம்சார்ந்தவை. இவை பெரும்பாலும் இணங்கிச்செல்பவையாகும். அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கு நாணயப், பொருளாதார ஸ்திரம் அவசியம் இதையே பேராசிரியர் எச். ஏ. டி. எஸ். குணசேகரா "விலைகளும் வருவாயும் ஸ்திரமாக அமையுமானல் பொருளாதார நடவடிக்கையில் இணக்கமான முறையில் உயர்ந்து செல்லும் போக்கு காணப்படும்" எனக்குறிப்பிடுகிருர். சிலசமயம் நாணயஸ்திரத்தைப் பேணுதல், அபிவிருத்திக்கு உதவுதல் ஆகிய இருதொழிற்பாடுகளையும் ஒரே நேரத்தில் நிறைவேற்ற முடியாது போகலாம் அப்படியான சந்தர்ப்பத்தில் எது முதன்மை வாய்ந்ததோ அது கவனத்தைப்பெறும். இலங்கை மத்திய வங்கியும் தனது அபிவிருத்தி நோக்கை அடைவதற்கேற்ற வகையில் நாணய வங்கித்தொழிற் கொள்கையும் அமைத்துள்ளது.

கடந்த 25 வருட காலத்தில் நிலவி வந்துள்ள பாதகமான வெளிநாட்டுக்கொடுப்பனவு நிலைமை உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவு என்பவற்றின் மத்தியில் இலங்கை மத்திய வங்கியின் கடமை கடினமாக அமைந்துளது. நாடு சுதந்திரமடைந்த பின்னர் அரசதலையீடு அதிகரித்ததன் விளைவாக அரசதுறை, பொதுத்துறை என ஒன்று உருவாகி வளரத் தொடங்கியது. இப்பொதுத்துறையின்விரிவு மத்திய வங்கியின் பொறுப்புக்களையும், கடமைகளையும் அதிகரித்ததுடன் மத்திய வங்கி, அரசின் நிதிப்பிரதிகர்த்தா, நிதி ஆலோசகர் ஆகிய பணிகளை மேற்கொள்ளவேண்டிய நிலையையும் உருவாக்கியது. மத்திய வங்கியின் உருவாக்கதிற்கு முன்னர் இயங்கிய அந்நிய வங்கிகள் நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் மட்டுமே கவனம் செலுத்தியமையால் புறக்கணிக்கப்பட்டு விருத்திகுன்றிய நிலையிலிருந்த உள்நாட்டு விவசாயத்துறையும், கைத்தொழில் துறையும் மத்திய வங்கியின் விஷேட கவனத்தைப் பெற்றன. இவ்வகையில் மத்திய வங்கியின் அபிவிருத்திப் பணியானது 60-ம் ஆண்டிற்குப் பின்னரே தீவிரமடைந்ததெனலாம்.

இலங்கை வங்கித் தொழிலிற் கடந்த 25 ஆண்டுகாலப் பகுதியில் ஏற்பட்ட முக்கியமான நிலையரீதியான மாற்றம் அல்லது விருத்தி வர்த்தக வங்கித் தொழிலின் விரிவாகும் குறை விருத்தி அம்சங்களில் ஒன்றுன "விருத்தியடையா வங்கித்தொழில்" என்ற அம்சத்தை இது ஓரளவு நீக்கி விருத்திக்கு வழிகோலியுள்ளது. இந்த நிறுவன ரீதியான, அபிவிருத்தி நோக்கிய மாற்றத்தை ஏற்படுத்தியதில் மத்திய வங்கியின் பங்கை "இவ்விருத்திகளின் பின்னணியில் அமைந்த சிந்தனை பெருமளவுக்கு மத்திய வங்கியில் எழுந்ததாகும்" என்ற மத்திய வங்கி ஆளுநரின் கூற்றிலிருந்து அறியலாம். நாட்டின் அபிவிருத்திக்கு மிக அவசியமானவற்றுள் ஒன்று கடனுகும். இலங்கையில் அண்மைக் காலம் வரை பேராசிரியர் எச். ஏ. டி. எஸ். குணசேகரா குறிப்பிடுவது போன்று "கடன் பரவலாக்குவதற்கு வேண்டிய வழிப் படுத்தல் ஊடகம்" இன்மை கடன் அமைப்பின் அடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைச் சிக்கல்களில் ஒன்ருக இருந்துளது. இலங்கையில் கைத்தொழில், விவசாயம் ஆகிய இரு மூலாதாரத்துறைகட்கும் கடன் வசதி கிடைப்பதை அண்மைக்காலம் வரை தடுத்து வந்தகாரணி கடனை வழிப்படுத்து வதற்குவேண்டிய "நிறுவனரீதியான அமைப்பு இன்மையாகும். இந்தக் குறைபாட்டை நீக்கி விவசாயக் கைத்தொழிற்துறைகளில் இறக்கு மதிப்பதிலீட்டை வெற்றிகரமாக மேற் கொள்ளவே மத்திய வங்கியானது மேற் குறிப்பிடப்பட்ட "வர்த்தக வங்கித்தொழில் விரிவை" ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை களில் ஈடுபட்டது.

எமது நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கியமான துறை கிராமியத்துறை என்பது இப்பொழுது நன்கு உணரப்பட்டுள் ளது. நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பகு தியாக விளங்கும் கிராமியத்துறை அபிவிருத் தியில் மத்திய வங்கியின் பங்கு கணிசமானது இன்று கிராமியத்துறையின் கடன் திட்டங் களின் (i) மத்திய வங்கி (ii) இலங்கை வங்கி (iii) கிராமிய வங்கிகள் என்பன பங்கெடுக் கின்றன. இவற்றில் மக்கள் வங்கியினதும், கிராமிய வங்கிகளினதும் பங்குமிக முக்கிய மானதாகும். கூட்டுறவுச் சமஷ்டி வங்கியே முன்னர் கூட்டுறவுத்துறைக்கு கடன் வழங்கி வந்தது. 1955-இல் மத்திய வங்கி மேற் கொண்ட ஆய்வு இவ்வங்கியின் குறைபாடு களை எடுத்துக்காட்டி மக்கள் வங்கி இதற்குப் பதிலாக நிறுவப்பட வேண்டும் என்றும் விதந்துரைத்தது. இதைத் தொடர்ந்தே 1961-இல் கிராமிய உழவனின் தோழனை மக்கள் வங்கி தோன்றியது. இது பின்னர் 1964-இல் கிராமிய வங்கித்திட்டத்தின் கீழ் கூட்டுறவு அமைப்பின் கீழ் கிராமிய வங்கி அமைப்பை உருவாக்கியது. இன்று மக்கள் வங்கி 160 க்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டுள்ளது. இதனுல் ஆரம்பிக்கப்பட்ட கிராமிய வங்கித்திட்டத்தின் கீழ் 300 மேற் பட்ட கிராமிய வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன எனவே சொந்தக்கிளைகள்மூலமாகவும்கூட்டுற வுச் சங்கங்களுடாகவும் (கிராமிய வங்கி இல் லாவிட்டால்) கிராமிய வங்கிகளுடாகவும் மக்கள் வங்கி இன்று கிராமிய விவசாயிகட் கும் ஏனையோருக்கும் கடன் வழங்குகிறது. இத்தகைய மக்கள் வங்கியின் சேவையால் கிராமிய விவசாயியின் நிதிப்பற்ருக்குறை குறைக்கப்பட்டுள்ளது அவர்களிடையே வங் கிப்பழக்கம், சேமிக்கும் பழக்கம் ஏற்பட்டுள் ளது. அத்துடன் தமது சேமிப்பிலிருந்து தமது நிதித்தேவையைப் பூர்த்தி செய்யும் நிலையும் உருவாகியுள்ளது. இவ்வாறு பல வசதிகள் கிராமிய விவசாயிக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்ருல் அதன் பின் னணியில் மத்திய வங்கி உள்ளது என்பதை நாம் மறக்கக்கூடாது. மத்திய வங்கியே மக்கள் வங்கியை ஆரம்பித்தது அத்துடன் மக்கள் வங்கிக்கு இழிவொதுக்குத் தேவை யிலிருந்து விலக்களித்து அதனது கடனுற் றலைக் கூட்டியது. எல்லாவற்றிலும் மேலாக மத்தியவங்கி நேரடியாக தனது கிளைகளுடா கக் கொடுக்கும் கடன்களையும, கிராமிய வங்கிகளுடாகக் கொடுக்கும் கடன்களையும் மறுநிதியீட்டப் செய்வதன் மூலம் கடனைத் திருப்பிக்கொடுப்பதில் ஏற்படும் தாமதம் அதன் தொழிற்பாட்டை பாதிக்காமற் செய்கிறது இவற்றைவிட்டால் மக்கள் வங்கி மட்டுமல்ல, ஏனைய வர்த்தக வங்கிக ளும் விவசாயக் கடன்துறையில் பிரவேசிக்க வழி அமைத்த 1967-ம் ஆண்டின் புதிய விவசாயக் கடன் திட்டத்தையும் மத்திய வங்கியே பின்னணியில் நின்று உருவாக்கி யது. இத்திட்டத்தில் இன்று குறிப்பாக மக் கள் வங்கியும், இலங்கை வங்கியும் பங்கு பற்றுகின்றன. இத்திட்டத்தின் கீழ் இவ் வங்கிகளால் வழங்கப்படும் கடனில் 75% ற்கு மத்திய வங்கி உத்தரவாதம் அளிக்கிறது. இதற்கு 1½% வட்டியை மட்டுமே அறவிடுகி றது. மத்திய வங்கியானது 1972, 1973, 1974 ஆகிய ஆண்டுகளில் முறையே 35,471,000 ரூபா வையும, 17,27,29000 ரூபாவையும், 18,52,25000 ரூபாவையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரவாதப் படுத்தியுள்ளது. உண்மையில் இத்திட்டம் இல்லாவிடின், குறைந்த முதலீடு குறைந்த வருமானம், குறைந்த சேமிப்பு என்ற விஷச்சக்கரத்தில் அகப்படும் கிராமிய விவசாயியை நம்பி எந்த நிறுவனமும் கடன் கொடுக்கத்தயங்கும் எனலாம். ஆனால் பொருளாதார சமூகநல அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட மத்திய வங்கி மேற்குறிப்பிட்ட வகையில் உத்தரவாதம் செய்வதன் மூலம் பொருளாதார விருத்தியை ஏற்படுத்துவதுடன் சமூக நலனையும் உயர்த்துகிறது.

மீளநிதியீட்டம் செய்யும் நடவடிக்கை மூலம் இலங்கை மத்திய வங்கி இலங்கையின் ஏற்றுமதி விவசாயத்துறை வளர்ச்சிக்கும், கைத்தொழில் துறைவளர்ச்சிக்கும் உதவும், நீண்ட காலக் கடன் திட்டங்களிலும் பங்கு பற்றுகிறது. 1964-இல் இதற்கென மத்திய வங்கியின் இலாபங்கள் ஒதுக்குகளைக் கொண்டு "நீண்டகால நடுத்தரக் கடன் நிதியம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்கள் வாக்குறுதிப் பத்திரங்களின் மீது 15 வருட கால முற்பணங்களைப் பெறுகின்றன. ஆசிய அபிவிருத்தி வங்கியாலும், இலங்கை வர்த்தக வங்கிகளாலும் தேயிலைத் தொழிற்சாலை நவீனமயமாக்கல் போன்ற நடவடிக்கைகட்கு வழங்கப்படும் நீண்ட காலக் கடன்களை மத்திய வங்கி மேற்குறிப்பிட்ட நிதியத்திலிருந்து மீளநிதியீட்டம் செய்கின்றது.

பின்வரும் அட்டவணை மத்திய வங்கியின் நீண்ட காலக்கடன் மீளநிதியீட்ட நடவடிக்கையைக்காட்டுகிறது.

| | 1972 | 1973 | 1974 (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| தேயிலைத்தொழிற்சாலை புதுப்பித்தல் | 91 | 113 | 59 |
| கைத்தொழிலும் வேளாண்மையும் | 0·9 | ·625 | 10 |
| சுற்றுலா | — | 8 | — |
| ஏனையவை | 2 | ·375 | 20 |
| மொத்தம் | 102 | 122 | 89 |

இவ்வாறு மீளநிதியீட்டம் செய்வதன் மூலம் கடன் வழங்கும் நிறுவனங்களின் நிதிப்பற்றுக்குறை அவற்றின் தொழிற்பாட்டையும், அதன்மூலம்நாட்டின் அபிவிருத்தியையும் பாதிக்காமல் செய்கிறது மத்திய வங்கி இவற்றைவிட 1974-இல் நாணயச் சட்டத்தைத் திருத்தி வைப்பு நட்டவீட்டுத்திட்டம் ஒன்றை உருவாக்கி அதன் மூலமாகச் சிறுதுறைகட்கு வழங்கப்படும் கடன்களை உத்தரவாதப்படுத்தியும் வருகிறது. இவ்வாறு மீளநிதியீட்டல் மூலமோ, உத்தரவாத மூலமோ செலவழிக்கப்படும் பணம் வீண்போகாது தடுப்பதற்காக அவ்வாறு மீளநிதியீட்டலை வேண்டி நிற்கும் நிறுவனங்கள் எத்திட்டங்கட்குக்கடன் கொடுக்கின்றனவோ அவற்றினை மதிப்பீடு செய்வதற்காக 1974-ம் ஆண்டு மத்திய வங்கி அபிவிருத்தி நிதிப் பகுதி என ஒருபகுதியை உருவாக்கியமையும் குறிப்பிடத்தக்கது.

மத்திய வங்கியானது அதனது ஆரம்பத்திற்கு முன்னர் அந்நிய முயற்சிகளுக்கு உண்ணாட்டு சேமிப்பு நிதி மூலவளங்களைப் பயன்படுத்திய வர்த்தக வங்கித்தொழிலை உண்ணாட்டு அபிவிருத்திநோக்கித் திருப்பி விடுவதிலும் அதன்மூலம் நமது நிதிமூலவளங்கள் நமது நாட்டபிவிருத்திக்கே பயன் படுவதை உறுதிப் படுத்துவதிலும் ஓரளவு வெற்றி கண்டுள்ளது. இவ்விடயத்தில் மத்திய வங்கியின் சிபார்சின் பேரில் 1969 இலும் 70 இலும் முறையே இலங்கை வர்த்தக வங்கியும், ஹட்டன் தேசிய வங்கியும் தேசிய மயமாக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டமை முக்கியமானதாகும். இவற்றை விட உண்ணுட்டுச் சேமிப்பினை ஊக்கி, அதற்கென நிலையரீதியான வசதியை ஏற்படுத்திக் கொடுக்கவென 1971-ல் மத்திய வங்கியின் சிபார்சின் பேரில் தேசிய சேமிப்பு வங்கி உருவாக்கப்பட்டது. இவ்வங்கியிலேயே 1972-ம் ஆண்டின் வருமான உச்சவரம்புச்சட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட பணம் மத்திய வங்கியின் பேரில் இடப்பட்டு அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. அரச ஈட்டு வங்கியும் முதலீட்டுவங்கியும் மத்திய வங்கியின் ஆலோசனையின் பேரில் முதலீட்டுத்தேவையை நிறைவேற்ற நிறுவப்பட்டவையாகும். இவற்றை விட ஊழியர் சேமலாப நிதி நிர்வாகத்தை 1959-ம் ஆண்டிலிருந்தும் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்ட நிர்வாகத்தை அது ஆரம்பிக்கப்பட்ட ஆண்டாகிய 1968-ல் இலிருந்து மத்திய வங்கிபே் நடத்தி வருகிறது.

வர்த்தக வங்கிகட்கு இறுதியாகக் கடன் கொடுக்குந்தாபனமாக விளங்கி அவற்றின் இடருறுததொழிற்பாட்டை உறுதிப்படுத்தி அத்துடன் அவற்றின் ஊடாக நாட்டில் தேவைக்கேற்றபடி பண நிரம்பலைக்கட்டுப்படுத்தும் மத்திய வங்கி கணக்குள்ள அதிகாரங்களைப் பிரயோகித்து நாட்டின் உண்மையான கைத்தொழில், வர்த்தக விவசாய தேவைகளை நிறைவேற்றக் கூடிய வகையில் கடனின் அளவையும் தனமையையும் கட்டுப்படுத்துகிறது. தெரிவுக்கடன் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் எல்லை ஒதுக்குத்தேவை, நுகர்வுக்கடன் கட்டுப்பாடு, மெய்யாதனக் கட்டுப்பாடு ஆகிய வழிமுறைகளைக் கையாண்டு கடந்த காலத்தில் பாதக விளைவுகளை ஏற்படுத்தும் மிதமிஞ்சிய கடனுக்கத்தைக் கட்டுப்படுத்திய அதேவேளையில் அபிவிருத்தி நடபடிக்கைகட்கும் ஊக்கம் கொடுத்துளது.

விருத்தியடைந்துவரும் வங்கித் தொழிலுக்குத் தேவையான ஆளணிகளைப் பயிற்றுவிப்பதற்காக வங்கியாளர் பயிற்சி நிலையத்தை மத்திய வங்கியானது வர்த்தக வங்கிக்கழகத்துடனும் மக்கள் வங்கியுடனும் சேர்ந்து ஆரம்பித்ததும் குறிப்பிடத்தக்கது. அரசின் பங்கும் பிரச்சனைகளும் அதிகரித்து வரும் வேளையில் அதற்கு பொருளாதார நாணயவிடயங்களில் ஆலோசனை கூறும் பணியை மத்தய வங்கி மேற்கொள்ளுகிறது. இதனது ஆராய்ச்சிப்பிரிவினுல் வெளியிடப்படும் வருடாந்த அறிக்கையும் Staff Studies என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நாட்டின் பல்வேறு துறைகளின் நிலையை எடுத்துக்காட்டுவதுடன் அரசாங்கதுறையிலும், தனியார்துறையிலும் "கொள்கை உருவாக்கங்களுக்கு வழிகாட்டியாக உள்ளன. இவ்வகையான ஆராய்ச்சிகளைத்தவிர நுகர்வோர் நிதி அளவீடு, கிராமிய கடனளவீடு, மகாவலி அபிவிருத்திப்பகுதியின் வளர்ச்சி நிலை பற்றிய அளவீடு போன்ற பயனுள்ள அளவீடுகளையும் மேற்கொண்டுள்ளது.

**உசாத்துணை நூர்கள்**


*(I) Central Banking in Emerging Countries by Basu*

*(II) The Co-operative System and Rural Credit in Sri Lanka - Marga Publication - 3*

*(III) From Dependent Currency to Central Banking in Ceylon H. A. D. S. Guna ekara.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(IV) *Centrat Bank Report 1972.*

(V) **மத்திய வங்கி அறிக்கைகள் 1973, 1974**

(VI) (a) *Central Bank its Functions Aims and Autonomy*
(b) *A matter of Fashion*
(c) *Player of Many Parts*

*These three articles by Dr. Wimal Wickremasinghe were published as a series in the C. D. N. of 2nd, 3rd and 4th of Sep. 1975.*

(VII) (a) *25 Years of Central Banking*

(b) *Co-operation with Government Basis of Central Banks Achievements*
*(Published in the CDN of 28th August 1975*

சிந்தனை சந்தேகத்தை வளர்க்கிறது. சந்தேகம் ஆராய்ச்சியை வளர்க்கிறது. ஆராய்ச்சி உண்மையை வளர்க்கிறது. உண்மையோ குருட்டு நம்பிக்கைகளை யெல்லாம் குழிதோண்டிப் புதைத்துவிடுகிறது.

— இங்கர்சால்

★

எனது தீரச் சிறுவர்களே! உத்தமப் புதல்வர்களே!
செயல், செயல், செயல்புரியத் தொடங்குங்கள்.
பெயர், புகழ் முதலிய மடமைகளுக்காக நின்று
திரும்பிப்பார்க்க வேண்டாம்.

— விவேகானந்தர்

★

தவறுகளை ஒத்துக்கொள்ளும் தைரியமும்
அவைகளை விரைவில் திருத்திக்கொள்வதற்கான
பலமும்தான் வெற்றி பெறுவதற்கான சிறந்த அம்சம்

— லெனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Our Hearty Greetings & Best Compliments*

**KRISHNA THEATRE (Trincomalee)**

&

**LAKSHMI THEATRE (Trincomalee)**

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Prop:

V. K. S. BALASUBRAMANIAM
No. 5, Cash Street,
Trincomalee.

With the Best Compliments

from

**Ambigai Kumaran Stores**

Dealers in:

ALUMINIUM, BRASS, ENAMEL WARE & OILMAN GOODS

**No. 234, Gaswork Street, Colombo - 11**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுராதபுரச் சந்தியில்

ஆக!

காமதேனு மட்டுமே

பாடசாலைப் புத்தகங்கள்
பாடசாலை உபகரணங்கள்
அழகு சாதனப் பொருட்டுகள்
மற்றும் பலவற்றையும்

உங்களுக்கு வழங்குகின்றது

**காமதேனு புத்தக நிலையம்**

கண்டி ரோட்,
அனுராதபுரச் சந்தி,
திருகோணமலை.

அன்பளிப்பு

**அ. ஜெகநாதன்**

229, மெயின் வீதி,
கொழும்பு - 11

**கொழும்பு வளாக தமிழ்ச் சங்கம்**
நீடுழி வாழ்க

எமது நல்வாழ்த்துக்கள்

நல்லவை எல்லா அந்தியவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு

# ஸ்ரீ வெங்கடேஸ்வராஸ்

163, மெயின் வீதி,
கொழும்பு - 11

தொலைபேசி : 20634

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளந்தென்றல் சிறக்க இனிய வாழ்த்துக்கள்...

யாழ் நகரில்...

- B. A.
- G. A. Q.
- G. C. E. (A/L), (O/L)

பரீட்சார்த்திகளுக்குச் சிறந்த கல்வி நிலையம்

**BRILLIANT INSTITUTE**

81/1, Sivan Pannai Road,
JAFFNA.

இளந்தென்றல் சிறப்புடன்
வெளிவர வாழ்த்துக்கள்

**ஸ்டார் எலெக்றிக் வெல்டர்ஸ்**
அன்ட்
**ரேணிங் வேக்ஸ்**

233, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7352

வடமராட்சியில் உயர்கல்வி
வகுப்புகள்

G. C. E. A/L } கலை, வர்த்தகம்
G. C. E. O/L }
G. A. Q.
B. A.
ஆகிய வகுப்புக்களும்
N. C. G. E
H. N. C. E. வகுப்புக்களும்

- விசேட ஆங்கில, சிங்கள வகுப்புக்கள்
- மோட்டார் எந்திரவியல்

அனுபவமும் திறமையுமுள்ள
சிறப்புப் பட்டதாரிகளால்
கற்பிக்கப்படுகின்றன.

**MERCURY INSTITUTE**
NELLIADY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

from

**Rajah Litho Printers Ltd.**

$64\frac{1}{3}$, Dam Street, Colombo — 12

Phone: 31370 & 23836

With the Best Compliments

from

**V. N. Thambirajah & Co.**

GENERAL MERCHANTS

No. 26, New Moor Street, Colombo — 12

Telephone: 31122 Cable: " Veentco "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Dealers in all Colours of*

Sequins Beads
Lace Ribbons
Immitation Jewellery Ware
All kinds of Thread
and
Fancy Goods

*Call at :*

**S-E-Q-U-I-N-S**

183, Galle Road, Wellawatte,

COLOMBO - 6

J O Y T E X

For Quality Textiles
STEP IN
AT

**JOY TEX**

240, Galle Road,
Wellawatte, Colombo-6

With the Best Compliments

from

Kala Trading Co.

134, 2nd Cross Street

Colombo

Phone : 25250

**RATNAMS**

HOUSE OF GILWEAR

&

MAYURA GARMENTS

**RATNAMS**

146, 2nd Cross Street,

Colombo-11

Phone : 20406

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Do

your

LATE SHOPPING

at

LAKPAHANA

No. 21, RACECOURSE AVENUE

LAKPAHANA

at

OBEROL SHOPPING ARCADE

LAKPAHANA

BROWNS MILE HANDICRAFTS LTD.

No. 481, DARLEY ROAD, COLOMBO — 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With the best Compliments from**

**Kanna Trading Centre**

29, Dam Street,

COLOMBO-12.

*Phone: 35796*

FOR DELICIOUS
ICE CREAM

**Visit:**

FOLORA FOUNTAIN
Ice Cream Parlour
397, Dockyard Road,

**Trincomalee.**

**With the Best Compliments from**

S M A. AZEEZ
**Son**
SHIP CHANDLER

**Trincomalee.**

**THE MANS SHOP**
**RUPUTED TAILORS**

**General Contractor Agents**

THE MANS SHOP
136, North Coast Road,
**Trincomalee.**

**With the Best Compliments of**

**Mathews & Ice Cold Stores**

487, North Coast Road

**Uppuwelli**

**Trincomalee**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments
from

**P. T. K. Ratnam & Co.**
General Merchants
No. 37, Dam Street,
COLOMBO-12



With the Best Compliments
from

**Sri Iyanar Stores**
31, 33, Wolfendhal Street,
COLOMBO-12.



With the Best Compliments
from

**Selvam's Textiles**
345, Main Street,
COLOMBO-11.

*Phone: 21475*



With the Best Compliments
from

**S. S. Wilson & Co.**
General Merchants
176, 4th Cross Street,
COLOMBO-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தொகைப் பெருக்கமும் பொருளாதார அபிவிருத்தியும்

செ. காந்தி

4ம்-வருடம்

அபிவிருத்திக் கல்வி

உலகின் இன்றைய மக்கள் தொகை அதிகரிப்பின் போக்கும் இச்சனத் தொகைப் பெருக்கத்தினை தாங்கிக் கொள்வதற்கான உலகின் வளங்கள் குறைந்து வருவதும், இலங்கை உட்பட எல்லா உலக நாடுகளினதும் பெரும் பிரச்சினையாகவுள்ளது. ஜே. ஆர். கிக்ஸ் (J. R. Hicks) "இலங்கையின் பொருளாதாரம் பற்றிய பிரச்சனைகள்" என்ற நூலில் தெளிவாகக் கூறுகின்றார். அதாவது அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு வேலை வாய்ப்பு வழங்குவதிலேயே இலங்கையின் அபிவிருத்தி தங்கியுள்ளது. ஆகவே அபிவிருத்தி என்று கூறும் போது வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படல் வேண்டும். வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டுமெனில் தொழில் வாய்ப்புகளை விசாலிக்க வேண்டும். ஆகவே இந்நிலையில் இங்கு அதிக மக்கள் தொகையானது பொருளாதார அபிவிருத்தியைப் பாதிக்கின்றதா? எவ்வளவு தூரம் பாதிக்கின்றது? என்ற கேள்விகள் எழுகின்றன. மக்கள் தொகை மட்டுமன்றி வேறு காரணிகளும் பொருளாதார அபிவிருத்தியைப் பாதிக்கின்றன. இத்தகைய விபரங்களை ஆராய்வதினை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது

மக்கள் தொகை வளர்ச்சிப் போக்குகளும் பொருளாதார அபிவிருத்தியும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையதாகும்' அதாவது இரண்டும் ஒன்றுக்கு மற்றது காரணமாக இருப்பதுடன் ஒன்று மற்றதன் விளைவாகவும் அமைந்திருக்கும். நாட்டில் உருவாக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், இறப்பு, பிறப்பு மக்களின் இடப்பெயர்ச்சி என்பன மக்கள் தொகை வளர்ச்சிப் போக்கினையும், அளவினையும் பாதிக்கின்றன. அதே நேரத்தில் அபிவிருத்திக்கு ஆக்கக் காரணியாக விளங்குகின்ற ஊழியத்தின் பருமன், அதன் செயற்கை, நுகர்வுப் பொருட்கள், மூலதனப் பொருட்கள் போன்றவற்றினைப் பாதிக்கின்றது. ஆகவே இவ்வகையில் மக்கள் தொகையானது பொருளாதார அபிவிருத்தியுடன் நெருங்கிய தொடர்புடையது என்பதும், மக்கள் தொகை மாற்றங்கள் இவ்வகையிலும் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதில் தவறில்லை.

மக்கள் பெருக்கம் பற்றி மல்தஸ் பின்வருமாறு விளக்குகின்றார். அதாவது நாட்டின் உற்பத்தி எண்கணித விரிவில் 1:2:3:4 அதிகரித்துக் கொண்டு செல்கையில் மக்கள் தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானது பெருக்கல் விகுத்தியில் 1:2:4:8:16 அதிகரித்தும் செல்கின்றது. எனவே மக்கள் பெருக்க வினைவு நுகர்வுக்குள்ள வளத்தினை விட அதிகமாக இருக்கின்றது. ஆனால் இவர் இவ்வாறு விளக்கியபோதிலும் அது அபிவிருத்தியடைந்த நாடுகளைப் பொறுத்தவரையில் அதாவது அதன் பொருளியல் வரலாற்றினை எடுத்து நோக்கின் கடந்த இரு தசாப்தங்களில் இங்கிலாந்தில் விவசாய உற்பத்தி சனத் தொகைக்கு மேலாகக் காணப்பட்டது. இதனால் இவரது கொள்கைக்கு ஒரு எதிர்க்காரணியாக அமைந்து விட்டதெனக் கூறலாம். இதேபோல அமெரிக்காவிலும் 1798 ல் மக்கள் தொகை 50 இலட்சமாக இருந்தது. அதற்கு மேலாக உணவு காணப்பட்டது. ஆனால் இன்றைய மக்கள் தொகை 17 கோடியே 70 இலட்சமாகும் ஆனால் இன்றும் மக்கள் தொகைக்கு மேலாக உணவு காணப்படுகின்றது. ஆகவே மல்தசின் கோட்பாட்டினைக் கொண்டு அது அபிவிருத்தியைப் பாதிக்கின்றது எனக் கூற முடியாது

மேலும் கடந்த இரு தசாப்தங்களிலும் விருத்திபெறும் நாடுகளின் வறுமைக்கு முக்கிய காரணம் அபிவிருத்தியடைந்த நாடுகள் தனது கைத்தொழிற் பொருளாதாரத்துக்குத் தேவையான மூலப்பொருட்களை வெகு மலிவாக விருத்திபெறும் நாடுகளிலிருந்து கொண்டு சென்றதாகும். அதே நேரத்தில் கைத்தொழில் உற்பத்திகளை கூடிய விலைக்கு விற்பதன் மூலம் அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கும் நாடுகளை மேன்மேலும் சுரண்டின. ஆனால் விருத்தி பெறும் நாடுகள் தொடர்ந்தும் மூலப்பொருட்களை அளிப்போராகவும், கைத்தொழிற் பொருட்களின் நுகர்வாளராகவும் விளங்கினார்கள். ஆகவே தங்கச்சுழற்சி, சீனிச்சுழற்சி, மாணிக்கக் கல் சுழற்சி, கோப்பி சுழற்சி, றப்பர் சுழற்சி எண்ணெய் சுழற்சி போன்ற பற்பல சுரண்டல்களும் உட்பட்டு நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்பட்டதேயன்றி மக்கள் தொகை மட்டும் தான் அபிவிருத்தியைப் பாதித்தது என்று கூற முடியாது.

வறிய நாடுகளிற் பெருமளவு நிலம் பணக்கார நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான பணப்பயிர்களை உற்பத்தி செய்ய உபயோகிக்கப்பட்டது. அதனால் வறிய நாடுகளிலிருந்து மூலப்பொருட்களை மலிவாகப் பெற்றனர். உற்பத்திகளை விற்பதன் மூலம் செல்வந்த நாடுகள் தொடர்ந்தும் செல்வமாக விளங்கலாயின. அத்துடன் குறை விருத்தி, சேரிகள், வேலையின்மை, வறுமை ஆகியவற்றுக்கு முக்கிய காரணம் மக்கட் பெருக்கமே என்ற கோட்காட்டை வற்புறுத்துவதுடன் அபிவிருத்தி குன்றிய நாடுகளில் தான் மக்கள் தொகைப் பெருக்கம் அதிகம் என்ற நம்பிக்கையையும் வளர்க்கின்றனர். அத்துடன் இங்கே பஞ்சம் அரசியல் அமைதியின்மை போன்றன ஏற்படவும் காரணமாயிருக்கின்றனர் ஆகவே பல கோணங்களிலும் அபிவிருத்தியடையும் நாடுகளை சுரண்டிக் கொண்டிருக்கின்றன.

மேலும் உலக நாடுகளை எடுத்து நோக்குமிடத்து அதில் குறிப்பாக ஆபிரிக்கா, லத்தின் அமெரிக்கா நாடுகளின் வளங்களினது பயன்கள் குறைவாகும். இங்கு குறிப்பிடத்தக்க லட்சம் மக்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்குக் குடிபெயர்வதாகும். குடிப்பெயர்ச்சி கிராமங்களிலிருந்து வேற்று நாடுகள் நோக்கிபும் நடைபெறுவதால், இது அந்நாடுகளின் பொருளாதார, சமூக அபிவிருத்தி குன்றியமையை காரணமாக விளக்கின்றது. இதேபோல 1947-ல் குடியரசான சீனாவில் 50 கோடியிலிருந்து இப்போது 80 கோடியாக உயர்ந்துவிட்டது. இவ்வாறு இங்கு அதிகளவில் மக்கள் தொகை பெருகிய போதிலும் தானிய உற்பத்தி அதிகரித்தது. பட்டினி குறைந்து, வாழ்க்கைத்தரம் ஓரளவு உயர்ந்து, ஒவ்வொருவருக்கும் தொழில் உணவு, உடை என்பதற்கு உத்தரவாதமும் பொது முன்னேற்றமும் ஏற்பட்டது. வேலையற்றோர் இல்லையென்றும் கூறக் கூடியளவுக்கு இருப்பதனால் மக்கள் தொகை மட்டும்தான் அபிவிருத்தியைத் தடை செய்கின்றது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவேயுள்ளது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No

இது மட்டுமல்லாது இன்று மூன்றுவது மண்டல நாடுகளின் மக்கள் தொகையே சுமார் 275 கோடியாகும். இது உலக மக்கள் தொகையில் 75 வீதத்திற்கு மேலாகும். மனிதன் முதற் கட்டத்தில் உற்பத்தியாளனுகவும் இரண்டாவது கட்டத்தில் நுகர்வோனுகவும் விளங்குகின்முன். இந்நிலையில் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளின் வலிமையும், முயற்சியும் மனிதனுலே ஆனது. ஆனுல் பல காலமாக பிற நாட்டினர் ஆசிய. ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் செல்வங்களைத் தம் நாட்டிற்கு எடுத்துச் சென்றனர். அத்துடன் சிலரைக் குடிபெயர்த்தியும், குறிப்பிட்டளவான மக்களையும் கொன்று குவித்தனர். நிலக்கூறுகளையும் வீணுக்கினுர்கள். பின்னர் காலப்போக்கில் விருத்திபெறும் நாடுகளின் மக்கள் தொகை பெருகி வீரப் போராட்டங்களில் ஈடுபட்டே கலாச்சார, பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றமடைந்தார்கள், மேற்கூறியவற்றிலிருந்து அதிக மக்கள் தொகைதான் அபிவிருத்தியைப் பாதிக்கின்றது என்பது பொருத்தமற்ற கருத்து என்பதனை உணரலாம்.

அடுத்து மக்கள் தொகை எவ்வாறு பாதிக்கின்றது என்பதனை நோக்குவோம். உலகில் தொகை பல காரணங்களினுல் பெருகுகின்றது. அதற்கு காலநிலை, சூழ்நிலை, பழம் கருத்துக்களின் செல்வாக்கு என்பன காரணமாகின்றன. ஒரு காலகட்டத்தில் அன்னியர் வருகையின் விளைவாக நாடுகளின் மக்கள் தொகை பெருகிக் கொண்டிருந்தது. அத்தகைய நிலைமை இன்று மாறிவிட்டது. விருத்தி பெறும் நாடுகளில் இறப்பு வீதத்துக்கும், பிறப்பு வீதத்துக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வித்தியாசம் காணப்படுகின்றது. பொதுவாக விருத்தியடையும் நாடுகளில் இறப்பு வீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அவற்றின் வாழ்க்கைத் தர உயர்வும், மருத்துவ முன்னேற்றங்களும் இறப்பு வீதத்தினைப் பெரிதும் குறைத்துள்ளன. அதே நேரத்தில் உலகின் நகரமயமாக்கும் தன்மையும், தேசிய ரீதியில் ஊழியச்சந்தை வளர்ந்தமையும்; இன்று உலகெங்கும் பெண்கள் முன் நிற்பதன் விளைவாகவும், குறிப்பாக அவர்கள் வேலைக்குச் செல்கின்ற தன்மையும் பெண்கள் காலதாமதமாக திருமணம் செய்து கொள்ளும் தன்மையும் சேர்ந்து மக்கள் தொகையின் இறப்பு, பிறப்பு வீதங்களை வீழ்ச்சியடையச் செய்தன எனலாம். உலக மக்கள் தொகைப் பெருக்க வீதத்தினைக் கவனிக்கும் போது சோவியத் குடியரசு 1·0%, சீனு 1·7%, ருமேனியா 1·0%, இலங்கை 1·6% காணப்படுகின்றது. இத்தகைய தன்மையிலும் எவ்வாறு அபிவிருத்தியைப் பாதிக்கின்றது என நோக்குவோம்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை அரசாங்கம் விரைவுபடுத்த முற்படும் நேரத்தில் மக்கள் தொகையின் உயர்ந்த வளர்ச்சி வீதம் நாட்டின் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களின் மீது பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தி விருத்தித் திட்டங்களைப் பாதிக்கும் எனக் கூறப்படுகின்றது. இதன் விளைவாக முதலில் முதலீட்டு விகிதம் பாதிக்கப்படுகின்றது, பொருளாதார விருத்தி என்று கூறும்போது தலா வருமானம் உற்பத்தி என்ற இரண்டு அளவுகோலையும் அதிகரிக்க வேண்டும். இன்று வாழ்க்கைத்தரம் தலாவருமானம் இரண்டும்பொதுவாகக் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. குறிப்பாக ஒரு உதாரணத்தை எடுத்து நோக்கின் வருடா வருடம் மக்கள் தொகை 2% அதிகரிக்கின்றது என வைத்துக்கொண்டு பார்க்கும்போது முதலீட்டு விகிதம் 4:1 எனப் பருமட்ட அடிப்படையில் எடுத்துக்கொள்ளலாம். மக்கள் தொகைக்கு ஈடு கொடுக்கும் நிலையில் மக்கள் வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்க வேண்டுமாயின் தேசிய வருமானத்தில் 8% முடக்கல் வேண்டும். இந்நிலையில் மக்கள் தொகை 3% அதிகரிக்கின்றது எனில் நிலவும் வாழ்க்கைத் தரத்தினை வைத்திருக்க 12% முதலீடு செய்ய வேண்டும். இந்த அடிப்படையில் குறைவிருத்தி நாடுகளில் குறிப்பாக இலங்கையினை நோக்கும்போது இதன் பத்து ஆண்டுத் திட்டத்தில் முன்னர் இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைத் தரத்தினைப் பேண முற்படும் நேரத்திலும், தலா வருமானம் அதிகரித்து அதற்கு ஏற்ப வைத்திருக்க முற்பட்டாலும் அதாவது தேசிய விருத்தியில் 4% அதிகரிப்பு ஏற்பட வேண்டும். இது ஏறக்குறைய வாழ்க்கைத்தரம் 2% உயர்த்த வேண்டுமெனில் 8% என்றடிப்படையில் செய்யவேண்டும். இந்நிலையில் 3% மாக உயர்த்தவேண்டில் குறைந்தது 24% குறையாமல் முதலீடு செய்யவேண்டும். ஆனால் இத்தகைய நிலைமை நடை முறையில் ஏற்படவில்லை. ஏனெனில் மக்கள் தொகை கூடியளவு காணப்படும்போது அதனால் வேலையின்மை, சேமிப்பின்மை, அதிக நுகர்வு என்பன காணப்படுகின்றன. இதனால் முதலீட்டு விகிதம் கூடுதலாக பாதிக்கின்றது.

அடுத்ததாக முதலீட்டுப் பரம்பல் பாதிக்கப்படுகின்றது. அதாவது மக்கள் தொகையதிகரிப்பு காரணமாக கூடியளவு நுகர்வுக் கேள்வியும். அதில் இறக்குமதி கூடுதலாக செய்ய வேண்டியிருப்பதனால் அபிவிருத்தியில் பெரும் பங்கு நுகர்வுக்கு செலவிட வேண்டியிருப்பதனால் அபிவிருத்தி பாதிக்கப்படுகின்றது. குறிப்பாக பிறப்பு விகிதம் நிலையாக இருக்க இறப்பு விதம் சடுதியாக விழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். அத்துடன் குழந்தைகள் தொகை கூடுதலாக காணப்படுவதையும் குறிப்பாக கூற முடியும். இதனை அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் 15 வயதுக்குட்பட்டவர்களின் தொகை அங்கே 22% — 30% இடையில் காணப்பட இலங்கையில் 42% மாக காணப்படுகின்றது. அத்தோடு நாட்டின் அபிவிருத்தித்திட்டங்களில் ஆக்கம் புரிபவர்களான 15 — 64 வயதுக்கு இடைப்பட்டவர்கள் அபிவிருத்தியுற்ற நாடுகளில் 65% மாக இருக்க இலங்கையில் 54% மாக காணப்படுகின்றனர். இவற்றினை நோக்கும்போது 100 உழைப்பவர்கள் மீது 78 க்கு குறையாத பிள்ளைகள் தங்கியுள்ளார்கள் என்பது புள்ளிவிபர அடிப்படையில் தெளிவாக எடுத்துக் காட்டப்படுகின்றது. ஆகவே மக்கள் தொகையில் குழந்தைகளின் சுமை கூடுதலாக காணப்படுவதனால் மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்களில் பெரும்பகுதி புதிய சந்ததியினருக்கு உணவு அளித்தலிலும், கல்வி, மருத்துவ வசதியளித்தலிலுமே செலவிடப்படுகின்றது. இது எந்தளவில் உண்மையென்பதனை இலங்கையின் கடந்த புள்ளிவிபரங்களை நோக்குவதன்மூலம் அறியலாம்.

இலங்கையின் மக்கள் தொகையில் 1970 வரை கல்விக்காக செலவிடப்பட்ட தொகை 600 மில்லியன் ரூபாவாகும். ஆனால் 1966 — 1981 க்கும் இடையில் பாடசாலை செல்லும் மாணவர்களின் தொகை 20% மேல் அதிகரிக்கும் என்றும், பாடசாலை செல்பவர்கள் தொகை 65% மாக உயரும் என்றும் காணப்படுகின்றது. இது மக்கள் தொகையின் வயதமைப்பு, கல்விச் செலவுகள் அபிவிருத்தியில் பெரும் தாக்கமாகவுள்ளது. இதேபோல சுகாதார உணவுகளுக்கான செலவும் தலைக்கு சராசரி 16/- ஆகும். சுகாதார வசதியை நன்கு வைத்திருக்கின்ற அதே நேரத்தில் மக்கள் வசிப்பதற்கு வீட்டுவசதியில்லாமை தேசியப் பிரச்சனைகளில் ஒன்றுகவும் உடனடியாக தீர்க்க முடியாத ஒன்றுகவும் உள்ளது. வருடாவருடம் 300 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாக கூறப்படுகின்றது. சமுகரீதியில் ஏற்படும் செலவுகளும் 1975-ல் 205 மில்லியன் ரூபா என கூறப்படுகின்றது. இவ்வாறு செலவாகும் பணத்தினை மூலதனமாக மாற்ற முடியுமானால் நாடு பெறக்கூடிய பயன் பெருமளவாகும். ஆகவே மக்கள் தொகையின் கூடிய வளர்சசி அதிலும் குழந்தைகளின் கூடிய தாக்கம் விருத்தியைப் பாதிக்கின்றது. அது முதலீட்டுப் பரம்பலைப் பாதிக்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை. உலகெங்கணும் காணப்படும் பெரும் பிரச்சனைகளில் ஒன்று படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பின்மையாகும். மக்கள் தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப வேலைப்படை பெருகும். ஆனால் வேலை வாய்ப்புக்கள் அதேரீதியில் வளர்வதில்லை. ஆகவே வேலையில்லாப்பிரச்சனை வருடாவருடம் வட்டம் போல் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக இலங்கையில் 1968-ம் ஆண்டு அறிக்கையில் ஏறக்குறைய 4% நகரத்தொழிலாளரும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9·6% கிராமப்புறத் தொழிலாளரும் வாரமொன்றிற்கு 20 மணித்தியாலங்களுக்கு குறைவாக வேலை செய்கின்றனர். இது மட்டுமல்லாது இலங்கையில் வேலையில்லாத இளைஞர்களின் விரக்தியினால் புரட்சி ஏற்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ஆகவே சனத்தொகை வளர்ச்சி வீதம் கட்டுப்படுத்தப்பட்டால் கைத்தொழில், விவசாயத் துறைகள் திட்டமிட்ட அபிவிருத்தி மூலம் தன்னிறைவு அடைவது மட்டுமன்றி அதிகரிக்கும் வேலைப்படையினருக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதும் இலகுவாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே இங்கு கூறப்பட்ட சனத்தொகை பொருளாதார அபிவிருத்தியைப் பாதிக்கவில்லை என்பதும், உண்மையில் பாதிக்கின்றது என்ற இரு கருத்துக்களுமே இன்னும் விளக்கமாக ஆராயப்பட முடியும். எனவே அதிக மக்கள் தொகை பிரச்சனை தீர்க்கப்பட பல நடவடிக்கைகள் பின்பற்றப் படுதல் வேண்டும்.

(1) மூலப் பொருட்களைத் தாது நிலையில் ஏற்றுமதி செய்தலை தடை செய்ய வேண்டும்.

(2) சர்வதேச சமன்பாடற்ற பொருளாதார வரவுகளை நீக்க வேண்டும்.

3) சூழலுக்கும், மக்கள் பண்பாட்டிற்கும் ஏற்ற) வாறு தமது பிரச்சனைகளுக்கான, தீர்வுகளுக்கான சுய ஆராய்ச்சிகளை செய்தல் வேண்டும்.

அத்துடன் குறைவிருத்தி நாடுகள் கூடியளவு முதலீடுகளை ஏற்படுத்தி, தலா வருமானத்தை உயர்த்தி அதனை பிழைப்பு மட்டத்திற்கு கீழ் இறங்காமல் பார்த்துக் கொண்டால் அபிவிருத்தி தானுக ஏற்பட முடியும் எனலாம். ஆகவே புதிய சர்வதேச பொருளாதாரக் கோட்பாட்டை ஏற்படுத்துவதுடன், விரைவான அபிவிருத்தியினை ஏற்படுத்தியும், கைத்தொழிற் பொருட்களின் விலை விகிதங்களை நிர்ணயிக்கவும் மக்கள்தொகை வளர்ச்சி வீதம் கவனிக்க வேண்டியது அவசியம் என்பது தெட்டத் தெளிவாகின்றது.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

**ஆன்ம உறுதியில்லாதவனுடைய உள்ளம்
குமுறும் கடலுக்கொப்பாகும்.**

— *பாரதியார்*

**" முயற்சியில்லாத இடத்தில் எதுவும் விளங்குவதில்லை "**

— *லோபாக்கிளீஸ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர கிராமிய திட்டமிடலும் மானிட சூழலினை பாதுகாத்தலும்

# URBAN AND REGIONAL PLANNING AND THE PROTECTION OF HUMAN ENVIRONMENT

மா. செ. மூக்கையா
உதவி விரிவுரையாளர், புவியியற்துறை
கொழும்பு வளாகம்

நவீன உலகின் முக்கிய இரண்டு அம்சங்கள் கைத்தொழிலாக்கமும், நகராக்கமுமாகும். இவை கடந்த சில பத்தாண்டுகளிலும், வரப் போகும் காலப்பகுதிகளிலும் நகர கிராமிய திட்டமிடலையும், மானிட சூழலினை பேணுதலை யும் பெருமளவில் வேண்டிநிற்கின்றன. கைத் தொழில் புரட்சியின் பின்னர் கைத்தொழில்கள் வளர்ந்து நகரங்களை பெருமளவில் உருவாக்கிய போதிலும் உலக ரீதியாகப் பெருமளவில் கைத் தொழிலாக்கமும் நகராக்கமும் இரண்டு உலக யுத்தங்களின் பின்னரேயே விரைவாகின என் பதுதான் மிகப் பொருத்தமானதாகும். 1950ஆம் ஆண்டு உலக மக்கள் தொகையில் 28·18 சத வீதமாக இருந்த நகர மக்கள் அளவு 1960 இல் 33·04 சதவீதமாகவும் 1970-இல் 37.19 சத வீதமாகவும் அதிகரித்துவிட்டது. இந்தப் போக் கின் அடிப்படையில் 2000 வருடத்தில் நகர மக் களின் வீதாச்சாரம் 51·10 சதவீதமாக வளரும் என ஐக்கிய நாடுகள் சபையின் "மக்கள் தொகை ஆய்வு" நிறுவனம் கணிப்பீடுகளை எதிர்மீட்சி செய்துள்ளது. இவ்வாறாக அதிகரிக் கக் கூடிய நகரமக்கள் காரணமாக நெரிசலான நகரங்களும் அவை சார்ந்த, தங்குமிட நகரங் கள் (Dormitory Towns) சேரிகள், வேலை யின்மை, அதிக கைத்தொழிலாக்கம், போக்கு வரத்து நெரிசல், காற்று, நீர் நச்சுப் படுத்தல் போன்றனவும் இன்னும் பல பிரச்சனைகளும் உருவாகலாம். எனவே தான் நாடுகளின் மத் திய அரசுகளும், உள்ளூர் நிருவாக ஆட்சிகளும் பெருமளவில் இப்போது நகரப் பகுதிகளையும் ஏனைய பகுதிகளையும் முறையாக வளர்க்கவும், பின்னர் ஏற்படக் கூடிய பிரச்சனைகளை சமாளிக் கத் தேவையான நடவடிக்கை முறைகளைப் பின் பற்றவும் இப்போதிருந்தே முயல்கின்றன. இந் நடவடிக்கைகளை முறையியலுடன் அணுகும் வழி களே நகர கிராமிய திட்டமிடலும், மானிட சூழ லினை பேணுதலுமாகும். இதில் நாம் நகர கிரா மிய திட்டமிடல் என்பதனை Urban and Regional Planning என ஆங்கிலத்தில் கூறுவோம். 'கிராமிய'' என்ற பதம் Regional என்ற பதத் தினையே விளக்குவதாக அமைகிறது. ஆனால் பிரதேசம் என்ற பதம் பயன் படுத்தப்பட வேண்டிய வேளையில் குறுகிய எல்லையினைக் கொண்ட ''கிராமிய'' என்னும் பதம் பயன்படுத் தப்படுவதன் நோக்கம், நகர, பிரதேச திட்ட மிடல் என்பது நகரப் பிரதேசத்தினை குறித்து விடக்கூடிய தவறு ஏற்பட்டு விடக்கூடாதென் பதற்காகவேயாகும்.

இக்கட்டுரையின் நோக்கம் பின்னர் கூறப் படும் கருத்துக்கள் மூலம் நகர கிராமிய திட்ட மிடலுக்கும் மானிட சூழல் பேணுதலுக்குமிடை யேயான தொடர்பினை விளக்குவதும் நவீன வாழ்க்கையில்இவற்றின்முக்கியத்துவத்தினைவலி யுறுத்துவதாகும் இன்று விருத்தி பெற்ற நாடு களும், விருத்தி பெற்று வரும் நாடுகளும் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிட சூழலில் ஏற்படக்கூடிய பிரச்சனைகளில் பெரும் அக்கறை செலுத்துகின்றன. அத்தகைய பிரச்சனைகளை தீர்க்குமுகமாக பல நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றன. இக் கட்டுரையில் ''திட்டமிடுதல்'' என்றால் என்ன என்பதும், நகர கிராமிய திட்டமிடல் பற்றிய பழங் கருத்துகளும்; புதிய கருத்துக்களும் எவை என்பது பற்றி முதலிற் கூறப்படும். பின்னர் மானிட சூழல் சார்ந்த பிரச்சனைகள் எவை என்றும் அவை விருத்தியுற்ற நாடுகளில் கொண்டுள்ள தோற்றத்தினையும், விருத்தி பெரும் நாடுகளில் கொண்டுள்ள தோற்றத்தினையும்கூறி விருத்தி பெற்றுள்ள நாடுகள் தமது மானிட சூழல் பிரச்சனைகளை தீர்க்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் எவ்வாறு விருத்தி பெரும் நாடுகளை பாதிக்கலாம் என்பதும் விளக்கப்படும். இறுதியாக நாடுகளின் மானிடச் சூழல் சார்ந்த பிரச்சனைகள் எவ்வாறு தீர்க்கப்படலாம் என கருத்தியலாளர் கூறுவனவும் சுருக்கமாக விமர்சிக்கப்படும்.

''திட்டமிடல்'' என்ற பதமானது எதனைக் குறிப்பது என்பது ஓரளவில் சர்ச்சைக்குரியதாகிறது. Planning என்பது திட்டமிடல் என்பதற்கான ஆங்கிலப்பதம் ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியும், அமெரிக்க வெப்ஸ்டரும், ''திட்டம்'' என்ற பெயர்ச் சொல்லிற்கு 'திட்டமிட' 'to Plan' என்ற வினைச் சொல்லுக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை காட்டுகின்றன. குறிப்பாக ''திட்டம்'' என்னும் பெயர்ச் சொல் ஒன்றில் 'ஏதோ ஒன்றினது பௌதிக பிரதி நிதித்துவம்' என்றோ அல்லது ஏதோ ஒன்றினை செய்யும் முறை என்றோதான் அகராதிகள் கூறுகின்றன. முதலாவது கருத்திலான கொழும்பு நகர வீதிகளின் திட்டம் என்பது நிச்சயமாக நான் நாளை மறுநாள் விரிவுரையாற்ற திட்டமிட்டுள்ளேன் என்பதிலிருந்து வேறுபடுவதாகும், ''To plan'' — ''திட்டமிட'' என்னும் வினைச் சொல்லிருந்தே திட்டமிடல், திட்டமிடுபவர், ஆகிய சொற்கள் பிறந்துள்ளன. ''திட்டமிட'' என்னும் பதத்திற்கு ''சில அங்கங்களை ஒழுங்கு படுத்தல்'' 'அடைய வேண்டியவற்றை உணருதல்'' அல்லது மேலெழுந்தவாரியாக ''அடைய யோசித்தல்'' என்பன போன்றதான விளக்கங்களை தரப்படுகின்றன. எவ்வாறுயினும் திட்டமிடுதல் என்பது நிச்சயமாக ஏதோ ஒரு நிலையினை அடைய வேண்டியதனையும், அதற்காக செயல் முறைகளை ஒரு முறையான நிறை யொழுங்கிற்குட் படுத்து வதனையும் குறிப்பதாகவும் கொள்ளலாம். பெரும் பாலான திட்டமிடல் பற்றிய நூல்களும் ஏனையனவும் உண்மையிலேயே ''திட்டமிடல்'' என்பதனை வரையறுக்கையில் திட்டமிடல் எவற்றிற்கானது என்பதனையும் எப்படி திட்டமிடலாம் என்பதனையுமே கூறுகின்றன. ஒழுங்கான வரைவிலக்கணத்தை கூறுவதில்லை.

கைத்தொழில் புரட்சிக்கு முன்னரேயே பல முக்கிய நகரங்கள் தோன்றிவிட்டன. புராதன உரோம் நகரம் 8 இலட்சம் முதல் 12 இலட்சம் வரையிலான மக்களையும், இலண்டன் 2¼ இலட் மக்களையும் கி. மு மூன்றும் நூற்றுண்டளவில் கொண்டிருந்தன. அக்காலத்திலிருந்தே நகர திட்டமிடலும், நாட்டின் ஏனைய பகுதிகளை நிருவாகம், வளர்ச்சி ஆகிய நோக்கங்களுக்காக திட்டமிடுதலும் இருந்து வந்துள்ளமை உண்மைதான். ஆனால் 1920 ஆம் ஆண்டு வரையிருந்த இத்தகைய திட்டமிடலுக்கும் 1920 – 1960 ஆண்டுகளுக்கும் இடைபட்ட கால திட்டமிடல் கருத்துகளுக்கும் 1960 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட திட்டமிடல் பற்றிய கருத்துக்களுக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன.

நவீன நகர-கிராமிய திட்டமிடல் பற்றிய கருத்து பெரிதும் பரப்பியல் சார்ந்ததாகும். 1920 — 1960 ஆம் ஆண்டுக்கிடைப்பட்ட பாரம்பரியமான நகர கிராமிய திட்டமிடல் என்பது பௌதிக திட்டமிடலையே குறிப்பதாகும். படத்தினை (Map) க் கொண்டு திட்டமிடுதல் இதன் அடிப்படையாகும். நுணுக்கமானதும், மிகக் கூடிய விளக்கமானது மான விபரங்களை சேகரித்து படங்களில் காட்டுவதும், பின்னர் அத்தகைய தரவுகளையே கொண்டு விருத்திக்கான மாற்று நடவடிக்கைகளை மீண்டும் படத்தில் அடையாளம் செய்ய முயற்சிப்பதும் மிக முக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியமாக இருந்தது. இவற்றினைக் கொண்டு செய்யும் திட்டமிடலின் விளைவாக, மிக நுணுக்கமானதும், பெரிய அளவு திட்டத்தினை கொண்டதுமான படங்களில் உத்தேசம் செய்யப்பட்ட விருத்திகளினதும், நிலப்பயன் பாடுகளினதும், ஏனைய நடவடிக் கைகளினதும் மிகச் சரியான நிலையம் குறித்து காட்டப்படும். இத்தகைய நுணுக்க விபரப்படங்கள் 1960 ஆம் ஆண்டு காலத்தின் பின்னர் பெரிதும் கண்டிக்கப்பட்டது 1920 ஆம் ஆண்டு முதல் 1960 ஆம் ஆண்டு வரையிலும் நிலவிய சம்பிரதாய திட்டமிடலில் ஒரு நிரையொழுங்கு காணப்பட்டது. அளவீடு அதனை அலசி ஆராய்தல் – திட்டமிடல், என்பன அந்த நிரையொழுங்கின் பட்டியலாகும். முதலில் திட்டமிடுபவர் தான் திட்டமிட தேர்ந்தெடுத்த நகரம் அல்லது பிரதேசத்தினை சார்ந்ததான எல்லாவகையான விபரங்களையும் சேகரிப்பார். இரண்டாவதாக தான் பெற்ற தரவுகள் யாவற்றையும் அலுவலகத்தில் ஆராய்வார். அதன் மூலம் அப்பிரதேசம் வருங்காலத்தில் எத்தகைய முறையில் விருத்தி செயல் முறைகளை பெறவேண்டும் என்பதனை தீர்மானிப்பார். மூன்றுவது நிலையில் இவற்றை அடிப்படையாகக் கொண்டு - திட்டமிடும் தத்துவங்களின் உதவியுடன் திட்டத்தினை உருவாக்குவார்.

''புதிய திட்டமிடல்'' கருத்துக்கள் பெரிதும் இயந்திர மயப்பட்ட திட்டமிடலாகும் (Cybernated Planning). இது சொற்களால் இலகுவில் விளக்கி விட முடியாததாகும். ஏனெனில் இது ஒரு தொடர்ச்சியான வட்ட முறையாகவும், இடையில் பின்திரும்பும் செயல் முறைகளை கொண்டிருப்பதாகவும் இருப்பதால் ஆகும். எனவே இம்முறையினை பாய்ச்சற் கோட்டு படங்கள் மூலமாகவே காட்ட முடிகிறது. ஆனாலும் சிலதேவைகளுக்காக வட்ட அமைப்பை முறித்து, செயல் முறையின் ஆரம்பத்தில் ஒரு பிரதேசத்தில், ''அடைய வேண்டியனவற்றை பற்றிய மாதிரிகளை தோற்றுவித்தலும்'' பின்னர் அங்கே அபிவிருத்திக்கான காரணத்தை அறிந்து கொள்ளுதலும் போன்றவற்றினைக் கொண்டு நிறையொழுங்காக்கலாம். (இந்த செயல்களில் முன்னர் கூறியவாறு திட்ட செயல் முறையின்போது இடையிடையே திருத்திக் கொள்வதும், வரையறைகளை மாற்றிக் கொள்வதும் உண்டு) இந்த முறை பெரிதும் நெகிழ்ச்சியானதாக ஆரம்ப நிலையில் ஏற்படுத்திய மாதிரி திட்டத்தை செயல் முறைகளுக்கும், சூழலுக்கும் ஏற்ப மாற்றி, திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த உதவுகின்றது. எனவே இந்த புதிய முறையினை ஒரு நிறையொழுங்கிற்கு உட்படுத்துதல் சிரமமான காரியமானலும், பின்வருமாறு அதனை ஒழுங்குபடுத்தலாம்.

(1) இலக்குகள் (Goals)
(2) தொடர்பாக தகவல்களை அளித்தல் (Continued Information)
(3) எதிர்மீட்சியும் மாற்று பயன் பாடும் (Projection and Simulation of Alternative Futures)
(4) மறுமதிப்பீடு (Evaluation)
(5) தெரிவு (Choise)
(6) தொடர்பான மேற்பார்வை (Contiਮuous Monitoring)

இத்தகைய நிரலொழுங்கு காணப்பட்டாலும் மூன்றும் நிலையில் ஏற்படக்கூடிய புதிய ஒரு திருப்பம் காரணமாக முதலாம் நிலைக்கு மீண்டும் செல்லக்கூடிய ஒரு தன்மையினை இம்முறையில் காணக்கூடியதாயிருக்கும். இத்தகைய நவீன முறை பற்றிய சிந்தனைக்கு அமெரிக்க வர்த்தக கல்விக்கூடத்தினைச் சார்ந்தவர்களே காரணமாயிருந்தனர். செஸ்டர் பேர்னட் (Chester Bernard) பீட்டர் டக்கர் (Peter-Ducker) ஹேபர்ட் சைமன் (Herbert Simon) என்போர் முக்கியமானவர்களாவர்.

நகர, கிராமிய திட்டமிடலின் முறையியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இதுவரை பார்த்தோம். இம்முறைகளை நாம் எவற்றிற்காகப் பயன்படுத்தலாம், எத்தகைய பிரச்சனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தீர்க்க இவை உதவலாம் என்பது ஓரளவில் பிரயோக திட்டமிடலைச் சார்ந்த தாகும்.

நகர, கிராமிய திட்டமிடலின் தேவை - மானிட சூழலில் ஏற்படும் பிரச்சினைகளாலும் உருவாகின்றது என்றும் கூடச் சுருக்கமாகக் கூறலாம். மானிடச் சூழலில் ஏற்படும் பிரச்சினைகள் எவை என்பதனை நோக்கும்போது அவை நாடுகளின் பொருளாதார விருத்தி நிலைகளுடன் தொடர்புற்றிருப்பதனை அவதானிக்க முடியும்.

அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளின் சூழல் பிரச்சினைகளினிடையே அதிக கைத்தொழிலாக்கம், கூடிய நகராக்கம் என்பனவற்றால் ஏற்படும் " சூழல் நச்சுப்படுதல் " போன்ற கூடிய அபிவிருத்தியால் ஏற்பட்ட பிரச்சனைகள் முக்கியமாகவுள. அத்துடன் சமூகவியல் சார்ந்ததான குடும்ப உறவுகளின் சீர்குலைவுகளும் கூட இச்சூழல் பிரச்சனைகளைச் சார்ந்ததாகும். ஆனால் விருத்தி குறைந்த நாடுகளின் சூழல் பிரச்சனை " வறுமை " பிரச்சனையாகும். வேலையின்மை, வீட்டு வசதியின்மை, சுகாதார வசதியின்மை, கல்வி வளர்ச்சியின்மை, சேரிகள் என்பன பின்னைய நாடுகளின் பிரச்சனை மையங்களாகும். முதலாம் வகை நாடுகளுடைய பிரச்சினை "தரமான வாழ்க்கை" பற்றியதாக அமைய, பின்னையவற்றின் பிரச்சினை "அன்றாட வாழ்க்கை" பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

நகர, கிராமிய திட்டமிடல் மூலம் வளர்ச்சியுற்ற நாடுகளில் மானிட சூழல் பிரச்சினைகளை இன்று தீர்க்க எடுக்கும் நடவடிக்கைகள் மூன்றாக வளர்ச்சி பெறும் நாடுகளில் காணப்படுவதனைவிட வேறானதாக இருப்பதற்குக் காரணம் பிரச்சினைகளின் தன்மை வேறுபட்டிருப்பதாகும். இன்று விருத்திபெற்ற நாடுகளின் சூழல் பிரச்சனைகளைத் தீர்க்க உள்நாட்டு அமைச்சுகள் மாத்திரமன்றி மத்திர அரசின் அதிகாரத்திலிருந்தும் கூட்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அவவாறான நடவடிக்கைகள் விருத்தியுறும் நாடுகளைப் பெருமளவில் பாதிக்கலாம். உதாரணமாக விருத்திபெற்ற நாடுகளின் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள், வர்த்தகம், கடனுதவி தொழில் நுட்பம் என்பனவற்றின் மூலம் எப்படி விருத்திபெறும் நாடுகளைப் பாதிக்கலாம் என்பதனைப் பார்ப்போம்,

வர்த்தகத்தில் செல்வந்த நாடுகள் ஏற்படுத்தும் சூழல் பாதுகாப்பு நடவடிககைகள் வறுமையான நாடுகளை இரு வகைகளில் பாதிக்கலாம். ஒன்று தாம் வறுமையான நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்கள் மீது சுகாதாரம், உணவுச்சக்தி திறன் என்ற அம்சங்களில் கூடிய தரத்தினை அவர்கள் வேண்டி நின்றால் வறுமையான நாடுகள் பாதிக்கப்படலாம். அண்மையில் இலங்கையிலிருந்து இறால், பழச்சாறு என்பன மேற்கு ஜேர்மனி, யப்பான் ஆகிய நாடுகளுக்கு சுகாதார தரக்குறைவு காரணமாக ஏற்றப்படவில்லை. இரண்டாவதாக செல்வந்த நாடுகள் உள்நாட்டிலும் கூட ஒவ்வொரு கைத்தொழில் நிறுவனத்தையுமே காற்று, நீர் என்பன நச்சாக்குதலை தடைசெய்வதற்காக ஏற்படக்கூடிய செலவினங்களை பொறுப்பேற்கச் செய்துள்ளன. அவர்களது உற்பத்திச் செலவினை அதிகரிக்கச் செய்தது. எனவே உற்பத்தியாளர்கள் தமது பொருட்களை விலைப்படுத்த முடியாது எனக் கண்டு, அங்கே இறக்குமதியாகும் பதில் பொருட்கள் மீதான இறக்குமதி வரிச் சலுகைகளை நீக்குமாறு தமது அரசுகளை வேண்டுகின்றனர். இது நீண்ட காலத்தில் வறிய நாடுகளின் வர்த்தகத்தைப் பாதிக்கலாம்.

இரண்டாவதான கடனுதவி மிகவும் சிக்கலான ஒரு பிரச்சனை எப்போதும் செல்வந்த நாடுகள் தமது அரசியல் கொள்கையின் செல்வாக்கிற்குட்பட்டே தமது கடனுதவிகளைக் கொடுப்பதிலும் செயற்படுகின்றனர். சூழல் நச்சுப்படலை நீக்கும் கொள்கையினைக் கொண்ட நாடுகள் தமது கடனுதவிகளையும், அத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளுக்கே அளிக்க முன்வருவன. அது அவர்களுடைய அத்தகைய தேவைக்கான யந்திர சாதனங்கள், இரசாயனங்களை விற்கவும் வாய்ப்பாக இருக்கலாம் அல்லவா? எனவே இலங்கை போன்ற நாடுகள் இப்பிரச்சனையால் ஒரு நிலையில் ''காடுகளைப் பேண கடனுதவி பெறுவது, நெல் பயிரிட கடனுதவி பெறுவதனை விட இலகுவாக இருக்கும்'' என கலாநிதி காமினி கொரியா தனது கட்டுரை ஒன்றில் கூறியுள்ளார்.

மூன்றாவதான தொழில் நுட்ப உதவி பற்றியது. மிகவும் நாசுக்கானது. இப்போது செல்வந்த நாடுகளிலேயே வறிய நாடுகள் பெரிதும் தொழில் நுட்ப உதவி பெற்று வருகின்றன. பெரிய தொழிற்கூடம் அமைப்பதோ, இயந்திரங்களைப் பெறுவதோ யாவும் பெருமளவில் விருத்தி பெற்ற நாடுகளில் இருந்ததாகும். ஆனால் அத்தகைய நாடுகள் இப்போது தமது தொழில் நிறுவனங்கள், எந்த தொழிற்சாலைகளையும் இயந்திரங்களையும் அமைக்கும்போது அவை சூழல் நச்சுப்படலை தவிர்க்கும் இயந்திர சாதனங்களையும் கொண்டதாக அமைய வேண்டுமென கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. இதனால் செலவு 7 முதல் 20 வீதம் வரையில் அதிகரித்துள்ளது. ஆனால் விருத்திபெறும் நாடுகளின் சூழலில் நீர் – காற்று என்பன நச்சுப்படுத்தல் என்பது குறிப்பிடக்கூடிய பிரச்சினையாக வளரவில்லை என்றே கூறவேண்டும் ஆனாலும் அவர்கள் ஒரு தொழிற்சாலையினை அமைக்க வேண்டுமானால் சூழல் நச்சுப்படுத்தலை தவிர்க்கும் சாதனங்களுடனேயே பொருத்த வேண்டும். இது இந்நாடுகளின் முதலீட்டுச் செலவுகளை வீணாக அதிகரிக்கச் செய்வனவாகும்.

இவ்வாறாக விருத்தி பெற்ற நாடுகளின் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் விருத்தி பெறும் நாடுகளைப் பாதிப்பதாக உள்ளன. ஆனால் விருத்தி பெறும் நாடுகளில் ஏற்படுத்தக்கூடிய விருத்தி நடவடிக்கைகள் மூலம் இன்று அடைய வேண்டிய இலக்குகளாவன வேலை வாய்ப்புகள், போதிய வீட்டு வசதி, சுகாதார வசதி, கல்வி வசதி, ஊட்டச்சக்தி மிகுந்த போதிய உணவு என்பனவாகும்.

1972 ம் ஆண்டில் ஸ்டாக்ஹோம் நகரில் மானிட சூழல் பற்றிய மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் நூற்றுக்கு அதிகமான நாடுகள் பங்குபற்றின. அதில் கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் கைத்தொழிற் புரட்சியின் பின்னர் ஏற்பட்ட விருத்திகளையும் நச்சாக்கல் செயல்களின் இருப்பு என்பனவற்றையும் கணக்கெடுக்கும் ஒரு முயற்சி தோற்றுவிக்கப்பட்டது எனலாம். அதில் உலக வங்கியின் தலைவர் மெக்னமாரா, ''நாம் பூமி என்னும் கப்பலில் பிரயாணம் செய்கிறோம். அதில் 25 சத வீதத்தினர் முதல் வகுப்பில் எல்லா வசதிகளுடனும் செல்ல மற்றும் 75 சத வீதமானோர் மட்டமான வசதிகளையே கொண்ட நிலையில் பிரயாணம் செய்கின்றனர். இந்நிலை ஒரு நல்ல கப்பலைக் குறிக்காது'' எனக் கூறினார். இது உண்மையே. 3·6 பில்லியன் மக்களில் 25 வீதமானோர் சுகபோகங்களுடன் வாழ எஞ்சியோர் மிகக் கஷ்டமாக அதிலும் குறிப்பாக 1 பில்லியன் மக்கள் உணவுக்கே வசதியின்றி வாழ்கின்றனர்.

(Club of Rome) ''கிளப் ஆப் ரோமன்'' என்ற அமெரிக்க தனியார் துறை சார்ந்த குழு உலக குடித்தொகையும் எதிர்காலமும் பற்றிய கட்டுரை ஒன்றினைச் சமர்ப்பித்தது. அதன்படி இன்றைய நிலையிலான மக்கள் பெருக்கம் தொடர்ந்தால் 25 வருடங்களில் உலக குடித்தொகையினை இரண்டாகப் பெருக்கி விடலாம் என்றும், அப்பெருக்கம் லில்லிப் பூ தடாகத்தில் பெருகுவதனை ஒத்ததாக அமையுமெனக் கருத்து தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக மக்கள் தொகை, கைத்தொழிலாக்கம், புதுப்பிக்க முடியாத மூலதனங்களின் நுகர்ச்சி, உணவு நிரம்பல், நச்சுப்படுத்தல் (Pollution) போன்றவற்றின் பெருக்க / வளர்ச்சி அளவு இன்றைய அளவை பேணுமேயானால் பூமியின் அழிவு வெகு தூரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் இருக்காதெனவும் இக்கட்டுரை எச்சரித்த துடன், அந்நிலையில் இருந்து மீளவும் தனது கருத்தைத் தெரிவித்தது. மேற்கூறிய ஐந்து அம்சங்களும் ஒன்றில் ஆகக்குறைந்த வளர்ச்சி யினையோ அல்லது முற்றாக வளராது 0 வீத வளர்ச்சியையோ கொள்வது பொருத்தமாயிருக் கும் எனக் கூறப்பட்டது. ஆனல் இயற்கைச் சமன்பாடு ஏற்படலாம் எனக் கருதும் சராசர் களும் இல்லாமல் இல்லை.

மக்கள் பெருக்கமானது விருத்தி பெறும் நாடுகளில் அதிகம் என்பது உண்மையே. அதே நேரத்தில் விருத்தி பெற்ற செல்வந்த நாடு களில் உள்ள சராசரி ஒருவரது உணவு நுகர்ச்சி புதுப்பிக்கப்படமுடியாத மூலவளங்களின் நுகர்ச்சி என்பனவும், சூழலை நச்சுப்படுத்தும் தன்மை யும் நிச்சயமாக விருத்தியுறும் நாட்டின் சராசரி ஒருவரின் அளவை விட 4 முதல் 7 பங்கு அதிகம் என்பதனையும் நம் மறக்கலாகாது

எனவே மானிட சூழல் பாதுகாப்பு என் பது பல்வேறு கோட்பாடுகளுடனும், பிரச்சினை களுடனும் பின்னிக் கலந்து சிக்கலுற்றுக் காணப்படுகின்றது. இவற்றின் அடிப்படையில் இருந்து ஒவ்வொரு பிரச்சினையாக விடுவிக்கப் படும் பொழுதே இறுதியான இராட்சதப் பிரச் சினைகள் தீர்க்கப்பட்ட முடியும். சமுதாயங்களில் மிகக் கீழ்மட்டத்தில் உள்ள சாக்கடை நீர்அகற் றும் பிரச்சினையின் கூடிய வளர்ச்சியே, தொழிற் சாலைகளின் இரசாயனக் கழிவுகளை அகற்றும் பிரச்சினை. அதுபோன்றே பாலர்களின் கல்வி வசதிக்கான ஆரம்பப் பள்ளியினைத் தோற்று வித்தல் தொடர்பானதே தொழில் நுட்பக் கல்வி என்று பூதகரமாகத் தோன்றும் தொழில் நுட்பப் பயிற்சி பற்றுக்குறை சார்ந்த பிரச்சனை எனவே நாடுகளின் தேசிய ரீதியான மானிட சூழல் சார்ந்த அடிப்படை பிரச்சனைகளை முதல் நிலையில் நகர, கிராமிய திட்டமிடுதலின் மூலம் தீர்த்த பின்னரேயே, பாரிய பிரச்சினைகளை இராட்சத திட்டங்கள் மூலம் தீர்க்கப்பட முடியும எனவே மானிட சூழல் பாதுகாப்பு அல்லது பேணுதல் என்பது நகர, கிராமிய திட்டமிட லுடன் சார்ந்ததென்றே அல்லது அடுத்த வளர்ச்சி நிலை என்றே கூறிக் கொள்ளலாம்.

உங்கள் சமுதாயத்தை சிறிது உற்றுப் பாருங்கள் அங்கு வாழும் சிலரைக் காண்பீர்கள் பிழைக்கும் பலரைக் காண்பீர்கள், இங்கு ஏன் சிலர் வாழ்பவர்களாகவும் பலர் பிழைப்பவர் களாகவும் இருக்கிறார்கள் என்பதை சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்தியில் இயற்கை வளங்களின் பங்கு

இ. ஜெயராசா, 3-ம் வருடம்
அபிவிருத்திக் கல்வி

இயற்கைவளம் என்று பொதுவாகக் கூறும்போது நிலம், நீர், வளிமண்டலம், கனிப்பொருட்கள் என்பன அமைந்துள்ளன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக மனிதனே சிறந்த இயற்கைவளமாகவுள்ளான். இவற்றைவிட இயற்கைத் தாவரங்கள். விலங்குகள் போன்றனவற்றையும் இதனுள் அடக்கலாம். இயற்கைவளம் எவ்வளவு அதிகமாய் ஒரு நாட்டில் காணப்படுகிறதோ அவ்வளவிற்கு அந்நாடும் பொருளாதார மேன்பாடுடைய நாடாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே இயற்கைவளங்கள் பொருளாதார அபிவிருத்திக்கு எவ்வளவு தூரம் முக்கியமாயுள்ளது என்பது தெளிவாகின்றது,

மனித வரலாற்றை நோக்கின் அவன் எப்போதும் தனக்கும் நிலத்துக்கும் வேறு இயற்கை வருவாயுடைய பொருட்களுக்குமான தொடர்பிலே அக்கறை கொண்டவனுய் இருந்துள்ளான். உலகில் பெருகிக் கொண்டு போகும் இத்தொடர்பில் அடிப்படை மாற்றங்கள் எதுவும் ஏற்படாது எனலாம். மனிதன் கூடியளவில் குறிப்பிட்ட பகுதிகளில் நெருங்கி வாழக் கூடியதாயுள்ளது. இயற்கை வளங்கள் பெருகிக் கொண்டு போகும் குடித்தொகைக்குச் சாதகமாய் அமைகிறது எனலாம். நிலத்தைப் பொறுத்தமட்டில் மனிதன் பாவிக்கக்கூடிய ஒரு குறிப்பிட்ட நிலந்தான் உண்டு. அதேபோல் நீர், கனிப்பொருட்கள், வலு, உலோகம் என்பன யாவும் ஒரு குறிப்பிட்ட அளவிலேயே கிடைக்கிறது இதனுற்றுன் மனிதன் தனக்குக் கிடைக்கக்கூடிய வளத்துக்கும் தொகைக்குமிடையே ஒரு சமநிலையை ஏற்படுத்த முடியுமோ என்ற கேள்விக்குள்ளாகிருன். மனிதனுக்குப் பல வகையான தேவைகள் இருக்கின்றன. உலகில் இயற்கை வளங்கள் எவ்வளவு தொகை அடங்கியிருக்கின்றனவெனத் திட்டவட்டமாய்க் கூறமுடியாதுளது. காரணம் மொத்தமாய் அளவீடு செய்ய முடிவதில்லை. புதிதாக எவ்வளவு நிலத்தைப் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டுவரலாம் என்ற கேள்வி எழுகின்றது. தற்போது நிலவுகின்ற தொழில் நுட்பமுறையில், மனிதனது, ஆற்றல்அறிவு. என்பன எவ்வளவு தூரம் இயற்கை வளங்களைச் சிறந்த முறையில் ஆக்கலாம் என்பன போன்ற கேள்விகள் எழுகின்றன.

தற்போது இருக்கின்ற வளங்கட்குப் பதிலாக வேறு வளங்களைப் பாவிக்க முடியுமா. என்று மனிதன் சிந்திக்கிருன். விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியினுல் பல கண்டுபிடிப்புக்கள் நடைபெற்றுள்ளன. ஒரு நாட்டில் காணப்படுகின்ற இயறகைவளங்கள் அந் நாட்டின் விருத்தியை எடுத்துக் காட்டும் ஐக்கிய அமெரிக்க நாடுகள், சோவியத் ரஷ்யா, ஜெர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனி, பிரிட்டன் என்பன கைத்தொழிலில் பெரும் முன்னேற்றமும், வளர்ச்சியும் பெற்று விளங்க அங்கு காணப்படும் இயற்கை வளங்களே அடிப்படைக் காரணமாயுள்ளது. அதே வேளையில் விருத்திகுன்றிய நாடுகளில் இயற்கை வளத்தைப் பயன்படுத்தும் வீதம் குறைவாகக் காணப்படுகிறது. இங்கு காணப்படும் குடிப்பெருக்கமும் இந்நாடுகள் முன்னேறத் தடையாயுள்ளன. இதனுல் முதல் (Capiral) சேமிப்பு என்பன அதிகரிப்பது தடைசெய்யப்படுகின்றது.

புவியில் மூன்றிலொரு பகுதி நிலமாகும். இது நாட்டிற்குநாடு வேறுபட்டதாயுள்ளது. கனடாவில் தலைக்குரிய நிலம் 160 ஏக்கராயும் ஜப்பானில் ஒரு ஏக்கராயும் காணப்படுகிறது, குடியிருப்பு, உணவு காட்டுவளம், கைத்தொழில் என்பன போன்ற பொருளாதார முயற்சிகள் நிலத்திலே நடைபெறுகின்றன. அதாவது நிலத்தை மையமாக வைத்து செய்யப்படுகின்றன. உலகில் நகரவாக்கம பெருமளவு காணப்படுவதால், பயிர்ச்செய்கை நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்த முடியாதவனுய் மாறியுள்ளன. இதனுல் பல இடையூறு உளது.

ஏனைய இயற்கை வளங்களை விட கனிப்பொருள் வளமே ஒரு நாட்டின் செல்வத்துக்கும் கைத்தொழிலுக்கும அடிப்படையாகவுள்ளது. சில கனிப்பொருட்கள் மீண்டும் மீண்டும் பாவிக்க முடியாதனவாயுள்ளன. வேறுசில மீண்டும் பாவிக்கப்படக் கூடியனவாகும். இந்நூற்றுண்டில் குறிப்பிடத்தக்களவு கனிப்பொருட்கள் உபயோகிக்கப்படுகின்றன. எனவே அண்மையில் குடிப்பெருக்கத்திற்கேற்ப கனிப்பொாருட்கள் இருக்குமா என்பது பிரச்சனையாகவுள்ளது உலகின் மேற்பரப்பில் கனிப்பொருட்கள் சமமற்ற முறையில் அமைந்துள்ளது. சில நாடுகள் கனிப்பொருட்களை இன்று பெருமளவு இறக்குமதி செய்கின்றன.

பொதுவாக ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரமும், அந்நாட்டின் மூலவளத்துடன் தொடர்புடையது. கிடைக்கப்பெறும் முதல், தொழில் நுட்பம், ஆகியவற்றுடன் எவ்வளவு தூரம் முன்னேறலாம் என்பதை இயற்கை வளமே நிருணயிக்கும். இயற்கைவளம் சமனற்றுக் காணப்படுவதால் சில பிரதேசங்கள் ஏனையவற்றைவிட முன்னேற சிறந்த வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. ஆகவே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இயற்கை வளம் குறைவாயுள்ளது என நாம் பொதுவாகக் கூறினும் அது சரியானது என எப்போதும் கூறமுடியாது. ஏனெனில் இயற்கை வளங்களைக் கண்டுபிடிக்கவோ அல்லது தோற்றுவிக்கவோ முடியும், பொதுவாக இயற்கைவளம், மூலப்பொருட்களையும் வெளிநாட்டு நாணயம் மூதல் ஆகியவற்றை ஏற்படுத்த உதவும். இதனுற்றுன் பல மூலவளங்களை பொருளாதாரத்துடன் தொடர்பு படுத்துவர்.

இயற்கைவளம் இன்னெரு வகையிலும் பொருளாதாரத்திற்கு உதவுகிறது. அதாவது சருவதே வர்த்தகத்தை அதிகரிக்கிறது. அத்துடன் தொழில் நுட்பத்தினை இயற்கைவளங்கள் பாதிக்கலாம். சிறப்பாக இயற்கைவளத்துடன் தொடர்புடைய தொழில் நுட்பத்திறனை வளரவும் அது உதவலாம். மேலும் வெளிநாட்டு நாணயத்தை ஏற்படுத்தவும், வேறுவகையான கைத்தொழில்களை ஊக்குவிக்கவும் இது உதவுகிறது.

உலகில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார மாற்றத்தின் போக்குகளில் மூலவளங்களின் பயன்பாடு குறிப்பிடத்தக்க பங்கினை வகித்துள்ளதை நாம் உணர முடியும். விவசாய அபிவிருத்தியிலும் கைத்தொழில் அபிவிருத்தியிலும் மூலவளங்களின் பயன்பாடு குறித்து இன்று பலரும் அதிக கவனம் செலுத்தி வருகிருர்கள். உலக நாடுகள் அனைத்திலும் இன்று ஏற்பட்டிருக்கும் பணவீக்க நிலைமையும், பொருட்கள், பண்டங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் திடீர் விலையேற்றங்களும் பஞ்சத்தில் தத்தளிக்கும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் ஏழ்மை நிலைமையும் மூலவளங்களை அரசியல் ஆயுதமாக நாடுகள் பாவிக்கும் புதிய போக்கும் நகரவாக்கம், புதிய தொழில் நுட்பங்களின் தாக்கமும் மூலவளங்களின் பயன்பாடுபற்றிய கருத்துக்களில் புதிய ஒளியைப் பாச்சியுள்ளன.

மூலவளங்களை நாடுகளின் பொருளாதாரம், பாதுகாப்பு என்பனவற்றிற்கான அடிப்படை அம்சங்களாக அமைந்துள்ளன உலகினது கடந்தகால வரலாற்றில் மனித இனத்தின் போர் நடவடிக்கைகள், சமாதான வாழ்வு ஆகியவற்றை மூலவளங்களே நிர்ணயிப்பதைக் காணலாம். இந்த நூற்றுண்டில் ஏற்பட்ட யுத்தங்களுக்கும் இனி ஏற்படலாம் என உலகினை அச்சுறுத்தும் மூன்ரும் உலக யுத்தத்திற்கும் கூட மூலவளங்களின் செல்வாக்கே ஏனைய காரணிகளை விட கூடியமுக்கியத்துவம் கொண்டதாயமையுமெனலாம்.

கடந்த சில காலம் வரையில் நாடுகளின் பொருளாதாரத்தில் மூலவளங்களின் பயன்பாட்டிற்கு அத்துணை முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. அப்படி ஒருசில சந்தர்ப்பங்களில் அதுபற்றி அக்கறை கொண்டிருந்தாலும் முக்கியமான பொருளாதார இயக்க காரணிகளுடன் இணைக்கப்படாமலே அவை காணப்பட்டன. அப்போது மூலவளம் பற்றிய ஆய்வினை பொருளியல் துறையைவிட இயற்கை அறிவியல் துறையே கூடியளவில் முக்கியத்துவப்படுத்தியது எனலாம். வெஸ்லி சி. மிட்செல் என்பவரது கருத்துப்படி மனித அறிவே உலகின் ஏனைய எல்லாவகை மூலவளங்களையும் விட சிறந்தது என்றும் அதுவே மூலவளங்கள் எல்லாவற்றிற்கும் பிறப்பிடமுமாகும். அறிவு எந்தளவில் சிறந்த மூலவளமாக கருதப்படலாமோ அந்தளவிற்கு மக்களின் ஆரோக்கியம், சமூக ஐக்கியம், விவேகமான கொள்கைகள், சுதந்திரம் யாவுமே மூலவளங்களாகக் கொள்ளப்படலாம்.

*

## இந்தத் தென்றலெல்லாம் அவன் கீதமே!

இந்த உலகின் இனிமைகள் வாழ்ந்திட
நைந்து நைந்து உழைப்பவன் வாழ்விலே
சிந்தும் இன்ப அலைகள் சுமந்துமே
வந்தது இளந் தென்றலின் வாசமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Serv
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.................

# மனிதனை மிஞ்சும் விலங்குகளின் நுண்ணறிவு

கலாநிதி, மனோ. சபாரத்தினம்

பரிணாமவளர்ச்சியின் உச்சத்திலிருக்கும் மனிதனை ஏனைய விலங்கினங்களினின்றும் தனித்துவம் பெறச்செய்வது அவனது ஆறாவது அறிவாகும். ஏனைய விலங்கினமெல்லாம் ஐந்தறிவுகளுக்குள் அடங்கியனதான் என மனிதன் பெருமைப்பட்டு வந்தபோதும், தன்னையும் மிஞ்சும் சில நுண்ணிய உணர்வுகளும், அறிவும் விலங்குகளிடமும் பறவைகளிடமும் இருப்பதை ஆச்சரியத்துடன் அவதானித்து வந்திருக்கிறான். மனிதன் வீடுகட்டி வாழ்கின்றான் பறவைகள் கூடு கட்டி வாழ்கின்றன. அங்கும் இங்கும் பாடித்திரிந்து, பகல் முழுவதும் இரைதேடி மாலையிலே மீண்டும் தன் மனையை நாடி வந்து சேர்கின்றன. ஏனைய விலங்குகளும் இப்படித்தான். விலங்குகள் எவ்வாறு தமது இருப்பிடங்களினின்றும், பாதையினின்றும் தவறாமலிருக்கின்றன? ஆறாவது புலன் என்று கூறுவார்களே, இந்த உணர்வு விலங்குகளுக்கும் இருப்பதனால்தான் அவைகளும் தமது சுற்றாடலை அறிந்து கொள்ள முடிகிறது. இந்த ஆறாவது புலன் பலவிதப்படும்.

உயிரின வளர்ச்சியின் உச்சக்கட்டத்தில் நாமிருந்தாலும், எம்மையும் மிஞ்சும் உயர்திறனுள்ள உணர் புலன்கள் சில விலங்குகளுக்கு இருக்கின்றன. எம்மால் கேட்கமுடியாதவற்றையும் பார்க்க முடியாதனவற்றையும் சில விலங்குகள் சுலபமாக அறிந்து கொள்கின்றன. தன் வீட்டுக்காரன் தூரத்தில் வருகின்ற போதே வீட்டுக்குள் இருக்கும் நாய் வாலைக் குழைத்துக் கொண்டு வரவேற்பிற்கு தயாராகி விடுகிறது. ஐம்புலன்களிலொன்றாகிய மூக்கு காற்றினை உள்ளெடுத்து வெளிவிடும் வாயிலாக அமைந்திருப்பதுடன், உயிர்த்து மணங்களை அறியும் புலனாகவும் விளங்குகிறது. எமது வளிமண்டலத்திற் பலவகை மணங்கள் நிறைந்து கலந்து இருக்கின்றன. இவற்றில் நாம் சுவாசித்தலுக்காக உள்ளெடுக்கும் வளியில் கலந்துள்ள மணங்கள் உட்சென்று தோய்கின்றன. அங்குள்ள மண நுகர்கலன்கள் இவற்றை மூளையின் ஒரு பகுதிக்கு எடுத்துச் செல்கின்றன. அப்பொழுது நுகர்தற் பகுதி இந்த தகவல் எப்படியானது எதனின்றும் பிறந்தது என்று ஆராய்ந்து அதன்பின் நுகர் இன்பத்தை எமக்கு அறிவிக்கிறது. அதுமட்டுமன்றி அதே மணத்தை நினைவில் நிறுத்தி எதிர் காலத்தில் மீண்டும் அதே மணம் நுகரப்படும்போது இனங்கண்டும் அறிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில மணங்கள் வலிதாக நுகரப்படுகின்றன. ''ஓடிக்சொலோன்'' போன்றவற்றின் அணுக்கள் காற்றில் இலகுவாக பரவுவதுடன் எளிதாகவும் நுகரப்படுகின்றன. நாம் ஒருமுறை உள்ளொடுக்கும் சிறியளவு காற்றில் ஒரு கிரும் திணிவுள்ள அத்திரவத்தின் 460,000,000 இல் ஒரு பகுதிதான் இருக்கும் ஆனால் விலங்குகள் இதனிலும் நுண்ணியளவு மணத்தினைக் கூட நுகர்ந்திடும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன. விலங்குகளின் இந்த நுண்ணிய நுகர்த்திறன் நாய்களிடம் அதிகளவில் காணப்படுகிறது. குற்றம் நடந்து பல நாட்கள் சென்றாலும், குறிப்பாகச் சென்று குற்றவாளியைப் பிடித்துவிடுகின்ற நாய்களுக்கு குற்றவியற் தடுப்புத்துறையிலுள்ள மதிப்புக் கொஞ்சமானதல்ல.

ஒரு பொருள் அண்மையில் இருக்கின்ற போதுதான் மணநுகர்ச்சி மூலம் எம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. ஆனாள் பெண் நரி மெல்லிய காற்று வீசும் வேளைகளில் கிட்டத்தட்ட 50 அடி தூரத்திலுள்ள மனிதனையே மண நுகர்ச்சி மூலம் அறிந்து கொள்கிறது. புலி, நரி, கரடி போன்ற விலங்குகள் மனிதர்கள் வருகிறார்கள் என்பதைமட்டுமன்றி ஒருவரோ, பலரோ மேலும் அவர்களிடம் துப்பாக்கி இருக்கிறதா என்பதினைக்கூட மணத்தினால் நுகர்ந்து அறிந்துகொள்ளக் கூடியவை

நாம் எமது சுற்றாடலை அறிந்து கொள்வதற்கு பார்வைப் புலனும், செவிப்புலனும் மிக இன்றியமையாதன இதே போன்று விலங்குகள் தமது சுற்றாடலை அறிவதற்கு பெரும்பாலும் மணநுகர்ச்சி புலனையே நம்பியுள்ளன. காடுகளில் வாழ்ந்த எம் ஆதி வாசிகள் எம்மை விடவும் கூடியளவு மோப்புச் சக்தியை கொண்டிருந்தனர் என அறியப்படுகிறது. நீர் வாழ் விலங்குகளை எடுத்தாலும் இதே கதைதான். வருடாவருடம் இலையுதிர வசந்த காலங்களில் கடல்வாழ் மீனினங்கள் சில கூட்டம் கூட்டமாக ஒரு பாதையில் செல்கின்றன. சல்மன் (Salmon) என்ற மீன் பருவ நிலையடைந்ததும் தாம் பிறந்த ஆற்று மணலில் இனப்பெருக்கத்திற்காகச் செல்கின்றன. திசை தவறாது செல்லும் இவை இனப்பெருக்கத்திற்கான சூழலை இயற்கையாகவரும் அறிவினால் பெறுவதில்லை. மூன்று நான்கு வருடங்கள்வரை அவதானித்து மண நுகர்ச்சியினால் பெற்ற அனுபவம்தான் அவற்றின் அறிவாகிறது. இவற்றின் மூக்கு துவாரங்களை அடைந்தபோது தமது பாதையில் தவறாது பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டதை இங்கு நினைவிற் கொள்ளலாம்.

குகைகளில் வாழும் விலங்குகளும் பெரும்பாலும் தமது சுற்றாடலை மணநுகர்ச்சியினாலேயே அறிந்து கொள்கின்றன விலங்குகள் தமது உணவைத் தேடிப் பிடித்துக்கொள்வதற்கும் இதே புலனுணர்வுதான் உதவுகின்றது. புதிய மணத்தினை எல்லா விலங்குகளும் அறிந்து கொள்ளும் சக்தியுள்ளன, ஆனால் பழைய மணத்தினை நாய் போன்ற விலங்குகளே அறிந்து கொள்கின்றன. இறந்து நான்கைந்து நாட்கள் கழிந்த பின்பும் கூட மனித மற்றும் ஏனைய முலையூட்டிகளின் மணத்தினை நாய்கள் அறிந்துகொள்ளும் சக்தி கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய்களின் தொல்லையிலிருந்து நரிகள் தப்பித்துச் செல்கின்ற சங்கதி இன்றும் சுவராஸ்யமானது. நாய் துரத்துகின்றது என அறிந்த நரி சுற்றிச் சுற்றி ஓடி நாயை அலைக் கழிக்கும் பின்னர் குளம் ஆறு போன்றவை குறுக்கிட்டால் அவற்றினூடாக நீந்தி மணத் தின் தன்மையை அகற்றிவிடும். சிலவேளைகளில் ஆட்டு மந்தைகள் போன்றன குறுக்கிட் டால் அவற்றின்மேல் ஏறி சவாரி செய்து மணத்தடத்தை அகற்றிவிடும். இவ்வாறு நடந்த பின் நரி சென்ற திக்கினை அறிய முடியாத நாய் திரும்ப வேணடியதுதான். '' வல்லவனுக் கும் வல்லவன் வையத்திலே உண்டு '' என்பது போல நரியை ஏமாற்றும் முயல்களின் கெட்டித்தனமும் சாதாரணமானதல்ல. முயற் குட்டிகள் குழிகளில் இருக்கும் போதே மோப்பம் பிடித்து நரிகள் அவ்விடம் செல்லமுடியும் இதனைத் தடுப்பதற்காக முயல்கள் குழிகளை அடைய முன்னர் குழியிலிருந்து கிட்டத்தட்ட 15 அடி தூரத்தில் வட்டமிட்டு அங்கிருந்துதான் திடீரென பாய்ந்து குழிக்குள் செல்கின்றன. நரி வளையத்தைச் சுற்றிச் சுற்றி செல்லுமேயொழிய குழிக்கை அடையமுடியாது.

மனித இரையை நாடி மோப்பம் பிடிக்கும் மகா கெட்டித்தனம் வாய்ந்த மூட்டைப் பூச்சியையும் இந்த வரிசையிற் சேர்த்துக்கொள்ளலாம். தற்பாதுகாப்பிற்காக மண நுகர்ச்சி யைப் பாவிக்கும் தன்மை காட்டுப் பூனைகளிடம் அதிகமாகக் காணப்படுகின்றது. புற்பாம்பு கண்ணுடிப்பாம்பு போன்றனவும் ஏனைய சில விலங்குகளும் அருவருக்கத்தக்க மணத்தைப் பரப் பியே தம்மை எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்கின்றன. தேனீக்கள் போன்ற விலங்கு கள் சமுதாய வாழ்க்கை நடத்துவன. சமுதாய வாழ்வில் தற்காப்பு அவசியமாகும். தேனீ ஒன்று அபாயம் நேரிடும் போது தனது அடிவயிற்றிலிருந்து ஒருவித நீரைச் சுரக்கின்றது. இதனை நுகரும் ஏனைய தேனீக்கள் தாம் செய்து கொண்டிருக்கும் வேலைகளை யெல்லாம் அப்படியே விட்டுவிட்டு பறந்து விடுகின்றன முயலும் இவ்வாறு தான் தனது தற்காப்பை மேற்கொள்கிறது. அபாயம் ஏற்படும்போது வாலைத் தூக்கி அதன் அடியிலுள்ள வெள்ளைப் பகுதியை காட்டியபடி காலால் தரையைத்தட்டி தன் இனத்திற்கு அபாயத்தை அறிவிக் கின்றன. தத்தம் சோடிகளைத் தேர்ந்தெடுத்து இனப்பெருக்கம் செய்வதற்கும் மணமே பெரி தும் துணை செய்கின்றது. ஆண் தேனீக்கள், வண்டு போன்றன தமது பெண் சோடிகளின் மணத்தை அறிந்ததும் மகிழ்ந்து ரீங்காரம் செய்கின்றன எட்டுக்காற் பூச்சியான சிலந்தி களில், பெண் சிலந்தி இருந்த இடத்தையணுகும் ஆண் சிலந்தி அங்கு பெண் சிலந்தி இல்லாத இடத்தும், இருப்பதாக எண்ணிக்கொண்டு பலவிதமாக நடனமிடுகின்றன. ஈற்றில் ஏமாற்ற மடைகின்றன. பெண் பூச்சிகள் இருந்து சென்ற இடமே ஆண் பூச்சிகளை மயக்குகிறது என்றால் அவைகளின் வாழ்வில் மணம் எந்தளவு பங்கு வகிக்கின்றன தென்பதை தனித்து நாம் விளக்க வேண்டியதில்லை. மணத்தின் மயக்கம் தான் என்னே!

மணத்தின் உதவியுடன் வியக்கத்தக்க நுண்ணுணர்வு பெற்று வாழும் விலங்கு களில் சிலவற்றிற்கு அவற்றின் மணமே எமனாகியும் விடுகிறது. புனுகுப் பூனை, கஸ்தூரி மான் போன்ற வாசனைப் பொருளினைப் பெறுதற்காக மனிதர்களால் அவை பெரிதும் சித்திரவதைக் குள்ளாகின்றன. நாயின் ஊளையிடும் அவலக்குரலையோ, ஆந்தையின் அலறலையோ கேட் டால் 'ஐயோ, கடவுளே! ஆர் முடியப்போகினமோ'' என்று ஒப்பாரிக்குத் தயாராகிவிடும் ஆச்சிமாரைக் கண்டு நாம் பரிகசித்திருக்கிறோம். ஆனால் ஆச்சிமார்களின் நம்பிக்கையில் உண்மையும் பொதிந்துள்ளதென்பது இன்றைய விஞ்ஞானம் கண்ட உண்மையாகும். மனிதன் இறக்குந் தறுவாயில் இரத்த ஓட்டம் குறைகிறது, உயிர் அணுக்கள் கொஞ்சம் கொஞ்ச மாக இறக்கின்றன, அடுத்து மூச்சு நிற்பதற்குமுன், உடலில் ஏற்படும் சில மாற்றங்களி னால் ஒருவித நீர் வெளிவருகிறது. அந்த நீரின் நாற்றத்தை வெகு தொலைவிலிருந்தே நாய் கள் அறிந்து கொள்ளும் சக்தியைப் பெற்றிருக்கின்றன. இதனால் ஊளையிடுகின்றன. அது சாவின் அறிவிப் பாகவுமாகிவிடுகிறது. இறைவனின் படைப்பு விந்தைகளே அன்றி இயற்கைத் தேர்விற்கு அமைந்து பரிணாம வளர்ச்சி யடைந்த விந்தைகளோ! மனிதப் புலன்கள் நுண் ணுணர்வினையும் மிஞ்சி நிற்கின்ற விலங்குகள் அதிஷ்டசாலிகள்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவியல்

# கனவெல்லாம் பொருளாமோ?

எம். எல். நஜிமுதீன்
( வைத்திய பீடம் )

கனவுக்கு ஏதாவது கருத்து இருக்குமென்று பெரும்பாலான மக்கள் இப்போதும் உறுதியாக நம்பி வருகின்றனர் கெட்ட கனவொன்றைக் கண்டவர் காலையில் எழுந்ததும் இடி விழுந்தது போலக் கையை வைத்துக் கொண்டு வருந்துவதும், மகிழ்ச்சியான கனவொன் றைக் கண்டவர் மற்றவரிடம் அதுபற்றி பிரலாபிப்பதும் வழக்கமாக நாம் காண்பனவாகும். உண்மையில் கனவு என்றால் என்ன? அது எப்படி உண்டாகின்றது? கனவின் பொருள் அல்லது முக்கியத்துவம் என்ன என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"துயில்கின்ற நேரத்தில் இரண்டு மணித்தியாலத்திற்கு ஒரு கனவு வீதம் ஒவ்வொரு வரும் கனவு காண்கின்றனர். தாம் கனவே காண்பதில்லை என்பவர்கள் தமது கனவுகளை நினைவுபடுத்த முடியாதவர்களேயாகும்" என்று தொம்சன் என்பார் கருதுகிறார். கனவைப் பற்றி விதம் விதமான கருத்துக்கள் அன்று தொட்டு இருந்து வருகின்றன. கனவுகள் தோன்றுவதற்குப் பேய், பிசாசுகள் காரணமென்று பாபிலோனியர் நம்பினர். கடவுளும், கடவுட்தன்மை நிறைந்தவர்களுமே கனவுகட்குக் காரணமென்று எகிப்தியர் எண்ணினர் மனத்தில் தோன்றும் ஆசைகளே கனவின் காரணமென்று பிளேட்டோ கருதினார். உடலைச் சார்ந்து எழும் எண்ணங்களே கனவின் அத்திவாரம் என்று அரிஸ்டோட்டில் எண்ணினார். கனவும் நனவும் ஒன்றே என்று டெஸ்கிரேட்ஸ் (Descrates) கருதினார். ஹொப்ஸ் என்பவரோ கனவும் நனவும் சம்பந்தமேயற்ற இரண்டு வெவ்வேறு விடயங்கள் என்று கருதினர். லீபின்றஸ் என்பவர் நடந்து முடிந்த சம்பவங்கள் உடலையும் உள்ளத்தையும் நினைவுபடுத்தி வெளிப்படலே கனவு என்றார். ஹார்ட்மன் என்பவரோ மனிதனில் உள்ள நனவிலி மனத்தில் (Unconscious Mind) இருந்துதான் கனவுகள் வெளிப்படுகின்றன என்று கருதினார். இப்படியாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை கனவு பற்றிப் பல்வேறு முரண் பட்ட கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

கனவைப்பற்றிய சிக்மண்ட் பிராய்டின் கருத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். கனவுகள் உள்ளத்தில் அடைந்து கிடக்கும் ஆசைகளையும், பாலியல் உணர்வுகளையுமே குறிக்கின்றன என்றார். நனவிலி உள்ளத்தில் அமிழ்ந்துள்ள உணர்வுகளின் பிம்பமே கனவு என்று அவர் விளக்கினார். இதிலிருந்து கனவு என்பது மனித உணர்வின் வெளிப்பாடேயன்றி வேறல்ல என்று தெளிவானது. கனவென்பது காட்சிகளின் பின்தொடரலாகும். கல்கின்ஸ் என்பவரின் பரிசோதனையின்படி 397 கனவுகளில் 240 கனவுகள் கண்ணால்கண்ட சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. ஏனையவை ஏனைய புலன்களால் உணரப்பட்ட சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டிருக்கின்றன. சம்பந்தமில்லாத சம்பவங்கள் கனவாகுவதே இல்லை. மகிழ்வு மனத்தின் நினைவுத்துண்டுகளே. கனவுகளின் வடிவம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒஸ்வால்ட் எண்ணுகிறார். இன்றைய உளவியலாளரான ஹோல் (Hall) கனவை பின்வருமாறு விளக்குகிறார். ''சிந்தனையென்பது கற்பனையின் ஒரு முறையாகும். அதன் விளைவாக எண்ணம் பிறக்கிறது. விழித்திருந்தாலென்ன துயின்றாலென்ன சிந்தனை பேறான எண்ணத் தோன்றலும் ஒரே முறையானவையே. விழித்திருக்கும்போது ஏற்படும் சிந்தனையை எண்ணம் என்கிறோம். நித்திரையின்போது ஏற்படும் சிந்தனையைக் கனவு என்கிறோம்,'' ஆகவே கனவு என்பது மனத்தின் சிந்தனையே தவிர தெய்வீகமானதோ, பொருள் காட்டுவதோ, வருங்காலம் உணர்த்துவதோ அல்ல. எண்ணமும் சிந்தனையும் ஒவ்வொருவருக்கும் தனித்துவமாக இருப்பது போலக் கனவும் தனித்துவமாகவே இருக்கின்றது. உதாரணமாக தூங்குகின்ற பலருக்கு ஒருசொட்டுத் தண்ணீரை இட்டு அவர்களின் கனவுகள் அவதானிக்கப்பட்டன. சொட்டும் மழையில் நனைவதுபோல் ஒருவன் கனவு கண்டான்; பாய்ந்து செல்லும் அருவியில் நீந்துவதாய் ஒருவனும், ஆழ்சமுத்திரத்தில் அமிழ்வதாய் மற்றவனும் கனவு கண்டனர். ஒரே தூண்டல் பல்வேறு தனியாட்களில் வெவ்வேறு கனவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. இதிலிருந்து கனவுகள் அவரவர் எண்ணங்களையும் சிந்தனையையும் அடிப்படையாகக் கொண்டு எழுவனவே தவிர அவற்றிக்குத் தனிப்பட்ட பலனென்றும் இருக்கமுடியாதென்பது புலனாகின்றது.

கனவுகள் சில சமயங்களில் சூழலையும், சம்பவங்களையும் பிரதிபலிப்பனவாய் இருக்கின்றன. மோரி (Maury) என்ற உளவியலாளர் பிரஞ்சுப் புரட்சிக்காலத்தில், புரட்சித் தலைவர்கட்கு முன்னால் நிறுத்தப்பட்டு விசாரணையின் பின்னர் தலை துண்டாடப்படுவதாகக் கனவு கண்டார். எழுந்து பார்த்தபோது தலைப்பக்கக் கட்டில் கழுத்தில் விழுந்து கிடந்தது. இக்கனவு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது. அக்காலத்தில் புரட்சித் தலைவர்கள் மக்களை விசாரணை செய்வதும், சிரச்சேதம் செய்வதும வழக்கமாக இருந்தது அச்சிந்தனையும் உணர்வும் அவர் துயில்கையில் கனவாக எழுந்தது. பிற்காலத்தில் அவர் புரட்சித் தலைவர்களுக்கு முன்னால் நிறுத்தப்படவும் இல்லை; சிரச்சேதம் செய்யப்படவுமில்லை இதில் இருந்தே கனவுகள் வெறும் உணர்வுகளின் பிம்பங்களே தவிர அவற்றிற்கு வருங்காலம் உணர்த்தும் தன்மை முற்றாக இல்லை என்று கொள்ளலாம். ஒரு கல்லூரி மாணவி தன்னுடைய ஆசிரியை ஒருவர் தோட்டக் காரனுடன் உலாவுவதை ஒருநாள் கண்டாள், அந்த காட்சி அன்றிரவு தூக்கத்தில் அவளுக்குக் கனவாக உருவானபோது தோட்டக்காரனும் ஆசிரியையும் மணம் முடிக்கக் கண்டாள். இதை அவள் தன்னுடைய சக மாணவிகட்குக் கூறினாள். அதன்பின் சில நாட்களில் அவ்விருவரும் மணம் மூடித்துக் கொண்டனர். இதுகூட முன்னைய கனவைப் போல ஒரு தற்செயலான கனவாக இருந்த போதிலும் அறிவியல் நோக்கற்றோர் அவளைப் பெரும் தீர்க்கதரிசினி என்றே நினைத்தனர்.

கனவுகள் மன உணர்வுகளையும், சிந்தனைகளையும் பிரதிபலிப்பனவே. மிகவும் மனத் தாங்கலான நிலையில் உள்ளவர்கள் துக்கமான கனவுகளையே கண்டு வருவதை கிரிங்கர், ஸ்பீகல் (Grinker and Spiegal - 1945) ஆகியோர் அவதானித்துள்ளனர். மிகவும் மனந் தாங்கல் உள்ளவர்களில் தூக்கத்தில் நடப்போரும் (Sleep Walkers) சடுதியான ஆசை உணர்வு நிலையுடையோரும் (Acute anxiety state) குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் பயங்கரக் கனவு காண்பவர்களாகவும், தூக்கத்தில் பெரும் சத்தம் இடுபவர்களாயும், தங்களைத் தாங்களே தூக்கத்தில் அடித்துக் காயம் விளைவிப்பவர்களாயும் இருந்திருக்கின்றனர். கனவுகளில் அவர்கள் சில வேளைகளில் அழுகின்றனர். இவைகளெல்லாம் கனவுகள் மனத்தின் பிரதிபலிப்பே தவிர வேறல்ல என்பதை விளக்குவனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல் ரீதியான கனவுகளையும் இங்கே கருத வேண்டியிருக்கிறது. ஆண்களின் ''ஈரமாக்கும் கனவுகள்'' (Wet dreams) பாலியல் உணர்வுகளின் பிரதிபலிப்பேயாகும். கின்ஸி (Kinsey) என்ற பாலியலாளரின் ஆராய்ச்சியின்படி 99% வீதமான ஆண்கள் அடிக்கடி இரவில் 'ஈரலிக்கும் கனவுகளைக்' கண்டிருக்கின்றனர். எந்தவித பாலியல் உறவை விரும்புகின்றனரோ (உதாரணமாக தன் இன உணர்வு அல்லது பெண் உறவு) அந்த உணர்வையும், உறவையும் கனவில் காண்பது கவனிக்கத் தக்கதாகும். பெண்களில் 70% வீதமானோர் பாலியல் கனவு காண்பதை ஒத்துக்கொண்டனர். அவர்களில் 37% வீதமானோர் கனவில் உறவின் உச்சநிலையை (Orgasn) அடைந்திருக்கின்றனர். இவர்களெல்லாம் ஒரு காலத்தில் கணவன்மாருடன் அல்லது ஆண்களுடன் அனுபவித்திருந்து பின்னர் பிரிவினால் மனச் சோர்வுற்றோராய் இருந்தனர். இந்த ஆராய்ச்சியானது கனவானது உள்ளத்தின் பிரதிபலிப்பே என்பதைத் திட்டமாய் விளக்குகின்றது. மூளையானது தொழிற்பாடு குறைந்த நிலையில் இருக்கும்போது சாதாரண தூக்க நிலையிலேயே கனவு ஏற்படுகின்றது. மூளையானது நன்கு தொழிற்பாடற்ற நிலையிலேயே கனவுகள் தோன்றுவதால் கனவுகளை நியாயமான சிந்தனை என்று கருத முடியாது. கனவில் தோன்றுவன எல்லாம் மனத்தின் உணர்வுகளை நூற்றுக்கு நூறு பிரதிபலிக்கின்றன என்றுங் கருத முடியாதிருக்கின்றது.

கனவுகள் பற்றிய தமிழ் நாட்டறிஞர்களின் கருத்தையும் இங்கே கருதவேண்டியிருக்கிறது. உடல், உள்ளம், பகுத்தறிவு மூன்றும் சேர்ந்ததே பூரண மனிதனாகும். உடலும் பகுத்தறிவும் தொழிற்படாது இருக்கும் போது உள்ளம் மாத்திரம் தன்வழியே சிந்திப்பது தான் கனவாகும். தமிழ்நாட்டறிஞர்களின் விளக்கத்தை ஒத்தும் சமாந்தரமாயும் இருப்பது குறிப்பிடத் தக்கதாகும். கனவுகள் எப்போதும் நடந்து முடிந்த சம்பவங்களை அல்லது தெரிந்த நினைவுகளை அடிப்படையாகக் கொண்டனவாகவே இருக்கின்றன. தெரியாத ஒன்று அல்லது வருங்காலச் சம்பவம் ஒருபோதும் கனவாக அமைவதில்லை. இலண்டனுக்குச் செல்லாதவன் அல்லது இலண்டன் நகர் பற்றித் தெரியாதவன் இலண்டன் மாநகர வீதியையோ, தேம்ஸ் நதியையோ ஒருபோதும் கனவில் காணமாட்டான். ஒருநாளும் சந்திக்காத நபரை ஒருபோதும் கனவில் காணமுடியாது; தெரியாத விடயமொன்றைக் கனவில் அறியமுடியாது. ஆகவே தான் கனவுகட்கு எந்தவிதமான தெய்வீகமும் இல்லை; பொருளும் இல்லை; வருங்காலம் உணர்த்தும் தன்மையும் இல்லை என்று திட்டமாகக் கூற முடியும். தீர்க்கதரிசனமுடைய கனவுகளாகக் கருதப்படுபவை தற்செயலாகப் பொருந்திய சம்பவமே தவிர கனவுகட்கு எவ்வித தீர்க்கதரிசனமும் இல்லை. பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் மாணவன் ஒருவன் வினாத்தாளைக் கனவில் காண்பதோ வெறும் மனத்தின் உணர்வும் எண்ணங்களுமே தவிர அவனுக்கு எவ்வித குறிப்பிட்ட கருத்தும் இல்லை.

இறுதியாகக் கூறுமிடத்து உள்ளத்துணர்வே கனவாகும். ஊறும் உணர்வே கனவாகும். தெரிந்த உணர்வுகளும் நடந்த சம்பவங்களுமே கனவாய் உருப்பெறுகின்றன. காலமுணர்த்த முடியாது. கனவுகள் ஒருவரின் உள்ள உணர்வுகளை உணர்த்த முடியுமே தவிர அதற்கு அப்பால் அவற்றுக்கு முக்கியத்துவம் எதுவும் இல்லை. கனவில் தெய்வீகம் இல்லை; தீர்க்க தரிசனமும் இல்லை. ஏனெனில் கனவுகள் வெறுங் கனவுகளே.

**உசாத்துணை நூல்கள் :**


1. Sleeping and Walking — Ian oswald
2. A Study of dream Consciousness Weed se
3. The iuterprotation of dream - Sigmond Freud
4. The effect of dream deprivation - Dement
5. Statistics of dream - Calkins MW.
6. Study of dream - Bentley
7. Studies in psychophysiology of dreams - Thomson H. R.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

from

ELECTOSONS

(K. V. Building)

Main Street,

CHANKANAI.



With Best Compliments

From

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

K. G. INDUSTRIES

Colombo.



With Best Compliments
from

N. A. Markandu & Sons

191, Central Road,
Trincomalee.

Distributors For
Sri Lanka Tobacco
Industries Corp.

Sri Lanka Tyre Corp.

Agents: B. C. C. Ltd.
Union Carbide (Ceylon) Ltd.



With Best Compliments
from

Ero Electronics Recording
23, Modern Market
Jaffna.

Prop: A. H. M. MATHAR



For all Yor Requirements
IN Photography

Visit
EASTERN STUDIO
Trincomalee.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Complimnets*

T. Arunachelam Chettiar Sons

**Wholesale & Retail Merchants**

**Dealers in**

**Oil, Cattle Food, Rice,**

**Provision & Groceries**

165, 5th Cross Street,
COLOMBO - 11

**Phone: 21792**

With Best Compliments

from

**RAHEEMS**

**Gents Tailors**

6A GRAND BAZAAR

**(Opp. Ambihapathy Textiles)**

JAFFNA.

With Best Compliments

from

**SAPPHIRE LAPIDARY**

80, PRINCE STREET

PETTAH

FOR

COLOUR FULL BATIKS, LUNGIES

& SARONGS

**Visit:**

S. P. Periannapillai & Co.

180, Second Cross Street,

COLOMBO - 11

T'phone: 25738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INK ? ... ..  BALL POINTS ? ... ...

THINK VINK ......  ASK ......  USE VINK

Manufacturers:

VELLIAMPATI, ALAVEDDI.

Sole Distributors:

CARGILLS (Ceylon) LTD.

COLOMBO.

With Best Compliments From

REFINE & Co.

No. 40, GRAND BAZAAR, JAFFNA.

Refine Dress Manufactory

No. 3, JUMMAH MOSQUE LANE, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With Best Compliments**

**from**

For TIP TOP Tailoring

**FITTEXT**

9 (18) Grand Bazaar,

JAFFNA.

**With Best Compliments**

**from**

**RICOH HOTEL**

370, Hospital Road,

JAFFNA.

**With Best Compliments**

**from**

Mohideen Jewellers

GUARANTEED JEWELS

IN

LATEST DESIGNS

111, Kasturiar Road,

JAFFNA.

**With Best Compliments**

**from**

Mr. V. Thirunavukkarasu

102 (A) Sivan North Road,

JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு வளாகத் தமிழ்ச் சங்கம்

எடுக்கும் கலைவிழாவிற்கு

எம் நல் வாழ்த்துக்கள்

**சென்ற் அந்தனீஸ்**

ரெயிலறிங் மார்ட்

244, ஏகாம்பரம் வீதி

திருகோணமலை

இலங்கைப் பல்கலைக் கழக கொழும்பு வளாகத் தமிழ்ச் சங்கத்தாரின் 'இளந் தென்றல்' ஆண்டு மலர் சிறப்புடன் மலர்ந்து மாணவர்களுக்கு நன்மை பயக்குமாறு வாழ்த்தி நல்லாசிகூறுகிறேன்.

**ந. மகேந்திரஜோதி**

(உரிமையாளர்)

ஜோதித் தியேட்டர்

திருகோணமலை

**எம். எம். எஸ். டீன்**

ரெயிலர்

145, என். சி. வீதி

திருகோணமலை

**M. M S. DEEN**

Up—To—Date

Smart Tailorin

145, N. C. Road — Trincomalee

Phone: 297

சுவையான கேக் வகைகளுக்கும்

சுத்தமான பாண் தயாரிப்புக்கும்

திருகோணமலையில் நீண்ட காலம்

சேவையாற்றும் ஸ்தாபனம்

**மெடோர்ன் பேக்கரி**

27, மத்திய வீதி

திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துக்கள்

சகல உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கும்

CREDIT OF

**Kala Trading Centre**

111, 4th Cross Street,

COLOMBO — 11

T'phone: *22584*



With Compliments from

**S. Arumugam & Bros.**

101, Fourth Cross Street

COLOMBO—II

**Telephone : 29833**



**With the best Compliments**

**O. A Paramasivam Pillai & Sons**

**General Merchants & Importers**

No. 128, 4th Cross Street

COLOMBO – 11



எமது வாழ்த்துக்கள்

**கதிர்மணி அன் கம்பனி**

இல. 144, 142, 4-ம் குறுக்குத்தெரு

கொழும்பு — 11

தொலைபேசி: 20246



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments*

*from*

## Kareem Traders

**Wholesale & Retail Dealers in Textiles**

*Telegrams:* **SAFFRA**

*T'Phone:* **27307**

257, 259, Main Street,

COLOMBO-11.



அன்பளிப்பு

## ஆட்லன்ட்ஸ் ஹோட்டல்

இல. 192, 4ம் குறுக்குத் தெரு,

கொழும்பு-11.



**With the Best Compliments**

**from**

## CITY TRADING Co.

**Importers Distributors of Cycle Accessories, Hardware Paints & Electrical Etc.**

Phone: 25210

38, Third Cross Street,
COLOMBO.



**Rare opportunity to the Students enrol today itself**

## VENUS INSTITUTE

வீனஸ் கல்வி நிலையம்

Vinayagar Veethy, Nallur North,
JAFFNA.

**G. C. E. (O L) & (A L) N. C. G. E.**

Directors:

**E. Sritharan**
**V. Ravi**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த அச்சுவேலைகளுக்கு

||

## ஸ்ரீ சண்முகானந்தா அச்சகம்

336, 340, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 285

இலங்கைப் பல்கலைக் கழக கொழும்பு

வளாகத் தமிழ்ச் சங்கத்திற்கு

வாழ்த்துக்கள்

||

## S. குகமூர்த்தி

வரணி.

✱ கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்

✱ திருமண விழாக்கள்

✱ புதுமனைப் பிரவேசம்

✱ புதுமனைக்கு அத்திவாரமிடல்

முதலிய வைபவங்களுக்குத் தேவைப்படும் அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, சூடம், விளைவுசூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனைதிகள், பன்னீர், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம் முதலிய சகல சாமான்களும், சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டுகள் முதலியனவும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

✱ பச்சைச் சந்தனம்

(உடன் யந்திரத்தினால் அரைத்தது.)

எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்!

## எஸ். சுப்பிரமணியம்

அண்ட் கம்பனி

(மருந்து, மருந்துச் சரக்கு, வாசனைதிகள் வியாபாரம்)

53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை.

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 541

பாலேந்திரா பில்டிங்

160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தொலைபேசி: 3582

அன்பளிப்பு

## வாணி புத்தக சாலை

80, வித்தியாலயம் வீதி,

திருகோணமலை.

தரமான ரெடிமேட் ஆடைகளுக்கும் சிறியோர் முதல் பெரியோர் வரை அணியக்கூடிய பாதணிகளுக்கும் நம்பிக்கையும் மலிவானதுமான இடம்.

## பரமேஸ்வரன் ஸ்டோர்ஸ்

178, ஏகாம்பரம் வீதி,

திருகோணமலை.

அன்பளிப்பு

## சி. கிருஷ்ணசாமி

10, 3ம் குறுக்குத் தெரு,

திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டிய இராச்சியத்தின் நீதியியல் பற்றிய ஒரு கண்ணோட்டம்

செல்வி யோகேஸ்வரி இராமலிங்கம்
LL. B. ( Hons ) Cey.
பகுதி நேர விரிவுரையாளர்
சட்ட பீடம்
கொழும்பு வளாகம்

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.....................

கண்டியக் காலத்தில் இருந்த வியத்தகு அமைப்பு என்னவெனில் திருத்தம் செய்யப்பட்டு கண்டிய இராச்சியம் முழுவதும் பரந்திருந்த ஒரு நீதி முறையாகும். அதாவது குற்றம் செய்தவருக்கு வழங்கப்படும் தண்டனையானது தீங்கு விளைவிக்கப் பட்டவரினாலேயோ அல்லது அவரின் இனசனத்தவரினாலேயோ அன்றி அரசனாலேயோ அளிக்கப்படும். கண்டிய அரசாட்சியில் முழு சமூகத்தினருக்கும் நீதி வழங்கவும், குற்றம் செய்தவரைத் தண்டித்து குற்றமிழைக்கப்பட்டவருக்கு நட்ட ஈடு வழங்கவும் பல நபர்களைக் கொண்ட சபையொன்று இருந்தது கண்டிய இராச்சியத்தில் இவ்வாறு தண்டனை கொடுக்கும் அதிகாரம் மூன்று அதிகாரிகளின் கையில் அதாவது அரசன், அவரது அலுவலர்கள், மாகாண கிராம அமைப்புக்கள் என்பவற்றிடம் கொடுக்கப்பட்டிருந்தன

கண்டிய மாகாணத்தில் நிர்வாகத்திற்கும். நீதிக்குமிடையே அதிகாரப் பிரிவினை காணப்படவில்லை. அரசன் முதல் விதானை வரையுள்ள எல்லா அலுவலர்களும் 'மகா நடுவ' முதல் கன்சபாவ வரையுள்ள எல்லா ஸ்தாபனங்களும் நீதிபாலன அதிகாரத்தைப் பெற்றிருந்தன. கீழ் அதிகாரிகள், கீழ் நீதி ஸ்தாபனங்கள் போன்றவற்றிலிருந்து படிப்படியாக உயர் அதிகாரிகள்; உயர்நீதி ஸ்தாபனங்கள் போன்றவற்றிற்கும் கடைசியாக அரசனுக்குமாக மேன்முறையீட்டு அதிகாரம் இருந்தது. அவ்வாறு அரசனால் கொடுக்கப்படும் தீர்ப்பு இறுதியும் முடிவுமானதாகக் கருதப்பட்டது. உயர்நீதி அதிகாரம் அரசனுக்கு இருந்ததுடன் அரசன் முதனிலை நியாயாதிக்கத்தையும் மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தையும் கொண்டு இருந்தான்.

முதனிலை நியாயாதிக்கத்தைப் பொறுத்தளவில் மூன்று வகையான வழக்குகள் அரசனுக்கென்றே முற்று முழுதாக ஒதுக்கப்பட்டிருந்தன.

1. உயர் குலத்தாரும் (Nobles) அரச மாளிகையில் வேலை செய்யும் உத்தியோகத்த சம்பந்தப்பட்டதுமான வழக்குகள் முக்கியமான அரச மாளிகை சேவைக்கென ஒதுக்கப்பட்ட நிலங்கள் சம்பந்தமான வழக்குகள் அரசனாலேயே தீர்க்கப்பட்டன;

2. விகாரை சம்பந்தமாகவும், விகாரைக்கு அளிக்கப்பட்ட மானியங்கள் சம்பந்தமாகவும் பிக்குகளிடையே ஏற்படும் வழக்குகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கொலை, இராஜத்துரோகம், குழப்பம் விளைவித்தல், சதியாலோசனை செய்தல், தெய்வச் சொத்தைத் திருடுதல் போன்ற தெய்வத் துரோகம் செய்தல்.

போன்ற மூவகையான வழக்குகளும் அரசனாலேயே தீர்க்கப்பட்டன. இத்தகைய விடயங்களை விசாரிக்க கீழ் உத்தியோகர்களுக்கு அதிகாரம் இருக்கவில்லை. மேலும் அரசன் மட்டுமே இக் குற்றங்களுக்குத் தண்டனையாக மரண தண்டனை விதிக்கலாம்.

மாகாண அலுவலர்களினாலும், மாகாண நிறுவனங்களினாலும் கொடுக்கப்படும் தீர்ப்பிலிருந்து அரசனுக்கு மேன்முறையீடு செய்கையில் எப்பொழுது வழக்கு முதனிலை நீதி மன்றத்தில் தீர்க்கப்பட்டது என்ற கால அடிப்படையோ அல்லது வழக்கிற்குரிய விடயத்தின் பெறுமதி அடிப்படையோயின்றி மேன்முறையீடு செய்யலாம். மேலும் முன்னிருந்த அரசன் தீர்த்த வழக்கிற்கு எதிராக பின்வரும் அரசனிடம் மேன்முறையீடு செய்யலாம். பதினெட்டாம் நூற்றாண்டுக் கவிதையான "ஹட் ஹபே வினிசே" (Hat Habe Vinisa) என்பதில், 1787 ல் இராஜாதி இராஜசிங்கன் அரசனிடம் அவரது முன்னோற்றோரால் தீர்க்கப்பட்ட வழக்கிற்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதென்றும் ஆனால் அரசன் முன்னோற்றோரின் தீர்ப்பையே ஏற்றான் எனவும் கூறுகின்றது.

அரசனுக்கு ஒரு வழக்கு சமர்ப்பிக்கப்பட்டால் சில சமயம் அரசன் சமூகமாயிருக்கும்போதே விசாரிக்கப்பட்டது. அல்லது கண்டியில் அமைந்திருந்த அரசனைப் போன்றே முக்கியத்துவம் வாய்ந்த "மகா நடுவ" விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

திருமதி தேவராஜாவின் கருத்துப்படி 1775 ல் இது இரு அதிகாரிகளையும் (Adigars) திசாவைகளையும், ரட்டராலைகளையும், ஐந்து லேகம்களையும் உள்ளடக்கியிருந்தது. பொதுவாக இவ்விரு அதிகாரிகளில் ஒருவர் தலைமை தாங்க ஏனையோர் அவர்களின் அந்தஸ்திற்கேற்ப அமர்ந்திருப்பர். முழு விசாரணை நடவடிக்கையும் வாய் மூலம் இருக்குமாயினும் சில சந்தர்ப்பங்களில் எக்கட்சிக்காரரும் தமது வழக்கை எழுத்து மூலம் சமர்ப்பிக்கலாம். இவ்வாறு எழுத்து மூலம் சமர்ப்பித்தல் "விட்டி வட்டொருவ" (Vitti Vattoruwa) எனப்பட்டது சில சமயம் அசையும் பொருட்களின் விபரங்கள், பொருட்கள் திருடப்பட்டிருந்தால் அவற்றின் விபரங்கள் போன்றவை எழுத்தில் கொடுக்கப்பட்டன. புலன் விசாரணை போன்றவை முடிந்த பின்பு பெரும்பான்மையினரின் தீர்ப்பு ஏற்கப்படும். கடினமான வழக்குகளாய் இருப்பின் நீதிமன்றம் வாய் மூலமாகவே விசாரனை நடத்தும். விசேடமான வழக்கானது பெறுமதி வாய்ந்த ஆதனம் சம்பந்தமாயிருந்து, கட்சிக்காரர் இருவரில் யாராவது ஒருவர் வழக்கை அரசனிடம் சமர்ப்பிக்க வேண்டுமென விரும்பின் அவ்வாறு அரசனுக்குச் சமர்ப்பிக்கப்படும் எல்லா நில வழக்குகளும் "மகா நடுவ" வினால் விசாரிக்கப்பட்டு அரசனால் தீர்ப்பளிக்கப்பட்டன. இத்தகைய எழுத்திலான தீர்ப்பாணைகள் "சித்து" (Sittu) என அழைக்கப்படுவதுடன், அதிகாரிகள் இவற்றை வழக்கில் வெற்றி பெறும் கட்சிக்காரருக்கே கொடுப்பர்.

அதிகாரிகள் என்போர் தங்களுக்கு மட்டுமே ஏகபோக உரிமையுள்ள சில விசேடமானதும், நூதனமானதுமான அதிகாரங்களைக் கொண்டிருந்தனர். அதாவது தங்களது கிராம எல்லைக்கு உட்பட்ட பிரஜைகள், அங்கு வசிக்கும் செய்தி கொண்டு செல்லும் தூதுவர்கள், சிறைக் காவலாளிகள் கசையடிப்போர்கள் ஆகியோர் சம்பந்தமான குற்றவியல், குடியியல் வழக்குகளைத் தீர்க்கும் அதிகாரம் பெற்றிருந்தனர். மேலும் இவர்களின் அதிகாரத் தன்மையை அரசன் மட்டுமே கேள்விக்குட்படுத்தலாம், தங்களுக்கு அதிகார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ள எல்லேக்குள் மட்டுமே இவர்கள் நீதிபரிபாலனம் செய்யக்கூடியதாய் இருந்தது. இவர்களுக்கு நீதிபாலன ஆதிக்கம் இருந்த சில விடயங்களில், அதே சமயத்தில் திசாவை மாருக்கும் ஆதிக்கம் இருந்தது. ஆனல் திசாவைமார்கள் தங்கள் அதிகாரத்திற்கு உட்பட்ட வர்கள் மேல் மட்டுமே ஆதிக்கம் செலுத்தக் கூடியதாய் இருந்தது. அரசனுக்கென்றே தனியாக ஒதுக்கப்பட்டிருந்த வழக்குகளேத் தவிர்ந்த ஏனைய எல்லா குடியியல் சிவில் வழக்குகளேயும் தீர்க்கும் அதிகாரத்தை அதிகாரிகள் பெற்றிருந்தனர். அதிகாரிகளுக்குப் போதுமான அளவு நீதித்துறையில் நியாயாதிக்கம் இருந்தபொழுதிலும் கூட அரச மாளிகை உத்தியோகத்தர்கள், கோவில் உத்தியோகத்தர்கள், தலைமை லேகம்ஸ் ஆகியோரின் அதி காரங்களும் பாதுகாக்கப்பட்டன. ''ரட்ட'' என்னும் பகுதிகளில் ஏற்படும் எல்லா நில வழக்குகளிலும் ''சித்து'' ''தெவி சித்து'' (Devi Sittu) போன்ற தீர்ப்பாணைகள் வழங்க அதிகாரிகள் அதிகாரம் பெற்றிருந்தனர்.

திசாவைகள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட அதிகார எல்லேக்குள் உள்ள நபர்களின் மீதும், காணிகள் மீதும் நீதி நியாயாதிக்கம் கொண்டிருந்தபோதும் கூட அரசனது வீட் டுத் தேவைக்கென ஒதுக்கப்பட்டவை, லேகம்களுக்கிச் சொந்தமானவை மீது நியாயாதிக் கம் செலுத்த முடியவில்லே. இதனுல் இவர்கள் மீது திசாவைகள் கட்டுப்பாட்டிற்கு உட்படவே நியாயாதிக்கம் செலுத்த முடிந்தது. மேலும் திசாவைகள் அதிகாரிகளேப் போன்று அதிகாரம் பெற்றிருந்த போதும் கூட அதுவும் வரையறுக்கப்பட்டதாகவே இருந்தது. திசாவைகளும் தங்களுடைய திசாவனிக்கு உட்பட்ட பகுதியில் மட்டுமே ''சித்து'' 'தெவி சித்து'' போன்ற தீர்ப்பாணைகள் வழங்கலாம். திசாவைகள் எத்தகைய வரையறுப்பிற்கும் உட்படாமல் உடற் தண்டனே, சிறை, அபராதம் போன்றவை வழங் கலாமாயினும் கட்சிக்காரர்களுடைய உத்தியோகப் பதவி அவர்களின் வகுப்பு. சாதி போன்றவையும் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும் சேர். ஜோன் டி ஒய்லி2 குறைந்த அந்தஸ்தில் இருந்த ''கொவி குலத்தைச்'' சார்ந்தவர்கள் மட்டுமே உடற் தண்டனேகு உட்படக்கூடியவர்களாய் இருந்தனர் என்றுர்.

மேலும் ''லேகம்ஸ்'', 'ரட்டராலேகள்'' கோவில்களின் தலைமைக்காரர்கள் தங்களு டைய ஸ்தாபனங்களின் அதிகார எல்லேக்கு ஏற்ப அங்குள்ள எல்லா மனிதர்கள் மீதும் அதிகாரம் செலுத்தி வந்தனர். இவர்கள் குடியியல் வழக்குகளே மட்டுமே விசாரித்த துடன் பொதுவாகக் குற்றவியல் வழக்குகளே அதிகாரிகளே விசாரித்துத் தீர்ப்பளித்தனர். இவ்வாறு இவர்களால் விதிக்கப்பட்ட அபராதமானது பத்திலிருந்து இருபது வெள்ளி களுக்கு (Ridies) மேற்படுதல் கூடாது.

திசாவையின் கீழிலிருந்த சிறிய அரச உத்தியோகத்தர்களான 'திசாவ மொகத்தாலே கள்' 'அட்டபத்து' மொகத்தாலேகள்' 'கோறளேகள்' ஆகியோர் அவர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த பகுதிகளிலுள்ள மக்கள் மீது குடியியல் குற்றவியல் நியாயாதிக்கத்தைக் கொண்டிருந்தனர், இத்தகைய அதிகாரங்கள் பொதுவாக திசாவைகள் தலேநகரான கண்டிக்கு சென்ற போதே பெரும்பாலும் சிறப்பாகப் பிரயோகிக்கப்பட்டன. சேனே நிலங்களின் எல்லே கள் மக்களேத் தாக்குதல் போன்ற சிற்றகவையர் செய்யும் குற்றங்கள் போன்ற சிறிய பிரச் சினேகள் தங்கள் அதிகாரத்திற்கு உட்பட இருப்பின் விசாரிக்கப்பட்டன. இவர்கள் குற்ற வாளிகளுக்கு உடற் தண்டனேயளித்தல், அவர்களே சிறையிடுதல் திருடர்களே அவர்களின் வீட்டிலேயே சிறை வைத்தல் போன்ற தண்டனேகளே கொடுக்கக் கூடியதாய் இருந்தது ஊவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்ரகமுவ ஏழு கோறளைகள் போன்ற மூன்றிடங்களில் உள்ள 'மொகத்தாலை'கள் பத்து வெள்ளி வரை அபராதம் விதிக்கக் கூடியதாயும், கோறளைகள் ஐந்து வெள்ளி வரை அபராதம் விதிக்கக் கூடியதாயும் இருந்தனர். 'நட்ட' என்னும் பகுதிகளில் உள்ள பத்து உத்தியோகத்தர்களும் மிக வரையறுக்கப்பட்ட அதிகாரத்தையே கொண்டிருந்தனர் இவர்கள் சிறிய குடியியல் வழக்குகளைத் தீர்த்தனர். பெரும்பாலும் இவர்கள் நீதிபதிகளாகவன்றி நடுத்தீர்ப்பாளர்களாகவே செயலாற்றினர்.

மக்கள் வரிகட்டாமலிருந்தாலோ அல்லது இவ்வுத்தியோகத்தர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பகுதிகளில் களவு போன்ற சிறு குற்றங்களைச் செய்து அதற்காக அழைப்பாணை விடுக்கப்பட்டபின்பும் நீதிமன்றிற்கு வராமலிருந்தாலோ உத்தியோகத்தர்கள் அத்தகையோரின் நிலம் விளைச்சல் (பயிர்) போன்றவற்றை பறிமுதல் செய்யலாம். இவர்கள் குற்றவாளிகளை ஒரு நாளோ இரண்டு நாளோ சிறையில் இட அதிகாரம் பெற்றிருந்ததுடன் மூன்று வெள்ளி வரை அபராதம் இடும் உரிமையையும் பெற்றிருந்தனர் அவ்வாறு பெறும் அபராதத்தை தலைமைக்காரருக்கு அவர்கள் அளித்தல் வேண்டும்: ஒரு தனிப்பட்டசாதிக்காக நியமிக்கப்பட்ட விதானைமார்களும் குறிப்பிடத்தக்களவு நீதி அதிகாரத்தைக் கொண்டிருந்தனர்.

நீதி அதிகாரத்தைப் பொறுத்தளவில் 'கண்சபாவ' கிராமநியாய சபை என இருவகையான சனநாயக கோட்பாடுகளைக் கொண்ட ஸ்தாபனங்கள் இருந்தன. கன்சபாவ மிக ஆதிகாலம் தொட்டு வழக்கில் இருந்ததுடன் இந்தியாவிலுள்ள 'பஞ்சாயம்' போன்று நீதியை நிர்வகித்து வந்தது. இக் 'கன்சபா'வில் கிராமத்திலுள்ள முதியவர்கள் அங்கம் வகித்ததுடன் கிராமத்திற்குள் ஏற்படும் சிறிய திருட்டுக்கள் சண்டைகள் நில எல்லைப் பிரச்சினைகள் போன்றவைகள் தீர்க்கப்பட்டன. இவர்கள் குற்றமிழைத்த கட்சிக்காரரையும் குற்றமிழைக்கப்பட்ட கட்சிக்காரரையும் சமாதான முறையில் ஒன்று சேர்த்து வைத்தனர் சில சமயம் குற்றம் செய்தவர்களை தண்டனையின்றி வெறுமனே கண்டனம் செய்து விடுதலை செய்தனர். இவ்வாறு தீர்ப்பளிக்கையில் பெரும்பாலும் முதியோர்கள் பலாத்காரத்தைப் பிரயோகிக்காமல் தங்களது செல்வாக்கை உபயோகித்தே சமாதானம் செய்தனர். 'கன்சபா' வின் முடிவுகளை கட்டாயமாக பின்பற்ற வேண்டுமென்ற கடப்பாடில்லை. தாங்களே விரும்பினால் மட்டுமே பின்பற்றல் வேண்டும் திருப்திப்படாத வழக்காளிகள் 'கன்சபாவை' விட உயர் மன்றத்திற்கு மேன் முறையீடு செய்யலாம். அக்காலத்தில் கிராமங்களைவிட மத்திய அரசு அதிக தூரத்தில் இருந்தமையால் சிறு சிறு பிரச்சினைகளைப் பொறுத்தளவில் கிராம கன்சபாக்கள் அதிக அதிகாரத்தைப் பெற்றிருந்தன.

'ரட்ட சபை' என்பது மற்றொரு பிரபலமான ஸ்தாபனமாகும். வன்னி, நுவரகலாவீவ, தம்மன்கடுவ ஆகிய பகுதிகளில் இருந்த மற்றொரு முக்கியமான நீதி முறை இதுவென்று கூறலாம் K. A. கப்புறுகாமி என்பவரால் இதன் கடமைகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. சாதிச் சட்டங்கள் வழக்காறுகள் பற்றியே இது பெரும்பாலாக தீர்த்தது. வன்னிப் பகுதிகளில் சிறு சிறு உத்தியோகத்தர்கள் ரட்ட சபை தனது கடமைகளையாற்ற உதவி புரிந்தனர். ஹெய்லி என்பவரின் கருத்துப்படி ரட்ட சபைகள் கன்சபாவிலிருந்து வரும் மேன் முறையீடுகளை விசாரித்தனர். இக்கருத்தை தம்பையாவும் ஏற்கின்றார். ரல்ப் பீரிஸின் **(Ralph Peiris)** கருத்துப்படி வரண்ட பிரதேசங்களில் உள்ள ரட்ட சபைகளே மேன் முறையீட்டு நியாயாதிக்கத்தைப் பெற்றிருந்தன. மேலும் இவர் கூறுவது என்னவெனில் வரண்ட பிரதேசங்களில் இருந்து தலைநகரம் அதிக தூரத்தில் இருந்தமையாலேயே ரட்ட சபைகளுக்கு மேன்முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யீட்டை விசாரிக்கும் அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தன என்கிறார். மேலும் ஹெய்லி தனது நூலில் நுவரகலாவீவ பகுதியிலுள்ள வன்னிப் பிரிவுகள் பழைய வழக்காறுகளின்படி திசாவையைப் போன்ற அதிகாரத்தைக் கொண்டிருந்தன என்கிறார்.

நாம் இதுவரை கண்டிய இராச்சியத்தின் கீழிருந்த நீதி நியாயத் துறையின் அமைப்பு களைக் கவனித்தோம் இது தவிர கண்டிய இராச்சியத்தின் கீழ் மிக விசித்திர மானதும் தற் காலத்தில் எண்ணிப்பார்க்க முடியாதளவு கொடுமை வாய்ந்ததுமான தண்டனைகளும் காணப் பட்டன.குற்றவாளியை யானைகளைக் கொண்டு மிதிப்பித்தல் குளம் அல்லது ஆறுகளில் மூழ்கச் செய்தல் போன்ற சித்திரவதைக்குள்ளாக்கும் தண்டனைகளும் இருந்தன.

அக்கால குற்றவியல் சட்டத்தின் (History of the law of crime) சரித்திரம் பற்றி சிறிதளவு தகவல்களே காணக் கிடைத்துள்ளன. இங்கும் ஆதிகாலத்தில், ஏனைய நாடுகளைப் போன்று பெரும்பாலான குற்றங்கள் தீங்கு என்பதற்குள்ளேயே உள்ளடக்கப்பட்டன.

அக்காலத்தில் கொடுக்கப்பட்ட மரணதண்டனை மிக்க கொடுமைவாய்ந்ததாய் இருந்தது. மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள் யானைகளால் பல துண்டுகளாக கிழித்தெடுக்கப்பட்டார் களென நொக்ஸ் குறிப்பிடுகின்றார். ஆனால் டி ஒய்லி கீர்த்தி ஸ்ரீ காலத்திலிருந்து இத்தகைய தண்டனைகள் காணப்படவில்லை என்கிறார். சில சமயங்களில் திருட்டு போன்ற குற்றங்களுக்கு தண்டனையாக ஏழு கோறளை, ஊவா, மாத்தளை, தும்பறை, ஹேவாஹெட்ட போன்ற பகுதி களிலிருந்து வேறு பகுதிகளுக்கு அனுப்பப்பட்டார்கள். சில சமயம் இவ்வாறு அனுப்பப்படும் கிராமங்கள் சுகாதார வசதியற்றதாகவும், பெரும்பாலும் இறப்பைத் தரக்கூடிய தன்மை வாய்ந்ததாயும் இருந்தன. இவ்வாறு அனுப்புகையில் தலை நகரிலிருந்து வெகு தூரத்திலுள்ள கிராமங்களுக்கே அனுப்பினர்.

சில குற்றங்களுக்கு சிறைவாசமும் தண்டனையாக அளிக்கப்பட்டது. குற்றவாளி கண்டி பெரிய சிறையிலோ அல்லது தலைமை அதிகாரிகளின் வீட்டிலோ அல்லது 'கட்டுபுள்ளே' கிராமங்களுக்கோ (Katupulle Villages) சிறை அனுப்பப்பட்டனர். சில சமயம் தண்டனை யாக அவர்களின் அந்தஸ்து குறைக்கப்பட்டது. ஆதிகால கண்டியர்கள் அனைவரும் தங்களது முடியை நீளமாக வளர்த்திருந்தார்களாகையால் முடி கட்டையாக வெட்டப்பட்டவர்கள் அந்தஸ்து குறைக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டனர். எனவே சிலருக்கு தண்டனையாக அவர்களது முடி வெட்டப்பட்டது. பொதுவாக இத்தகைய தண்டனை எஜமானர்களால் தங் களது அடிமைகளுக்கு அளிக்கப்பட்டது. சில சமயம் சுதந்திர மனிதர் மீதும் இத் தண்டனை புகுத்தப்பட்டது மிக உயர்ந்த சாதியினரை மிகக் குறைந்த சாதியான ரொடியா (Rodiyas) சாதிக்குத் தள்ளுதல் அதி கொடுமையான தண்டனையாகக் கருதப் பட்டது இத்தகைய தண்டனைகள் அரசனாலேயே கொடுக்கப்பட்டன

காலப் போக்கிலே இத்தகைய கொடுமையானதும் காலத்திற்கு ஒவ்வாததுமான தண்டனைகள் நீக்கப்பட்டதுடன் ஐரோப்பியர் வருகையுடன் முறையானதும் ஐரோப்பிய நாடு களுடன் ஒத்ததுமான தண்டனைகள் வழங்கப்பட்டன. 1852-ம் ஆண்டு வெளியிடப்பட்ட 5-ம் இலக்கச் சட்டத்தால் முழு கண்டிய குற்றவியல் சட்டமும் ஒழிக்கப்பட்டன. தற் போது 1883-ம் ஆண்டு வெளியிடப்பட்ட 2ம் இலக்கச் சட்டமான குற்றவியல் தண் டனை சட்டக் கோவையிலேயே எமது நாட்டின் முழுத் தண்டனைகளும் அடங்கியுள்ளன.

இதுவரை கண்டியஇராச்சியத்தின் கீழிருந்த சில முக்கியத்துவம் வாய்ந்த நீதித் துறையின் அமைப்பு செயல்முறை என்பவற்றைப் பார்த்தோம் அக்கால நீதித்துறை அமைப்பிலே அதிகாரப் பிரிவினை தெளிவாகக் காட்டப்படாவிடினும் கூட அங்கிருந்த அமைப்பின் முக்கியத்துவம் என்னவெனில் 'படிமுறை அமைப்பு முறையாகும்' அதாவது இந்நீதி முறையானது 'பிரமிட்' போன்று படிப்படியாக உயர்ந்திருந்ததுடன் அந்நீதி முறையின் உச்சியில் கடைசி நீதி மன்றமாக அரசன் அமர்ந்திருக்க இத்தகைய படி முறை அமைப்பைக் கொண்ட நீதிமன்றங்கள் என்னும் சங்கிலியை இணைக்கும் கடைசித் தொடுப்பாக விதானைமார்களும் கிராமத் தலைவர்களும் இருந்தனர்.

1. The Kandyan Kingdom by Mrs L. S. Dewaraja.
2. Sir John D Oyley
3. Laws and Customs of the Sinhalese Kandyan Law by Hayiey.
4. Dominion of Ceylon by Genning & Thambiah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

**T. நித்தியானந்தன்**

புங்குடுதீவு—8

அன்பளிப்பு

**N. பேரின்பநாயகம்**

45, 4-ம் குறுக்குத்தெரு

கொழும்பு—11

அன்பளிப்பு

கி இராசேந்திரன்
செ. சிவகணநாதன்
ச. நடேசமூர்த்தி
170, மெலிபன் வீதி
கொழும்பு—11

**சி. கந்தசாமி**

95, 4-ம் குறுக்குத் தெரு

கொழும்பு—11

With Best Compliments
From

★ *Saratha Stores* ★

*No. 96, 98 York Street,*

**COLOMBO.**

Telephone: 2 2 0 7 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Largest Stockists of**

## CEYLON POP RECORDS

* Ceylon Thamil Records
* Indian Thamil Records,
* Sinhala Records
* Hindi Records
* English Records

# PARAMES KONESH RECORD BAR

**Head Office :** Thirukonamalai

**Branch :** 9/1/1 Stanley Road, Jaffna

THE FIRST CEYLON THAMIL RECORD PRODUCERS

**For Your Orders Please Contact**

**Parames Konesh Record Bar**

THIRUKONAMALAI

**PKM Records only Produced by Parames Konesh Production**

*With Compliments*

*from*

## Zahira Jewellery

**Jewel Merchants**

No. 132, North Coast Street

Trincomalee

* Manipury & Nylex Sarees
* Organty for Frocks
* Handloom Sarees & Materials
* Art Silk & Nylon Sarees
* Multi colour Laces & Fancy Lace
* Embroidery Worked Sarees
* Dress Materials
* Suitings & Shirtings

## Mohamed's Drapery Stores

**77, North Coast Street**

**Trincomalee**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கப் பவுண் வைர நகைகள்
எங்களிடம் மலிவாகப் பெற்றுக்
கொள்ளலாம்.

## பொ. அம்பலவாணர்

தங்க, வைர, நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7199 தந்தி: 'வைரம்'

ஆனி 6-ம் திகதி வளம் மிகுந்த ஏடாக
வெளிவர இருக்கும்

↓

## "இளந்தென்றல் 76"

இனிமையான உள்ளங்களுக்கு
இதமளிக்கும் இன்பத்தென்றலாக வீச
என்றென்றும் அன்பு இதயத்தால்

வாழ்த்துக்கள் வழங்கும்

↓

உங்கள் அன்பு அறிவிப்பாளர்
கலைச் செல்வன் கே. எஸ். ரகு

கல்வி

* G. A. Q.
* First in Laws.
* க. பொ. த. (சாதாரணம்)
க. பொ. த. (உயர்தரம்)
கலை விஞ்ஞான
வர்த்தக பாடங்களுக்கு

## யாழ் சட்ட நிலையம்

81, பிரதான வீதி,

யாழ்நகர்

உங்களுக்குத் தேவையான சகல வித
மான புடவைத் தினிசுகள் றெடிமேட்
உடைகள்

மற்றும்

அழகுசாதனப் பொருட்கள் யாவும்
நிதானவிலையில் பெற்றுக்கொள்ளலாம்

இன்றே விஜயம் செய்யுங்கள்

## ஸ்ரீ வரதாஸ்

புடவை மாளிகை

155, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான புடைவைகளுக்கு முதன்மை
ஸ்தாபனம்

* குறித்த காலத்தில்
* குறைந்த செலவில்
* சிந்தைகவரும்
* வண்ண டிசைன்களில்

சேலைகளை அச்சிடுவதற்கு

↓

**த. குமாரசாமி**

ரெக்ஸ்ரைல்ஸ்

42, 44, பெரியகடை
யாழ்ப்பாணம்

போன்: 7034

கொழும்பு வளாகத்
தமிழ்ச் சங்கத்திற்கு
வாழ்த்துக்கள்

**கல்வி போதனு நிலையம்**

T. லோகநாதன்

தகுந்த முறையில்
ரேடியோ திருத்துவதற்கு
உரிய இடம்

**ரேடியோஸ் பதி**

நம். 40, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

அன்பளிப்பு

**முருகன் எலெக்றிக்கல்
ஸ்ரோர்ஸ்**

6/8 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான நகை வியாபாரிகள்
தெ. சி. நா. சுப அருணுசலம் செட்டியார்
உரிமையாளர்
ஸ்ரீ முருகன் அன் கோ
இல. 212, பிரதான வீதி, கல்முனே.
ටී. ඇස්. ඇන්. ඇස්පී. අරුණාසලම් සෙට්ටියාර්
අයිතිකරු
ශ්‍රී මුරුගන් ඇන් කෝ
212, කෙලින් වීදිය, කල්මුනේ.
*T. S. N. SP. Arunasalam Chettiar*
Prop: **SRI MURUGAN & Co.**
No. 212, Main Street, Kalmunai.

நம்பிக்கை நாணயத்துடன் கூடிய தரமுள்ள
நகைகள் உடனுக்குடன் செய்து தரக்கூடிய
ஸ்தாபனம்

★ **நாஞ ஜுவலர்ஸ்** ★

இல. 33. காசு வீதி, திருகோணமலை.
புதிய பல நகைகள் பூண்டு பொலிவுடன் திகழ
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்
உங்கள் அன்பான வருகைக்கு எமது நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.''

உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன் வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப் படுவான்.

## அன்பான வேண்டுகோள்

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள் அமோக ஆதரவு தந்தால் நாங்கள் நாட்டுக்கு நன்மை தரும் இலவச வெளியீடுகளைப் பரப்ப உதவியாக இருக்கும்.

மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியானவை.

வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க.

கிளை: 79, மெஜன்சர் வீதி,
கொழும்பு - 12
தொலைபேசி: 36063

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிற்சாலை**
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7233



சிறந்த ரக சேலைகட்கும் மற்றும் தேவையான சகலவிதமான புடைவைகளுக்கும் திருமண வைபவங்களுக்குமுரிய சேலைகட்கும்

நம்பிக்கையான ஸ்தாபனம்

❋

# கணேசன் ஸ்ரோர்ஸ்

63, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*With Best Compliments*

*of*

★

**LANKA TRICOTTING INDUSTRIES LTD.**

No. 29 3/2, GAFFOOR BUILDING

MAIN STREET, COLOMBO — 1

Phone: 22445/6 Gram: " Latricot "


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

தமிழ் ஆங்கில பாடநூல்கள்

இலக்கிய நூல்கள்

பாடசாலை உபகரணங்கள்

அனைத்தும்

நியாயமான விலையில் கிடைக்குமிடம்

**விஜயலெட்சுமி புத்தகசாலை**

248, காலி வீதி

கொழும்பு - 6

தொலைபேசி : 88930

அன்பளிப்பு

**யாழ். மெட்டல் இன்டஸ்ரீஸ்**

63, பேங்க்சால் வீதி

கொழும்பு—11

250, 252, கே. கே. எஸ். வீதி

யாழ்ப்பாணம்

*With Best Compliments*

*from*

**RIZANS**

159, Galle Road

Wellawatte

Colombo-6

**Phone . 84753**

**WITH BEST WISHES**

**Imtiaz Bros.**

122, 2nd Cross Street

COLOMBO-11

**Phone : 22832**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments
from

**Geetha Trading Co.**
**Importers & General Merchants**

4, Dam Street,

COLOMBO-12.

With the best Compliments
from

**S. K. SHELLIAH**

Punguduthivu-10.

With the best Compliments
from

**Latha Trading Co.**
**General Merchants**

59, Dam Street,

COLOMO-12.

With the best Compliments
from

**Jeeva Enterprise**

308, Sea Street,

COLOMBO-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# நோயாளிகளுக்குப் பிரேதத்தின் இரத்தம் ஏற்றுதல்

டாக்டர் க. இந்திரகுமார்
(சட்ட மருத்துவ விரிவுரையாளர், மருத்துவ பீடம்)

1930-ம் ஆண்டில் ஒரு நாள்.

சோவியத் யூனியனின் தலைநகரான மாஸ்கோவில் உள்ள மருத்துவ நிலையத்தில் என்றும் இல்லாத ஒரே பரபரப்பு. தற்கொலை செய்ய முயன்ற ஒரு பொறியியலாளரின் உயிரைக் காப்பாற்ற மருத்துவ நிபுணர்கள் போராடிக் கொண்டிருந்தனர். மரணத்தின் வாயிலிலே ஊசலாடிக்கொண்டிருந்த அம் மனிதன் உடலினுள்ளே ஒரு பிரேதத்தினுடைய இரத்தம் சொட்டுச் சொட்டாக ஏறிக்கொண்டிருந்தது.

அவன் பிழைப்பானு? ஒரு பிணத்தின் இரத்தம் உயிருள்ள மனிதனின் உடலில் பாய்ந்ததாக இதற்கு முன் வரலாறே இல்லையே. அப்படியிருக்க, இந்தப் பிரேதத்தின் இரத்தமாற்றுப் பிரயோகம் (Cadaveric Blood Transfusion) வெற்றி அளிக்குமா? மருத்துவர்கள் மனதிலே ஒரு பெரிய கேள்விக்குறி; அவர்களது ஒவ்வொரு செயலிலும் ஒரு துடிப்பு; அவர்களுடைய முகத்திலே நிறைந்த ஆர்வம்.

பிரேத இரத்தம் உயிர் இரத்தத்துடன் கலந்தது — பொறியியலாளருடைய நாடிகள், நாளங்கள், மயிர்த்துளைகளிலெல்லாம் இந்த "ஜீவ நீர்" புகுந்து சுற்றிச் சுற்றி வந்தது; அவன் கண் விழித்தான் — மருத்துவர்கள் முகம் மலர்ந்தனர்; அவன் உயிர் ஜீவ மரணப் போரில் வெற்றி பெற்றது — மருத்துவ சகாப்தத்தில் புதியதொரு அத்தியாயம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டது; அவன் உயிர் பிழைத்தான், எழுந்தான், வாழ்ந்தான் — உலகம் திகைத்தது, வியந்தது, மகிழ்ந்தது.

மாஸ்கோவிலுள்ள ஸ்கிலிபோஸோவ்ஸ்கி அவசர சிகிச்சை நிலையத்தில் உலகை உலுக்கிய இந்தப் பிரேத இரத்தமாற்றுப் பிரயோகம் நடைபெற்று இன்று 46 ஆண்டுகளாகிவிட்டன.

சோவியத் நாட்டில் கையாளப்பட்டு வரும் பிரேத இரத்த மாற்றுப் பிரயோகம் பற்றி நான் முதன் முதலில் கேள்விப்பட்டது 1966-ல் ஆகும். கொழும்பு மருத்துவ பீடத்தில் ஒரு மாணவனுக இருந்த காலம் அது. எனது அன்புக்குரிய காலஞ்சென்ற உடற்கூறியல் பேராசிரியர் ஏ. ஸி. ஈ. கொக் அவர்கள் தமது விரிவுரைகளின்போது இதுபற்றிக் குறிப்பிட்ட நாள் முதல் இதனை நேரில் காணவேண்டும் என்ற ஆவல் என் மனதில் எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற ஆண்டு சோவியத் யூனியனுக்கு நான் விஜயம் மேற்கொண்ட போது இக்கனவு நனவாகியது. ஸ்கிலிபோஸோவ்ஸ்கி நிலையத்துக்குச் சென்று, பிரேத இரத்தமாற்றுப் பிரயோகம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை நேரில் கண்டறியவும், அதைப்பற்றி பல்வேறு தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தது. அந் நிலையத்தின் இனிய துணை அதிபரான பேராசிரியர் பஃபோமோவ் யியோஸ்கியுடன் (Professor Pafomov Yeozgyi) ஒரு முழு நாளைச் செலவிடும் வாய்ப்புக் கைகூடியது.

ஆராய்ச்சி பலன் தந்தது!

சோவியத்தின் பிரேத இரத்தமாற்றுப் பிரயோக முறைகளின் வெற்றிக்கு நாய்கள் மீது விளாடிமீர் ஷாமோவ் (Vladimirn Shamov) என்ற மருத்துவர் நீண்ட காலமாகச் செய்த பல பரிசோதனைகளே வழிவகுத்தன. தீவிர இரத்த சோகை (Anaemia) ஏற்பட்டு இறக்கும் தறுவாயிலிருந்த நாய்களுக்கு இறந்த நாய்களின் இரத்தத்தை ஷாமோவ் ஏற்றினர். இரத்தசோகை நீங்கி நாய்கள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்தன. பிணத்தின் இரத்தம் நச்சுத்தன்மை பயக்க வல்லது என்ற பீதியை ஷாமோவின் பரிசோதனைகள் பறக்கடித்தன.

பிணத்தின் இரத்தம் நச்சுத்தன்மை அற்றது. அதனை உயிருள்ள மிருகங்களுக்கும் செலுத்த முடியும். பலமணி நேரத்திற்குப் பிணத்தின் இரத்தம் பழுதடையாது கிருமிகளற்ற நிலையில் விளங்கும். நச்சுத்தன்மை உண்டாவது அதன் பின்னரே. ஒரு மிருகம் இறந்தபிறகு அதனுடைய இரத்தம் தனக்கே உரித்தான பண்புகளை இழக்காமல் அவற்றைத் தொடர்ந்தும் வைத்திருக்கிறது. பிணத்தின் இரத்தத்தை உயிர் மிருகத்தின் இரத்தச் சுற்றோட்டத்தில் கலந்த பின்னரும் பிண இரத்தத்திலுள்ள செங்குழியங்கள் (Red Blood Corpuscles) ஒட்சியேற்றம் (Oxygenation) அடைகின்றன.

தமது ஆய்வுகளின் உற்சாகமூட்டும் முடிவுகளை 1928-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெற்ற மூன்றாவது உக்ரேனியன் அறுவைச் சிகிச்சை மாநாட்டில் ஷாமோவ் அறிவித்தார். இந்த வெற்றியைத் தொடர்ந்தே தற்கொலை முயற்சித்த பொறியியலாருக்கு பிரேத இரத்தம் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது.

சேர்ஜி யூடின் (Sergei Yudin) என்ற மருத்துவரே பொறியியலாளருக்குப் பிரேத இரத்தம் செலுத்தியவராவர். இதனைத் தொடர்ந்து இன்னும் ஆறு நோயாளிகளுக்கு பிரேத இரத்தத்தை ஏற்றி யூடின் வெற்றி கண்டார். 1930-ம் ஆண்டில் நடைபெற்ற நான்காவது உக்ரேனியன் அறுவைச் சிகிச்சை மாநாட்டில் ஏழு பிரேத இரத்த மாற்றுப் பிரயோகங்களினதும் வெற்றிகரமான முடிவுகளை யூடின் அறிவித்தார்.

இவற்றின் விளைவுகளை ஆராயவென சோவியத் அரசு ஒரு இராணுவ விசாரணைக் குழுவையும் ஒரு இராணுவ விசாரணைக் குழுவையும் நியமித்தது. இவை யூடினுடைய பரிசோதனைகளுக்கு ஸ்திரமான விஞ்ஞான அடிப்படை உண்டு என்றும், அவை தொடரவேண்டும் என்றும் விதந்துரைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இத்தகைய சாதனையை நிறைவேற்றுவதற்குத் தடையாகச் சில சிக்கல்கள் இருந்தன. இரத்தத்தை பழுதடையாமல் சேமித்து வைப்பது ஒரு புதிராகவே விளங்கியது. எனவே இரத்ததானம் செய்பவரிடம் இருந்து இரத்தத்தைப் பெற்ற மாத்திரத்தே அதற்குச் சித்திரேற்று (Citrate) கலந்து உடனடியாக நோயாளிக்குச் செலுத்த வேண்டியும் இருந்தது, இரத்தம் திரளுவதை (Clot) தடுப்பதற்கே சித்திரேற்று கலக்கப்பட்டது. இந்த நிலையிலே, 5% சித்திரேற்றுக் கரைசலை இரத்தத்துடன் கலந்து, அதை 8—4 பாகை சென்டிகிரேட் குளிர்நிலையில் வைத்திருந்தால் இரத்தம் இரு கிழமைகளுக்குப் பழுதடையாமல் இருக்கும் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

1932-ம் ஆண்டில் பாரிஸ் நகரத்தில் நடைபெற்ற தேசிய அறுவைச் சிகிச்சைச் சங்கத்தின் கூட்டத்தில் 100 பிரேத இரத்த மாற்றுப் பிரயோகங்களைத் தாம் வெற்றிகரமாக நிறைவேற்றியதாக, டாக்டர் யூடின் அறிவித்தார். இதனைத் தொடர்ந்து சோவியத் நாடெங்கும் பிரேத இரத்த மாற்றுப் பிரயோகங்கள் மென்மேலும் செய்யப்படலாயின. சோவியத் மருத்துவர்கள் இதைப் பற்றி தீவிர ஆராய்ச்சியில் ஈடுபடலாயினர்.

பிரேத இரத்தத்தின் பண்பு புரிந்தது! டாக்டர் மாறியா ஸ்கன்டினாவும் (Dr. Maria Skundina) டாக்டர் ஆசினை றஸகோவும் (Dr. Arsenii Russakov) பிரேத இரத்தத்திற்கே உரித்தான சில விசேஷ பண்புகளைக் கண்டுபிடித்தனர்.

பிரேத இரத்தத்தின் பண்பு புரிந்தது!

டாக்டர் மாறியா ஸ்கன்டினாவும் (Dr. Maria Skundina) டாக்டர் ஆசினை றஸகோவும் (Dr. Arsenii Russakov) பிரேத இரத்தத்திற்கே உரித்தான சில விசேஷ பண்புகளைக் கண்டுபிடித்தனர்.

நீண்டகாலம் நோய்வாய்ப்பட்டிராமல் திடீரென இறக்கும் மனிதர்களுடைய இரத்தத்தை வெளியேறச் செய்தால் அது இரத்தக் குழாய்களிலிருந்து திரவ நிலையிலேயே வெளிவரும் 20 முதல் 30 நிமிடங்கள் வரை அது திரவ நிலையிலேயே இருக்கும். அதன் பிறகுதான் அது திரளும் ( Coagulates ), இரத்தத்திலுள்ள பைபிரினோஜன் (Fibrinogen) என்னும் புரதம் பைபிரினாக (Fibrin) மாறுவதாலேயே இத் திரட்சி ஏற்படுகிறது.

திரட்சி அடைந்த இரத்தம் அரை மணியிலிருந்து ஒன்றரை மணி நேரத்திற்குள் மறுபடியும் தானாகவே திரவ நிலையை அடைகிறது. இந் நிகழ்ச்சியை பைபிரினோலைசிஸ் (Fibrinolysis) என்று அழைப்பர்.

சுகதேகியாக வாழ்ந்து, திடீரென மரணம் அடையும் மனிதருடைய இரத்தத்திற்கு மட்டுமே இத்தகைய பண்பு உள்ளது ஒருவர் எவ்வளவுக் எவ்வளவு விரைவாக பைபிரினோலைசிஸ் நடைபெறும். ஆனால் ஒருவர் நோய்வாய்ப்பட்டு இருந்து. நீண்டகாலம் வேதனைப்பட்டு இறந்தாரேயானால் பைபிரினோலைசிஸ் நடைபெறுவதில்லை. இவர்களுடைய திரட்சியுற்ற இரத்தம் மறுபடி திரவநிலையை அடைவதே இல்லை. அது சிதைவுற்று அழிந்துபோகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இதயத்தசையின் இன்பாற்று நிலை (Myobardial Infarction), அதி பர அமுக்க இதயநோய் ((Hypertensive Heart Disease), அற்ககோல் நஞ்சாதல் (Alcoitolic Intoxication), மின்சார அதிர்ச்சி (Electric Shock) போன்ற காரணங்களால் திடீரென இறப்பவர்களின் இரத்தம் மிக உகந்தது. விபத்துக்களில் சிக்கித் திடீர் மரணம் எய்துவோரின் பிரேதங்கள் உகந்தவை அல்ல. இவர்களுடைய இழையங்கள் (Haemorrhage) நசுக்கப்படுவதோடு தீவிர குருதிப் பெருக்கும் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. அத்தோடு தொற்று (Infection) ஏற்பட்டிருக்கக் கூடிய சாத்தியக்கூறுகளும் உண்டு.

பிரேத இரத்தத்தின் இத்தகைய பண்பு இரு முக்கிய சிக்கல்களுக்கு விடையளித்தது. திரளெதிரிகள் (Anti Goagulants) இல்லாமலும் இரத்தத்தைச் சேமித்து வைக்கும் தயாரிப்புகள் (Conserving Preparations) இல்லாமலும் இரத்தத்தை எப்படி உபயோகிக்கலாம் என்ற கேள்விகளுக்கு விடை கிடைத்தது. 1932 முதல் பிரேத சிந்திரேற்றோ அல்லது வேறெந்தச் சேர்க்கையுமோ கலக்காமல் மிக இயற்கையான நிலையிலேயே உபயோகிக்கப்படலாயிற்று.

இரத்தத்தில் பைபிரின் குறைவாகக் காணப்பட்டால் அது இரத்தம் சிதைவுறுகிறது என்பதன் அறிகுறி அல்ல என்று உயிரியல் இரசாயன ஆய்வுகள் நிரூபித்தன. பைபிரினோலைசிஸ் நடைபெறும்போது புரத மூலக்கூறு (Molecule) கூட்டப்பிரிவு (Dissociation) அடைவதில்லை. அத்தோடு, பைபிரின் புரதம் கொண்ட இன்னொரு புதிய வஸ்துவாக மாற்றம் அடைகிறது என்று கருத இடமளிக்கும் சில தகவல்களும் கிடைத்தன. எனவே பைரினோலைசிஸ் என்பது சிதைவினதும் இறப்பினதும் அறிகுறி மட்டுமல்ல, உயிர்வாழ்வின் ஒரு அறிகுறியும் கூட என்றாயிற்று. பெண்களுக்கு மாதவிடாயின்போது வெளியேறும் இரத்தமும், வயிற்றறை இரத்தமும் வழமையாகத் திரட்சி அடைவதில்லை. இங்கே உயிருள்ள நிலையிலேயே பைபிரினோலைசிஸை ஒத்த சில நிகழ்ச்சிகள் நடைபெறுவதையே இது உணர்த்துகிறது.

செய்முறை விபரம் விளங்கியது!

ஸ்கிலிபோஸோவ்ஸ்கி நிலையத்தில் பிரேத இரத்தம் பெறப்பட்டுச் சேமிக்கப்படுவதை நான் நேரில் கண்டேன்.

திடீர் மரணம் உறுவோரின் உடல்களைக் கொண்டு வருவதற்கென விசேஷ அம்புலன்ஸ் வண்டிகள் இங்கு எப்போதும் தயாராக உள்ளன. பிரேதங்களிலிருந்து இரத்தம் சேகரிப்பதற்கு இந் நிலையத்தில் கிருமியழிக்கப்பட்ட அறுவைச் சிகிச்சை அறைகள் உள்ளன. இங்கே ஒரு டாக்டரும் இரு தாதிகளும் 24 மணி நேரமும் தொழிலாற்றிக் கொண்டிருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் (1) தீவிர திரென்டெலென்பேர்க் நிலையிலே அறுவைச் சிகிச்சை மேசை சரித்து வைக்கப்பட்டிருப்பதையும் போத்தல்களிலுள்ளே பிரேத இரத்தம் சேர்வதையும் காண்க.

பிரேதத்தை அறுவைச் சிகிச்சை மேசையின்மீது தீவிர திறென்டெலன்பேர்க் நிலையிலே (Extreme Trendelenburg's Position) சரித்து வைக்கின்றனர் (படம் 1 பார்க்கவும்) அடுத்ததாக பிரேதத்தின் வலது பக்க உள் ஜுகுலர் நாளம் (Internal Jugular Vein) வேட்டப்படும் நாளத்தின் இரு வெட்டுமுகங்களுக்குள்ளும் இரு மெல்லிய கண்ணாடிக் குழாய்கள் (Cannula) சொருகப்படுகின்றன (படம் 2 பார்க்கவும்) இரு ரப்பர்க் குழாய்கள் மூலமாக கண்ணாடிக் குழாய்கள் கண்ணாடிப் போத்தல்களுடன் இணைக்கப் படுகின்றன.

வழமையாக ஒரு அறுவைச் சிகிச்சையின்போது கையாளப்படும் சகல விதமான கிருமியழிப்பு வழிமுறைகளும் (Sterilisation Procedures) இரத்த சேகரிப்பின் போது கையாளப்படுகின்றன.

புவியீர்ப்புச் சக்தியின் துணையுடன் இரத்தம் போத்தல்களினுள்ளே இறங்குகின்றது. இவ்வாறுக 2—4 லீற்றர் இரத்தம் ஒரு வயது வந்தவரின் பிரேதத்திலிருந்து பெறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஏற்கெனவே கூறியது போல் பிரேத இரத்தத்திற்கு சேமித்து வைக்கும் தயாரிப்புகள் சேர்க்கப்படுவதில்லை.

ஆனால் 25 முதல் 30 நாட்கள் வரை இரத்தத்தைச் சேமிப்பதானால், சுக்குரோசு, ஆடெனின், வீவேமைசிற்றின் (நுண்ணியிர்க்கொல்லி மருந்து) என்பனவற்றை காய்ச்சிவடித்தநீரில் குறிப்பிட்ட பிரமாணங்களில் கரைத்த ஒரு திரவத்தை இரத்தத்திற்கு இட்டுப் பாதுகாத்து வைக்கிறார்கள்.

நாளங்கள் மூலமாக, எடுக்கக்கூடிய இரத்தத்தை எடுத்து முடித்த பின்னர் ஒரு விசேஷ உபாயத்தைக் கையாண்டு இன்னும் சிறிது இரத்தம் பெறப்படுகிறது. அறுவைச் சிகிச்சை மேசையை கிடையான (Horizontal) நிலைக்குக் கொண்டுவருகின்றனர். உட் கரோற்றிட் நாடின் உள்ளே (Internal Carotid Artery) ஒரு லீற்றர் சக்கரோஸ் – குளுக்கோஸ் கரைசலை ஊசி மூலம் செலுத்துகின்றனர். இதன் பின் மேசை மீண்டும் தீவிர திறெண்டலெலன்பேர்க் நிலைக்குச் சரிக்கப்படுகிறது. இவ்வாறு இன்னும் இரண்டு லீற்றர் ஐதான இரத்தம் சேர்க்கப்படுகிறது. செங்குழியங்களும் ஹீமோகுளோபினும் (50 – 60%) குறைந்த அளவில்தான் இந்த ஐதான இரத்தத்தில் உள்ளன.


பிரேதத்திலிருந்து சேகரிக்கப்பட்ட இரத்தம் ஆய்வுகூடப் பரிசோதனைகள் முடியும்வரை குளிர்சாதனப் பெட்டியில் சேமித்து வைக்கப்படுகிறது. சேகரித்த இரத்தம் எப்பிரிவைச் சேர்ந்தது என்பது கணிக்கப்படுகிறது. ஹீமோகுளோபின் கொலெஸ்ரெரோல் ஆகியனவற்றின் இரத்த அளவுகள் நிறுவப்படுகின்றன. ஐந்து நாட்களுக்கு அடுத்து பற்றீரியவியல்ப் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. சில வேளைகளில் செங்குழிய அடையல் வீதமும் (Erythrocyte Sedimentation Rate) மறைவாக நடைபெறும் குருதிப் பிரிவும் (Concealed Haemolysis) கணக்கிடப்படுகிறது. அத்தோடு, பிரேத அறுவைப் பரிசோதனையின் போது, அங்கங்கள் யாவும் கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டு, அதன் முடிவுகள் திருப்திகரமாய் இருந்தாற்றான் அப்பிரேதத்தின் இரத்தம் உபயோகப்படுகிறது.

ஸ்கிலிபோஸோவ்ஸ்கி நிலையத்தில் மட்டும் இதுவரை ஏறத்தாழ அரை இலட்சம் பிரேத மாற்றுப் பிரயோகங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருப்பதாக பேராசிரியர் பஃபோமோவ் யியோஸ்கி எனக்குத் தெரிவித்தார். மேலும் பிரேத இரத்த மாற்றுப் பிரயோக முறையை தமது நாட்டில் புகுத்துதற்கு இந்திய அரசு விரும்பம் தெரிவித்ததை அடுத்து, பேராசிரியர் யியோஸ்கி இந்தியா சென்று மூன்று மாதகாலம் தங்கியிருந்து இச்சேவையை நிறுவுவதற்கு வேண்டிய நிபுணத்துவ ஆலோசனைகளைத் தாம் வழங்கியதாகவும் தெரிவித்தார்.

“ உங்களுடைய அரசாங்கம், உங்கள் நாட்டு இரத்த மாற்றுப் பிரயோகச் சேவையைச் சேர்ந்த இரு மருத்துவர்களை இங்கே அனுப்பத் தயாரென்றால், அவர்களுக்கு உமது நிலையத்தில் வைத்து இருவார காலம் பயிற்சிதர நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயார்.'; என்று உறுதியளித்து பேராசிரியர் யியோஸ்கி என்னை வழியனுப்பி வைத்தார்.



படம் (2) உள் ஜுகுலர் நாளத்தின் வெட்டு முகங்களினுள்ளே இரத்த சேகரிப்புக் குழாய்கள் சொருகப்பட்டிருப்பதைக் காண்க.

> தெருவில் குப்பை கூட்டுகிறவன் அரியணை அமர்ந்து அரசு புரியும் மன்னனைப் போன்ற பெருமையும் சிறப்பும் உரியவன்.
>
> — இராகுல்சங்கராயர் —

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளையும்

கலாநிதி பொ. பூலோகசிங்கம்
சிரேட்ட தமிழ் விரிவுரையாளர்

ஆறுமுகநாவலர் மறைந்தபோது மேலைப்புலோலி நா. கதிரவேற்பிள்ளைக்கு வயது எட்டு. நாவலரவர்கள் வியோகமடைந்தது பிரமாதி ஞு கார்த்திகை மீ 21வ: பிள்ளையவர்கள் அவதரித்தது பிரசோற்பத்தி ஞு மார்கழி மீ 3வ. ஆறுமுகநாவலர் கதிரவேற்பிள்ளைக்கு வித்தியாரம்பம் செய்துவைத்ததாகக் கூடத் தெரியவில்லை. ஆயினும் கதிரவேற்பிள்ளை சரிதம் நாவலரவர்கள் வரலாற்றிலே சென்று சங்கமமாகின்றது. இச் சங்கமம், இருபதாம் நூற்றுண்டின் விடியலிலே, நாவலர் மரபு மறுமலர்ச்சி காண உதவியது. ஈழத்துத் தமிழ் மக்களின் பண்பாட்டு வரலாற்றிலே, இம்மறுமலர்ச்சி இனங்காட்டத்தக்க முக்கியமான ஒரு கூறு என்பதை மனங்கொளல் அவசியமாகும்.

நாவலரவர்கள், தாம் மேற்கொண்ட பணியை. அவர்தம் வழியிலே வாழ்ந்து இலட்சியவேட்கையோடு செயற்படுத்த ஒரு வாரிசை விட்டுச் செல்லவில்லை. வி. சுப்பிரமணியபிள்ளை 1875-ம் ஆண்டில் மறைந்தபோதே நாவலரவர்கள் தமது வாரிசற்ற நிலையை உணர்ந்துவிட்டார்.

> " இருநிலத்தோர் கோபியென எடுத்துரைக்கும் என்சினத்துக்
> கொருபொழுதும் இலக்காகா தொழுகி எனதுளம் முழுவதும்
> உருகிய காதலிற் கொள்ளைகொண்ட உறவினன் சீர்
> பெருகிய சுப்பிரமணியப் பெருந்தகையோய் நீயன்றே "

என்ற நாவலர் பாடல் இரங்கற்கவி மட்டுமன்று; கையற்ற நிலையிலே எழுந்த உள்ளப் புலம்பலுமாம். சுந்தரர் குருபூசை தினத்திலே நாவலரவர்கள் ஆற்றிய இறுதிப் பிரசங்கத்தின் முடிவுரையும் வாரிசற்ற நிலையிலே எழுந்த ஆற்றுமையைக் காட்டுகின்றது.

> " பிரசங்கமுடிவிலே சனங்களை விளித்து, நான் உங்களிடத்துக் கைமாறு பெறுதலைச் சிறிதும் எண்ணுது முப்பத்திரண்டு வருஷகாலம் உங்களுக்குச் சைவசமயத்துண்மைகளைப் போதித்துவந்தேன். எனக்குப் பின் சைவசமயங் குன்றிப்போமென்று பாதிரிமார்கள் சொல்லுகிருர்கள். ஆதலால் நான் உயிரோடிருக்கும்போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக்கொள்ளுங்கள். இன்னும். என்னைப்போலப் படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய் அநேகர் வருவார்கள். ஆனல் உங்களுடைய வைவுகளைக் கேட்டுக் கேட்டுக் கைமாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப்போல் ஒருவரும் வரார்."

(த. கைலாசபிள்ளை: ஆறுமுகநாவலர் சரித்திரம்' 1919; பக். 32-33)

1870-ம் ஆண்டு மாசி மாதத்தில் ஐந்தாம் முறையாக ஈழம் மீண்டபோது, யாழ்ப்பாணத்திலே தமக்களிக்கப்பட்ட மாபெரும் வரவேற்பின்போது, நாவலரவர்கள் உணர்த்திய பீடுநிலையை, களத்திலே தனிமரம் போல நின்று ஒய்ந்த நேரத்திலே, சுந்தரர் குருபூசையிலே காணமுடியாது. நாவலர் மருகர் பொன்னையாபிள்ளை (வித்துவசிரோமணி ச. பொன்னம்பலபிள்ளை) ஆரம்பத்திலிருந்தே வேறு வழியிலே சென்றவர். நாவலரவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் சார்ந்து வாழ்ந்த ஏனைய உறவினரும் மாணுக்கரும் கூட, அவருடைய இலட்சியப் பாதையிலே, அவர் நோக்கத்திற்கிணங்க முன்னேறிச் செல்லவில்லைப் போலும். எனவேதான் சித. சு. சபாபதிச்செட்டியார் பெயர் இன்னும் நிலைபெறுகின்றது ; அவர் நாவலரவர்களின் ஈமக்கிரியைகளை, அவர் வேண்டுகோளின்படி செய்தவர், ஆயினும் நாவலரவர்களின் இனத்தவரும் மாணுக்கரும் நாவலரவர்களின் காலத்திலேயே ஆதீன கர்த்தர்கள் போலப் பாவனை செய்யத் தொடங்கிவிட்டனர். இந்த மனேபாவத்தினுல் ஏற்பட்டனவற்றை நாவலர் மருகரின் மாணவகர் சி. தம்பையபிள்ளை (சுவாமிநாதபண்டிதர்) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தரும சிந்தனையிலும் (1911) திரு. வி. க. வித்தியாபிமானிகளுக்கு விக்யாபன நிரசனத்திலும் (1911) காட்டியுள்ளனர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. நாவலர் பாரம்பரியத்தைப் பயன்படுத்தியவர்கள், நாவலரின் வழியிலே சென்று அதனைப் பேணுத நிலையிலே, அதன் மரபுகள் வலுவிழந்த நிலையை அடைந்தன. இந்நிலையிலேதான் மேலைப்புலோலி கதிரைவேற்பிள்ளையின் பணி ஆரம்பமாகியது.

நாவலர் மாணவகர் நல்லூர்க் க. தியாகராசபிள்ளை போன்றவர்களும் நாவலர் உள்ளம் உணர்ந்தவர்களும் கதிரவேற்பிள்ளையின் மனத்திலே நாவலர் மரபினை ஊன்றி வித்திட்டன. அம்மரபின் முக்கியத்துவத்தை வேற்று மண்ணிலே தொழில்புரியச் சென்றபோது கதிரவேற்பிள்ளை நன்குணர்ந்தார். இராமலிங்கபிள்ளை தெய்வீகநிலையை அடைந்துவிட்ட காலத்திலே கதிரைவேற்பிள்ளை தமிழ்நாடு சென்ருர். இராமலிங்கரின் அருள் மாட்சியைப் போற்றிப் புகழ முற்பட்டவர்கள் ஆறுமுகநாவலரை மறந்துவிடவில்லை ; அவர்மீதுள்ள ஆற்ருமையை மறைக்க முற்படவில்லை. இந்நிலையிலே ஈழத்தவரின் பாரம்பரியத்தை விளக்க முற்பட்ட கதிரைவேலர் நாவலராகவே மாறினுர் ; நாவலரவர்களை இழித்துரைத்தவர்களைக் கண்டிக்கப் புறப்பட்டவர் நாவலராகவே தம்மை மாற்றிக்கொண்டார். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது கதிரைவேற்பிள்ளையின் பணி நாவலர் பணியாகவே காட்சியளிக்கும்.

மாயாவாததும் சகோளரி, அத்துவித சித்தாந்த மகோத்தாரணர், சைவசித்தாந்த மகாசரபம், போலியருட்பாப் பிரபந்த நிர்க்கந்த கிஞ்சுக கண்டன சண்ட மாருதம் எனும் பட்டங்கள் கதிரைவேலரின் நாவன்மையையும் அவ்வன்மை எவ்வழியிலே பயன்படுத்தப்பட்டது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன. நாவலர் சுத்தாத்துவிதசைவ சித்தாந்தத்தைப் பரப்பப் பயன்படுத்திய பிரசங்க முறையினை நாவலருக்குப் பின்பு சிறப்பாகப் பயன்படுத்திய ஈழத்தவர்களிலே கதிரைவேற்பிள்ளை முற்கூறத்தக்கவர். பிள்ளையவர்களின் சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம், சைவபூஷண சந்திரிகை எனும் நூல்கள் நாவலரவர்களின் புனருத்தாரணப் பணிகளை ஞாபகமூட்டுவன. கதிரைவேலரின் சுப்பிரமணிய பராக்கிரமம் நாவலர் தொடர்ந்து வளர்த்த கந்தபுராண கலாசாரத்தின் விளைவு ; கதிர்காமக் கலம்பகமும் பழனித்தல புராணவுரையும் இதனை வற்புறுத்துவதை நாவலரவர்கள் அகராதி ஆக்கத்திலே கொண்டிருந்த ஈடுபாடு பிள்ளையவர்களையும் அவ்வழியிலே தூண்டியது போலும். நாவலரவர்களுக்கும் பிள்ளையவர்களுக்கும் உரையியற் பண்பிலே காணப்படும் வேறுபாடு ஈண்டு சுட்டப்படுதல் பொருத்தமாகும். ஈழத்தவரைப் பொறுத்த மட்டிலே நாவலர் பெருமானின் ஒளியிலே பிள்ளையவர்கள் ஐக்கியமாகி விட்டார் என்று கூறலாம்.

இதனுற்ருன் 1908-ம் ஆண்டிலே திரு. வி. க. எழுதிய கதிரைவேற்பிள்ளை சரித்திரம் 1969-ம் ஆண்டு மறுபதிப்பு நிலையை அடைந்தது. தமிழகத்திலே திரு. வி. க. வின் இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் 1929-ம் ஆண்டு தோன்றிய பின்பு கதிரைவேற்பிள்ளை சரித்திரம் மறக்கப்பட்டது போலும். ஈழத்திலே அந்நிலை அண்மைக்காலம் வரை இருந்துவந்துள்ளது. ம. பொ. சிவஞானக்கிராமணியாரின் ' வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு ' அந்நிலையை மாற்றுவதற்கு மறைமுகமாக உதவியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழி இலக்கியம்: ஓர் அறிமுகம்

இ. பாலசுந்தரம்
தமிழ் விரிவுரையாளர்
கொழும்பு வளாகம்.

நாட்டார் இலக்கியப்பரப்பில் பாடல்கள் கதைகள், விடுகதைகள் என்பவற்றோடு பழமொழிகளும் இடம் பெறுகின்றன. நீதிமொழிகளாகவும், மக்கள் வாழ்க்கையின் பல்வேறுபட்ட விடயங்களையுஞ் சுட்டிக்காட்டி மக்களுக்கு அறிவுறுத்துவனவாகவும், மக்கள் மொழிநடையில் அமைந்தனவாகவும் வரும் வாசகங்களே பழமொழிகளாகும்.[1]

இவை காலத்திற்குக்காலம் மக்களால் வழங்கிவரப்பட்ட சமுதாயப்படைப்புக்களாகும். குறிப்பிட்ட ஒரு நாட்டின் சமுதாய மரபுகள், நம்பிக்கைகள் வாழ்க்கை முறைகள், தொழில்முறைகள் முதலியன பற்றி அறிந்து கொள்வதற்கும், அம்மக்களின் மனப்போக்குகள் சிந்தனைகள் பற்றி தெரிந்து கொள்வதற்கும் இப்பழமொழிகள் தக்க சான்றுகளாகும்.

பழமொழிகள், பாமரர்முதல் பண்ணூல் பயின்ற புலவர்களாலும் புகழ்ந்து கூறப்படும் தன்மை வாய்ந்தன. பழமொழிகளின் பெருமை பற்றிச் சாலை இளந்திரயன் தொகுத்துக்கூறுவது ஈண்டு மேற்கோளாகத் தரப்படுகின்றது:[2]

''பழமொழிகளை யாரும் மறக்க முடியாது. ஏனெனில் பழைய மொழிக்கு மேற்சொல் இல்லை என்கிறது அயர்லாந்து. வேல்ஸ் நாடு பழைய மொழிகள் உண்மையின் குழந்தைகள் என்று இயம்ப, மக்கள் எப்படி அவர்களின் பழமொழி அப்படி என்று பழமொழிகு மக்களுறவு கற்பிக்கிறது ஸ்கொட்லாந்து. பழமொழிகளால் திருடனும் அறிவாளியாகலாம் என்பது பிரான்சின் கருத்து. பழமொழிகள் மக்கள் புழங்கும் நாணயங்கள் என்று மதிக்கும் ரஷ்யா பழமொழி அறிவிலிருந்து வருகிறது என்று புகழ்கிறது. பழமொழிகள் பொதுமக்களின் பேச்சு என்று சீனம் சொல்ல, பழமொழியில் உமி கிடையாது என்கிறது இந்தியா. வானம் இடிந்து விழுவதில்லை. பழமொழி பொய்ப்பதில்லை என்று அறுதியிடும் ஜேர்மனி தேசம்தோறும் ஒழுக்கம் வேறு, ஒழுக்கத்திற்கு ஏற்றவை பழமொழிகள் என்று விளக்கமும் தருகிறது.''

பழமொழிகள் ஆன்றவிந்தடங்கிய சான்றோர்களின் அனுபவமொழிகள். நன்னெறிக்கு மக்களைச் செலுத்துபவை – அவை ஒரு தேயத்திற்கோ அல்லது ஒரு சமயத்தாருக்கோ அல்லது ஒரு மொழியினருக்கோ உரிமையல்ல. அவை உலகப்பொதுவானவையாகும். எனினும் அவை வழங்கும் நாட்டிற்கும், மக்களின் மனோநிலைக்கும், வாழ்க்கை முறைகளுக்கும் ஏற்றவகையில் அவற்றைக் குறித்துக்காட்டும் தன்மை வாய்ந்தனவாக விளங்குவதோடு காலத்திற்குக்காலம் ஏற்படும் கருத்து மாறல்களுக்கும் ஏற்ப அவை மாற்றம் பெற்று வந்திருப்பதை சமூக வரலாற்றினதும் மக்கள் சிந்தனைப் போக்கினதும் பின்னணியிலும் பழமொழிகளை அணுகும்போது அறிந்து கொள்ளலாம்.

தமிழ் இலக்கியத்தை நோக்கும்போது தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே, பழமொழிகள் நாட்டார் இலக்கிய மரபில் மட்டுமன்றிச் செந்நெறி இலக்கிய பாரம்பரியத்திலும் உயர்பீடம் வகிப்பதாயிற்று. ஆதலினாலேயே தொல்காப்பியர் பழமொழிக்கும் இலக்கணம் வருமாறு வகுப்பதானர்.

''நுண்மையுஞ் சுருக்கமும் நனியு
முடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத்
தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு
வருஉம்
ஏதுநுதலிய முதுமொழி என்ப''[3].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கருத்தின்படி பழமொழி கூர்மையோடு நுட்பதிட்பம் உடையதாம், சொற் சுருக்கத்திற் பொருட் பெருக்கத்தைச் சுட்டும், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தன்மையதாய், விழுமியதாய், குறித்த பொருளை முடித்ததற்குக் காரணமானதாய், கருவியாய் அமைதல் வேண்டும் எனக் கூறப்படுகிறது.[4]

தமிழ் இலக்கியத்தை நோக்கும்போது நாட்டார் இலக்கியமும், கற்றறிபுலவர் யாத்த செந்நெறி இலக்கியமும் ஒன்றை ஒன்று வளம்படுத்தி வந்துள்ளன.[5] நாட்டார் பாடல்களை, கதைகளைப்போன்றே பழமொழிகளும் செந்நெறி இலக்கியத்தின் பிறப்புக்குத் துணையாக அமைந்து வந்துள்ளன. தமிழிற் காலத்திற்குக்காலம் தோன்றிய அகப்புற இலக்கியங்கள் முதலாகத் தற்கால நவீன இலக்கியங்கள் ஈறுகவுள்ள இலக்கியங்கள் பழமொழிகளைத் தன்னகத்தேகொண்டு விளங்குகின்றன.

'அளவுக்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சு'', ''பழகப் பழகப் பாலும் புளிக்கும்'' என்ற பழமொழிகளின் பொருளை குறுந்தொகை 354 ஆம் பாடல் குறிப்பிடுகின்றது. அவன் 127 ஆம் செய்யுளில் 'அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்ற பழமொழியின் பொருள் தொனித்துள்ளது. பழமொழி கூறும் நீதி மொழிகளிலும், உண்மைகளிலும் மக்களுக்கு அசையாத நம்பிக்கை இருந்தது என்பது அகநானூற்று 101 ஆம் பாடல் சான்றுபடுத்துகின்றது.

''இம்மை நன்று செய் மருங்கில் தீதில்
என்னும்
தொன்றுபடு பழமொழி இன்று
பொய்த்ததன்று கொல்''[6]

என்று தலைவி தோழியை வினவுதல் காண்க.

தம் கருத்தையோ அல்லது தம் வாதத்தையோ நிறுவுதற்கும், புரியாதனவற்றைப் புரிய வைப்பதற்கும், மக்கள் தம் பேச்சிலும் கவிஞர் தம் படைப்புக்களிலும் பழமொழிகளைக் கையாண்டு வரலாயினர். பல்லவர் காலப்பத்தி இலக்கியங்களிலும், காவியங்களிலும் சிறப்பாகப் பழமொழிகளின் ஆதிக்கத்தைக் காணக்கூடியதாகவுள்ளது.

தமிழ் இலக்கியங்களிற் பழமொழிகள் பற்றிச் சிந்திக்கும்போது பழமொழி நானூறும், பழமொழி விளக்கம் என்னும் தண்டலையார் சதகமும் சிறப்பிடம் பெறுவன. 'உலகிற் றேன்றிய மொழிகளில் எம்மொழியிலும் பழமொழிக்கென்று ஒரு தனிநூல் இருந்ததாகக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. தமிழ்மொழி ஒன்றில்தான் பழமொழிக்கென்று இருநூல்கள் காணக்கிடக்கின்றன'[7] எனக் கூறப்படுதல் நோக்குக.

பி. பி. 5ம் நூற்றுண்டளவில் மக்கள் மத்தியில் வழங்கிய 400 பழமொழிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு விளக்கம் கூறும் வகையில் மூன்றுறை அரையனுர் என்பவரால் பாடப்பட்ட 400 வெண்பாக்களைக்கொண்ட நூலே பழமொழி நானூறாகும். இந்நூலிற் குறிப்பிடப்படும் பழமொழிகளிற் பல இன்னும் வழக்கிலுள்ளன. ஆயினும் அவற்றிடையே சொல்லாட்சியில் வேறுபாட்டைக் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வேறுபாடு கால ஓட்டத்திலைா அல்லது வெண்பா யாப்பின் ஓசை அமைதியினுலோ ஏற்பட்டிருத்தல் இயல்பானதே.

இந்நூலைச் சிறந்த முறையில் பதிப்பித்து 1917ல் வெளியிட்ட செல்வக்கேசவராயர் இந்நூற்பாக்கள் பற்றிக் கூறுதல் ஈண்டுக் கவனித்தற்பாலது.[8]

''அநேகமாக எல்லாப்பாடல்களிலுமே, முன்ருவது அடி ஓர் அரசனையோ, ஒரு பெண்ணையோ குறிப்பதாக அமைந்துள்ளது. பாடலின் முதல் இரண்டு அடிகள் ஆசிரியர் சொல்ல விரும்பிய கருத்தை எடுத்துரைக்க, நாலாவது அடி ஒரு பழமொழியாக அமைந்துள்ளது. சில பாடல்களில் பழமொழி உவமையாக நின்று மேலே சொல்லப்பட்ட கருத்தை விளக்குகிறது. மற்றவைகளில் பழமொழிகளின் கருத்துப் பழங்கால வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்டு விளக்கப்பட்டுள்ளது.''

இந்நூலில் இடம்பெறும் பழமொழிகளுட் சிலவற்றை எடுத்துக்காட்டாக நோக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக. ''ஆயிரம் காக்கைக்கு ஓர் கல்'', ''இறைத்தோறும் ஊறும் கிணறு'', ''உமிக்குற்றுக் கைவருந்துமாறு'', ''கற்றலில் கேட்டலே நன்று'', ''குரங்கின் கைக் கொள்ளி கொடுத்துவிடல்'', ''ஞாயிற்றைக் கைமறைப்பாரில்'', ''திங்களை நாய் குரைத்தற்கு'', ''பாம்பறியும் பாம்பின் கால்'' ''முள்ளினால் முட்களையுமாறு'' என்பனவாம்.

அடுத்து 17ம் நூற்றாண்டிற் படிக்காசுப் புலவரால் பாடப்பட்டதாகக் கூறப்படும் தண்டலையார் சதகத்தில் அக்காலத்தில் வழக்கிலிருந்த பழமொழிகளைத் தேர்ந்தெடுத்து 109 வெண்பாப் பாடல்களில் அவற்றுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்விரு நூல்களுடனும் 1914ல் சி. ஆர். சீனிவாசக சாஸ்திரி எழுதிய 'பழமொழிப் போதனை' என்ற நூலும் பழமொழிகளுக்கு விளக்கம் கொடுப்பதாக அமைந்துள்ளமையும் சுட்டிக்காட்டப் படவேண்டியதாகும்.

தமிழிற் பழமொழியுடன் தொடர்புடைய இலக்கியங்கள் மூன்று வகையின:

I. பழமொழிகளுக்கு விளக்கம் கூறுவன

II. உவமையடிப்படையிற் பழமொழிகளைக் கையாண்டுள்ள செந்நெறி இலக்கியங்கள்

III. பழமொழித் தொகுப்புக்கள்

முதன்முதலாகத் தமிழ்ப் பழமொழிகளை 1842ல் தொகுத்து வெளியிட்டவர் பெர்சிவல் பாதிரியார் ஆவர்.[9] அகர வரிசைப்படி பழமொழிகளைக் கொண்டுள்ள இந்நூல், பழமொழிகளைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டோருக்கு முன்னோடியாக அமைவதோடு, இந்திய மொழிகள் அனைத்திலும் முதன் முதலாகத் தமிழிலுள்ள பழமொழிகளே தொகுக்கப்பட்டு நூலுருப் பெற்றன என்ற பெருமைமையும் இந்நூல் பெறுகின்றது.

1888 ஆம் ஆண்டில் ''பழமொழித் திரட்டு என்னும் தொகுப்பும், 1894 ல் வேறொரு பழமொழித் தொகுப்பும்,[12] 1896 ல் சென்னை அரசாங்கத்தினால் ஒரு பழமொழித்தொகுப்பும், 1899 லே ''ஆங்கிலம் தமிழ் ஒப்பியல் பழமொழிகள்'' என்றொரு தொகுப்பும் வெளிவந்துள்ளன. 1897 ல் ஹெர்மன் ஜென்சன் என்னும் பாதிரியார் தொகுத்து வெளியிட்ட பழமொழித் தொகுப்பும் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும், இந்நூலில் பழமொழிகள் பொருள் அடிப்படையில் வகைப்படுத்தப் பட்டுள்ளன. இதன் பின்பு 2913 ல் எஸ். அனவரத விநாயகம்பிள்ளையும் ஒரு பழமொழித் தொகுப்பை வெளியிட்டார். இதனைத்தொடர்ந்து 1946ல் ''1001 அபூர்வப் பழமொழிகள்'' என்னும் தொகுப்பு வெளிவந்தது. தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம் ''கழகப் பழமொழி அகரவரிசை'' என்னும் நூலை 1952ல் வெளியிட்டது. இதில் 10,450 பழமொழிகள் இடம் பெற்றுள்ளன. 1957 ல் வி. நந்தகோபாலன் ''பழமொழிக்கொத்து'' என்னும் நூலை வெளியிட்டிருந்தார். ''தமிழ்நாட்டுப் பழமொழிகள்'' என்னும் தலைப்பில் சுமார் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட பழமொழிகளைத் துர்க்காதாஸ் எஸ். கே. சாமி என்பார் தொகுத்து வெளியிட்டுள்ளார். கே. எல். லட்சுமணன் என்பார் 1961 ல் ''தமிழகப் பழமொழிகள்'' என்னும் நூலை வெளியிட்டுள்ளார். இவ்வரிசையில் 1962 ல் வெளிவந்துள்ள ''தென்மொழிகளில் பழமொழிகள்'' என்ற தொகுப்பும் சிறப்பிடம் பெறுகிறது,

இவற்றைவிடக் காலத்திற்குக் காலம் நாள் ஏடுகள், மாதப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியனவற்றிலும் வெளிவந்த பழமொழிகளும், அவை பற்றிய கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கனவாகும்.

ஈழத்தைப் பொறுத்தவரையில் இத்துறையில் விரிவான தொகுப்பு முயற்சிகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. காலஞ்சென்ற மக்கள் கவிமணி மு. இராமலிங்கம் அவர்கள் சுமார் 5000 க்கும் மேற்பட்ட பழமொழிகளைச் சேகரித்து வைத்திருந்தார்கள். இவை நூலுருப்பெற தமிழன்பர்கள் முன்வருவார்களாயின் ஈழத்திற்கும், தமிழ்மொழிக்கும் அது பெருந்தொண்டாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச அடிப்படையில் கூட்டுமுயற்சியாக சேகரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும்போதுதான் ஈழத்தில் வழக்கிலுள்ள சகல வகையான பழமொழிகளையுஞ் சேகரிக்க முடியும். ஈழத்து நாட்டார் பாடல்கள், பழமொழிகள், கதைகள் என்ன என்பனவற்றைச் சேகரித்து வெளியிடும் நோக்குடன் ஈடுபட்டுள்ள இக்கட்டுரையாளருக்கு, இத்துறையில் அக்கறைகொண்டுள்ள ஈழத்தின் பலபாகங்களிலும் வாழும் தமிழன்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்குமாயின் பெரும் பயனுடையதாக இருக்கும்.

தமிழ்பேசும் மக்கள் வாழும் இடங்களில் வழங்கும் பழமொழிகள் யாவும் சேகரிக்கப்பட்டு அவற்றிடையே ஒப்பியலாய்வு மேற்கொள்ளப்படவேண்டும். பழமொழிகள் சமுதாயப் படைப்புக்களாதலால் இவ்வாய்வின் மூலம் அவ்வச் சமுகத்தின் தனி இயல்புகளை இனம் கண்டு வகுத்தறிவதற்கு இவ்வாய்வு பயன்படும். தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் வழங்கும் பழமொழிகளில் பெரும்பாலானவை ஒத்துக் காணப்படினும் ஈழமக்களுக்கேயுரிய பழமொழிகள் எவை அவற்றின் சிறப்பியல்புகள் என்பனபற்றி ஆராயவேண்டும். அதேவேளையில் சிங்கள மக்களிடம் வழங்கும் பழமொழிகளையும் ஒப்பிட்டு, இவ்விரு மொழிப் பழமொழிகளும் ஒன்றையொன்று பாதித்துள்ளனவா என ஆராய்வதன் மூலம் இவ்விரு இனத்தாரின் கலாச்சார ஊடுருவல்களையும் அறிந்து கொள்ள வாய்ப்புண்டு.

பழமொழிகள் நீதி உபதேசங்களைக் கூறுவதாக அமைந்தபோதிலும் சமூகக் குறைபாடுகள், சமூக அமைப்புமுறைகள் என்பனபற்றிய பல்வேறுபட்ட விடயங்களையும் பொருட்கூறுகளாகக் கொண்டமைந்துள்ளன. இக்கட்டுரையில் திருமண மரபுகளுடன் தொடர்புடைய நம்நாட்டுப் பழமொழிகள் பற்றிச் சுருக்கமாகக் கூறப்படுகின்றன.

''வேலையும் விதியும் வந்தால் வேலியால் வரும் மாப்பிள்ளை'', ''தாரமும் குருவும் தலையின் எழுத்து'', ''அன்றெழுதி வைத்த பிரான் அழித்தெழுதப்போவதில்லை'', என்னும் பழமொழிகள் திருமணங்கள் விதிப்படியே நடைபெறுகின்றன என்பதை வலியுறுத்துகின்றன. ''பணம் பார்த்துப் பண்டங்கொள், குணம் பார்த்துப் பெண் கொள்'' என்ற பழமொழி குணமுடைய பெண்ணே விவாகத்திற்குப் பொருத்தமானவள் எனக் கூறுகிறது. ''ஆளமாட்டாதவனுக்குப் பெண்டேன்'', ''பூராடக்காரனோடு போராடமுடியாது'', ''ஐம்பது வயதானவனுக்கு ஐந்து வயதுப் பெண்ணோ'' என்னும் பழமொழிகள் திருமணத்திற்கும் பொருந்தாத ஆண்களைப் பற்றிக் கூறுகின்றன. இதுபோன்றே விவாகத்திற்குப் பொருத்தமற்ற பெண்களைப் பற்றி பின்வரும் பழமொழிகள் கூறுகின்றன: ''உத்தராடத்துப் பெண்ணும் ஊர்வாடிக்காணியுஞ்சரி'', ''கனுக்கால் பெருத்தால் கணவனைத் தின்பாள்'', ''கூந்தல் அழகி குடியைக் கெடுப்பாள்'', ''தாயைப் பார்த்து மகளைக் கொள்'', ''மேனி மினுக்கியைக் கொண்டவனும் கெட்டான்; மேட்டிலே பயிரிட்டவனுங் கெட்டான்'' என்பனவாகும்.

''மாமியார் வீடு மகா சவுக்கியம் நாலு நாள் சென்றால் நாய்படாப்பாடு'', ''அம்மானும் மருகனும் ஒரு வீட்டிற்கு ஆள் அடிமை'' என்பன மணமகன் கவனிக்க வேண்டிய பழமொழிகளாம். ''அரசனை நம்பி புருஷனைக் கைவிடாதே'', ''கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு எங்கிருந்தும் ஓடிவரும்'', ''கள்ளன் பின் போனாலும் குள்ளன் பின் போகாதே'', ''இராசா மகள் ஆனாலும் கொண்டவனுக்குப் பெண்டு தான்'' என்பன மணமகள் கவனிக்க வேண்டிய பழமொழிகளுட் சிலவாகும்.

பெண்ணின் பெற்றோர் கவனித்து நடக்கவேண்டிய வகையிற் பின்வரும் பழமொழிகள் அமைந்துள்ளன. ''போகாத இடத்திற்போனால் வராத சொட்டை வரும்'', ''சாத்திரம் பார்த்துப் பெண்ணைக்கொள், கோத்திரம் பார்த்துப் பெண்ணைக்கொடு'', ''ஆண்நிழலில் நின்றுபோ, பெண்நிழலில் இருந்துபோ'', ''அஞ்சு பெண்பெற்றால் அரசனும் ஆண்டியாவான்'',

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நத்தையின் வயற்றிலும் முத்துப் பிறக்கும்'', ''நாலாந் தலைமுறையைப் பார்த்தால் நாவிதனும் சிற்றப்பனுவான்'' என்ற பழமொழிகள் சாதிபார்ப்போரைச் சாடுகின்றன. ''சீதனமும் வேண்டாம் சிங்கார நாச்சியார் வந்தாலே போதும்'', பணமும் பத்தாயிருக்க வேண்டும் பெண்ணும் முத்தாயிருக்க வேண்டும்'', ''பெண்ணுக்கு பெண்தான் சீதனம்'' என்பன சீதனம் கேட்கும் ஆண்களைச் சிந்திக்கச் செய்வனவாகும்.

வீண் ஆடம்பரச் செலவு செய்து திருமணத்தைச் செய்வோர் சிந்திக்கும் வகையில் ''அரைச் துட்டிலே கலியாணம், அதிலே கொஞ்சம் வாணவேடிக்கை'', ''வீட்டைக் கட்டிப்பார் கலியாணத்தைச் செய்து பார்'' என்னும் பழமொழிகள் அமைந்துள்ளன.

உறவு முறைத் திருமணமே சமூகத்தவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக வழங்குகிறது. ''இனம் இனத்தைக் காக்கும்'' ''உதிரத்திற்கல்லவோ உருக்கம் இருக்கும்'' என்ற பழமொழிகள் மேற்கூறிய கருத்தை வலியுறுத்துகின்றன.

கிராமப்புறங்களிலே உள்ளூர்த் திருமணப் பழக்கம் பெருகிக் காணப்படுகிறது. ''அயலூர் அழகனிலும் உள்ளூர் முடவன் வாசி'' என்ற பழமொழி இதனை வற்புறுத்துகிறது.

''இரு நாய்க்கிட்ட எலும்புஞ்சரி, இரண்டு பெண்டாட்டிக் காரனுஞ் சரி'', ''சூத்திலே கட்டத் துணியில்லை, கூத்தியர் இரண்டு'', ''ஏதும் அற்றவனுக்கு ஏன் இரண்டு பெண்டாட்டி'' என்னும் பழமொழிகள் இரண்டு பெண்டாட்டிக்காரர்களை நகை செய்கின்றன. அது போன்றே ''அறுப்புக் காலத்தில் எலிக்கு ஐந்து பெண்சாதி'' என்ற பழமொழி பணத்திமிரினால் பல மணங்களைச் செய்யும் தனவந்தர்களைப் பற்றிய சமூகக் கண்டனக் குரலாகும்.

சீதனப் பிரச்சினை இன்று சமூகத்தின் இழி நிலையைக் காட்டும் வகையில் தலை தூக்கியுள்ளது. பல முற்போக்குச் சக்திகள் எதிர் வாதங்கள் புரிகின்றன. ஆனால் அவர்கள் திருமணம் புரியும்போது சீதனப் பேச்சில் பேரம் பேசுவதை அவதானிக்கும் போது ஆண் வர்க்கத்தின் அவநிலையை இது அடுத்துக் காட்டுகின்றதன்றோ! பொருளாதார அடிப்படையில் வாழ்க்கைப் பிரச்சனையை அணுகி சீதனத்துக்காக வக்காலத்துப் பேசும் தன்னம்பிக்கையற்ற சீதனப் பேய்களையும் படித்த வாலிபர்களையும் காணும்போது இவ்வர்க்கத்தின்மீது வெறுப்பே தோன்றுகின்றது. இப்பரம்பரையினரே நாட்டு முன்னேற்றம் பற்றிப் பேசுபவர்கள்! புரட்சித் திருமணம் பற்றிப் பிதற்றுபவர்கள்!

ஆனால், இத்தகைய சமுதாய நோக்கு நம்மவரிடையே இருந்து வந்தமையைப் பழமொழிகள் வாயிலாக அறியலாம். ''பணமும் பத்தாயிருக்கவேணும் பெண்ணும் முத்தாயிருக்க வேணும்'', ஏற்றியும் சீதனமும் பற்றி ஆளவேண்டும்'', ''பெண்ணுக்குப் போய் பொன்னுக்குப் பின் வாங்கலாமா'' என்ற பழமொழிகள் சீதனக் கொடுமையை எடுத்துக் காட்டுகின்றன. இதன் எதிரொலிப்பே ''பணம் பந்தியில் குணம் குப்பையில்'' என்ற பழமொழியாகும்.

இவ்வாறாகச் சமூகக் குறைபாடுகளையும், ஒழுக்க முறைகளையும் எடுத்துக் காட்டி, மக்களை நன்னெறியில் ஒழுகச் சிந்திக்கத் தூண்டும் சிந்தனைக் கருவூலமாகப் பழமொழிகள் அமைதல் அவற்றின் தனிச் சிறப்பாகும். சமுதாயப் படைப்பாக விளக்கும் இவ்விலக்கியம், சமூகவியல், உளவியல் ஆய்வாளரின் கவனத்தைக் கவரும்போதே அவற்றின் முழுமையான பயனை வெளிக் கொணர வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்பு

1. Sokolox, Y. M., **Russian Folklore** New york, The Macmillan Company, 1950 P. 258

2. சாலை இளந்திரையன், **சமுதாய நோக்கில் பழமொழிகள்**, சென்னை, பாரிநிலையம், 1975. பக். 19

3. **தொல்காப்பியம்**, செய்யுளியல், 170 ஆம் சூத்திரம் பார்க்க

4. **பதினெண் கீழ்க் கணக்குச் சொற்பொழிவுகள்**, சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1966, பக். 178

5. இதுபற்றிய முழுமையான ஆய்வு இலக்கிய வரலாற்றின் கால அடிப்படையில் நடாத்தப்படவேண்டியது அவசியமாகும்.

6. **அகநானூறு** பாடல் 101: வரி 1—3

7. நான்காம் அடிக்குறிப்பு நூலின் 195 ஆம் பக்கம் பார்க்க

8. இரண்டாம் அடிக்குறிப்புநூலின் 46 ஆம் பக்கம் பார்க்க

9. Percival, Rev, P., **Tamil Proverbs with their English Translation,** 2nd Edition Madras 1842

10. Gupta Sanker Sen, **A Bibliography of Indian Folklore and related Subjects** Calcutta. 1968

11. குப்புசாமிநாயுடு; கருப்பண்ணபிள்ளை, **பழமொழித்திரட்டு** மதுரை, 1888

12. Lazarus, John, **A A Dictionary of Tamil Proverbs** Madras, 1894

13. Jensen, Rev. Herman. **A Olassified Collection of Tamil Proverbs**. London, 1897.

14. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பழமொழித் தொகுப்புகள் பற்றிய மதிப்பீட்டை சாலை இளந்திரையனது நூலில் (1975) காண்க.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகென்ற மகளே நீ வாழ்க!

என். சண்முகலிங்கன்

மன்மதன் செல்வங்கள் மேனியிலே — எம்மை
மயக்கிடும் பாவங்கள் விழிகளிலே....
சன்னத மாடிடும் இதயத்திலே — வந்து
சாந்தி தந்தாய் உன் உதயத்திலே....

மல்லிகை மலரான கானம் — அதில்
எல்லோர்க்கும் வாழ்வெனும் இதமானவாசம்
சொல்லினில் அறியாத மோகம் — இது
சொல்லாமல் அறிகின்ற சுகமான வேகம்.

அழகென்ற மகளே நீ வாழ்க — இங்கு
அழுகின்ற காலங்கள் ஆனந்தமாக
இளவேனில் தளிரே நீ வளர்க — எங்கள்
இதயத்தில் இனியுந்தன் இனிமைகளாக.

---

தனிமனிதன் ஒரு சமுதாய உறுப்பினன். அவனுடைய ஆற்றல் சமுதாயத்தின் பொதுவுடைமை; அவனுடைய ஆற்றலால் விளைகின்றவை அனைத்தையும் அனுபவிக்கச் சமுதாயத்திற்கு உரிமையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச அடிப்படையில் கூட்டுமுயற்சியாக சேகரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும்போதுதான் ஈழத்தில் வழக்கிலுள்ள சகல வகையான பழமொழிகளையுஞ் சேகரிக்க முடியும். ஈழத்து நாட்டார் பாடல்கள், பழமொழிகள், கதைகள் என்ன என்பனவற்றைச் சேகரித்து வெளியிடும் நோக்குடன் ஈடுபட்டுள்ள இக்கட்டுரையாளருக்கு, இத்துறையில் அக்கறைகொண்டுள்ள ஈழத்தின் பலபாகங்களிலும் வாழும் தமிழன்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்குமாயின் பெரும் பயனுடையதாக இருக்கும்.

தமிழ்பேசும் மக்கள் வாழும் இடங்களில் வழங்கும் பழமொழிகள் யாவும் சேகரிக்கப்பட்டு அவற்றிடையே ஒப்பியலாய்வு மேற்கொள்ளப்படவேண்டும். பழமொழிகள் சமுதாயப் படைப்புக்களாதலால் இவ்வாய்வின் மூலம் அவ்வச் சமூகத்தின் தனி இயல்புகளை இனம் கண்டு வகுத்தறிவதற்கு இவ்வாய்வு பயன்படும். தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் வழங்கும் பழமொழிகளில் பெரும்பாலானவை ஒத்துக் காணப்படினும் ஈழமக்களுக்கேயுரிய பழமொழிகள் எவை அவற்றின் சிறப்பியல்புகள் என்பனபற்றி ஆராயவேண்டும். அதேவேளையில் சிங்கள மக்களிடம் வழங்கும் பழமொழிகளையும் ஒப்பிட்டு, இவ்விரு மொழிப் பழமொழிகளும் ஒன்றையொன்று பாதித்துள்ளனவா என ஆராய்வதன் மூலம் இவ்விரு இனத்தாரின் கலாச்சார ஊடுருவல்களையும் அறிந்து கொள்ள வாய்ப்புண்டு.

பழமொழிகள் நீதி உபதேசங்களைக் கூறுவதாக அமைந்தபோதிலும் சமூகக் குறைபாடுகள், சமூக அமைப்புமுறைகள் என்பனபற்றிய பல்வேறுபட்ட விடயங்களையும் பொருட்கூறுகளாகக் கொண்டமைந்துள்ளன. இக்கட்டுரையில் திருமண மரபுகளுடன் தொடர்புடைய நம்நாட்டுப் பழமொழிகள் பற்றிச் சுருக்கமாகக் கூறப்படுகின்றன.

''வேளையும் விதியும் வந்தால் வேலியால் வரும் மாப்பிள்ளை'', ''தாரமும் குருவும் தலையின் எழுத்து'', ''அன்றெழுதி வைத்த பிரான் அழித்தெழுதப்போவதில்லை'', என்னும் பழமொழிகள் திருமணங்கள் விதிப்படியே நடைபெறுகின்றன என்பதை வலியுறுத்துகின்றன. ''பணம் பார்த்துப் பண்டங்கொள், குணம் பார்த்துப் பெண் கொள்'' என்ற பழமொழி குணமுடைய பெண்ணே விவாகத்திற்குப் பொருத்தமானவள் எனக் கூறுகிறது. ''ஆளமாட்டாதவனுக்குப் பெண்டேன்'', ''பூராடக்காரனோடு போராடமுடியாது'', ''ஐம்பது வயதானவனுக்கு ஐந்து வயதுப் பெண்ணோ'' என்னும் பழமொழிகள் திருமணத்திற்கும் பொருந்தாத ஆண்களைப் பற்றிக் கூறுகின்றன. இதுபோன்றே விவாகத்திற்குப் பொருத்தமற்ற பெண்களைப் பற்றி பின்வரும் பழமொழிகள் கூறுகின்றன: ''உத்தராடத்துப் பெண்ணும் ஊர்வாடிக்காணியுஞ்சரி'', ''கணுக்கால் பெருத்தால் கணவனைத் தின்பாள்'', ''கூந்தல் அழகி குடியைக் கெடுப்பாள்'', ''தாயைப் பார்த்து மகளைக் கொள்'', ''மேனி மினுக்கியைக் கொண்டவனும் கெட்டான்; மேட்டிலே பயிரிட்டவனுங் கெட்டான்'' என்பனவாகும்.

''மாமியார் வீடு மகா சவுக்கியம் நாலு நாள் சென்றால் நாய்படாப்பாடு'', ''அம்மானும் மருகனும் ஒரு வீட்டிற்கு ஆள் அடிமை'' என்பன மணமகன் கவனிக்க வேண்டிய பழமொழிகளாம். ''அரசனை நம்பி புருஷனைக் கைவிடாதே'', ''கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு எங்கிருந்தும் ஓடிவரும்'', ''கள்ளன் பின் போனாலும் குள்ளன் பின் போகாதே'', ''இராசா மகள் ஆனாலும் கொண்டவனுக்குப் பெண்டு தான்'' என்பன மணமகள் கவனிக்க வேண்டிய பழமொழிகளுட் சிலவாகும்.

பெண்ணின் பெற்றோர் கவனித்து நடக்கவேண்டிய வகையிற் பின்வரும் பழமொழிகள் அமைந்துள்ளன. ''போகாத இடத்திற்போனால் வராத சொட்டை வரும்'', ''சாத்திரம் பார்த்துப் பெண்ணைக்கொள், கோத்திரம் பார்த்துப் பெண்ணைக்கொடு'', ''ஆண் நிழலில் நின்றுபோ, பெண் நிழலில் இருந்துபோ'', ''அஞ்சு பெண்பெற்றால் அரசனும் ஆண்டியாவான்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நத்தையின் வயற்றிலும் முத்துப் பிறக்கும்'', ''நாலாந் தலைமுறையைப் பார்த்தால் நாவிதனும் சிற்றப்பனுவான்'' என்ற பழமொழிகள் சாதிபார்ப்போரைச் சாடுகின்றன. ''சீதனமும் வேண்டாம் சிங்கார நாச்சியார் வந்தாலே போதும்'', பணமும் பத்தாயிருக்க வேண்டும் பெண்ணும் முத்தாயிருக்க வேண்டும்'', ''பெண்ணுக்கு பெண்தான் சீதனம்'' என்பன சீதனம் கேட்கும் ஆண்களைச் சிந்திக்கச் செய்வனவாகும்.

வீண் ஆடம்பரச் செலவு செய்து திருமணத்தைச் செய்வோர் சிந்திக்கும் வகையில் ''அரைச் துட்டிலே கலியாணம், அதிலே கொஞ்சம் வாணவேடிக்கை'', ''வீட்டைக் கட்டிப்பார் கலியாணத்தைச் செய்து பார்'' என்னும் பழமொழிகள் அமைந்துள்ளன.

உறவு முறைத் திருமணமே சமூகத்தவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக வழங்குகிறது. ''இனம் இனத்தைக் காக்கும்'' ''உதிரத்திற்கல்லவோ உருக்கம் இருக்கும்'' என்ற பழமொழிகள் மேற்கூறிய கருத்தை வலியுறுத்துகின்றன.

கிராமப்புறங்களிலே உள்ளூர்த் திருமணப் பழக்கம் பெருகிக் காணப்படுகிறது. ''அயலூர் அழகனிலும் உள்ளூர் முடவன் வாசி'' என்ற பழமொழி இதனை வற்புறுத்துகிறது.

''இரு நாய்க்கிட்ட எலும்புஞ்சரி, இரண்டு பெண்டாட்டிக் காரனுஞ் சரி'', ''சூத்திலே கட்டத் துணியில்லை, கூத்தியர் இரண்டு'', ''ஏதும் அற்றவனுக்கு ஏன் இரண்டு பெண்டாட்டி'' என்னும் பழமொழிகள் இரண்டு பெண்டாட்டிக்காரர்களை நகை செய்கின்றன. அது போன்றே ''அறுப்புக் காலத்தில் எலிக்கு ஐந்து பெண்சாதி'' என்ற பழமொழி பணத்திமிரினால் பல மணங்களைச் செய்யும் தனவந்தர்களைப் பற்றிய சமூகக் கண்டனக் குரலாகும்.

சீதனப் பிரச்சினை இன்று சமூகத்தின் இழி நிலையைக் காட்டும் வகையில் தலை தூக்கியுள்ளது. பல முற்போக்குச் சக்திகள் எதிர் வாதங்கள் புரிகின்றன. ஆனால் அவர்கள் திருமணம் புரியும்போது சீதனப் பேச்சில் பேரம் பேசுவதை அவதானிக்கும் போது ஆண் வர்க்கத்தின் அவநிலையை இது அடுத்துக் காட்டுகின்றதன்றோ! பொருளாதார அடிப்படையில் வாழ்க்கைப் பிரச்சனையை அணுகி சீதனத்துக்காக வக்காலத்துப் பேசும் தன்னம்பிக்கையற்ற சீதனப் பேய்களையும் படித்த வாலிபர்களையும் காணும்போது இவ்வர்க்கத்தின்மீது வெறுப்பே தோன்றுகின்றது. இப்பரம்பரையினரே நாட்டு முன்னேற்றம் பற்றிப் பேசுபவர்கள்! புரட்சித் திருமணம் பற்றிப் பிதற்றுபவர்கள்!

ஆனால், இத்தகைய சமுதாய நோக்கு நம்மவரிடையே இருந்து வந்தமையைப் பழமொழிகள் வாயிலாக அறியலாம். ''பணமும் பத்தாயிருக்கவேணும் பெண்ணும் முத்தாயிருக்க வேணும்'', ஏற்றியும் சீதனமும் பற்றி ஆளவேண்டும்'', ''பெண்ணுக்குப் போய் பொன்னுக்குப் பின் வாங்கலாமா'' என்ற பழமொழிகள் சீதனக் கொடுமையை எடுத்துக் காட்டுகின்றன. இதன் எதிரொலிப்பே ''பணம் பந்தியில் குணம் குப்பையில்'' என்ற பழமொழியாகும்.

இவ்வாறாகச் சமூகக் குறைபாடுகளையும், ஒழுக்க முறைகளையும் எடுத்துக் காட்டி, மக்களை நன்னெறியில் ஒழுகச் சிந்திக்கத் தூண்டும் சிந்தனைக் கருவூலமாகப் பழமொழிகள் அமைதல் அவற்றின் தனிச் சிறப்பாகும். சமுதாயப் படைப்பாக விளக்கும் இவ்விலக்கியம், சமூகவியல், உளவியல் ஆய்வாளரின் கவனத்தைக் கவரும்போதே அவற்றின் முழுமையான பயனை வெளிக் கொணர வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுரம் சரிகிறது...

— செல்வா —

மைனர்ப் போடியார் என்றால் மானிலமே நன்கறியும்
    ஊரிலே பெரியவராம் உயர்குடியில் பிறந்தவராம்
கோயிலிலே வண்ணக்கர் கூட்டுறவுத் தலைவரவர்
    சமூகப் பற்றுமுயர் சமயப்பற்று முள்ளோன்
தருமத்திற் றலைசிறந்தோன் என்றெல்லாம் பெயர் கொண்டோன்
    அவர் செய்யும் தகிடுதத்தம் யாரறிவார் மானிலத்தில்.

இழித்திழித்துப்பேசி ஏழைகளின் நிலத்தையெல்லாம்
    அரைவிலைக்கு கால் விலைக்காய் அசைத்து விட்டார்தன்பக்கம்
மண் கொள்ளையிடுவதிலே அவருக்கவர் நிகரே
    கோயிற் சொத்துக்கள் கூட்டுறவுப் பொருட்களெல்லாம்
தண்ணிபட்ட பாடாய்த்தான் தவிக்கும் அவர் கையில்
    இருநூறேக்கருக்கு ஏகவாரி சவரிப்போ.

செல்லன் அவருக்குச் சிறந்த விசுவாசி
    இழிகுலத்தோனென்று சொல்லி எடுபிடியாய் வைத்துவிட்டார்
எச்சிலே அவனுணவு இரு சாக்கே அவன் மெத்தை
    செல்லனுக்கு ஒரு செல்வன் சொல்லிலும் அவன் செல்வன்
அவனுக்கேண்டா படிப்பு அழைத்துவா இங்கென்றார்
    செல்லனால் இயலவில்லை, சென்று திரும்பிவிட்டான்.

சென்றன சிலநாட்கள் ...............

போடியாருக்கிப்போ போதாத காலமாம்
    நிலவுடைமைச் சட்டத்தால் நிலமெல்லாம் மண்ணுச்சி
இளந் தலைமுறையின் எழுச்சிமிக்க வேகத்தால்
    வண்ணக்குப் பதவியும் வழிமாறிப் போயிற்று
அவரிப்போ யோசித்தார் தன்னொருமை மகளுக்கு
    செல்லன் மகனைச் சென்று வரன் கேட்க—ஆமாம்
சொல்ல மறந்துவிட்டேன் செல்லன் மகனிப்போ
    சுளையாகப் பணம் வாங்கும் கைராசி வைத்தியனும்.

செல்லனைத் தூதாகச் செல்லவிட்டார் மகனிடமே—அவனோ
    உயர் குடியோன் என்றுசொல்லி உனைவதைத்த புல்லுருவி
மகளையா கட்டுவது மாட்டேன் என்று விட்டான்
    கூட்டுறவுக் கடையினிலே கொடுலஞ்சம் வாங்கியதால்—போடியார்
ஒன்றையும் விடாதிப்போ கம்பி நன்றாய் எண்ணுகின்றார்
    காட்டிக் கொடுத்தவனைக் கருவறுப்பேன் என்று சொல்லி
கறுவுகின்றார் இப்போ கொடிய சிறையினுள்ளே
    பல்லில்லாச் சிங்கத்தின் சொல்லுக்குப் பலமேது.

அய்யா பெரியவர்காள் ஊரையேமாற்றுதீர் எப்போதோ
    அக்காலம் கற்காலமானதப்பா ................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவுக்கு மிஞ்சினுல்...!

சங்கையன் (ஆ. பத்மனுதன்)

புதுமணம் கண்ட கிராமத்தவன் ஒருவன் ஒருமுறை குடும்பக் கட்டுப்பாடு பற்றிய பேச்சையும் படக் காட்சியையும் பார்க்கவும் கேட்கவும் நேர்ந்தது! அதை தன் மனைவிக்குக் கூறுகிருன்.........

திருமணக் கோலமும் குலையவில்லை—சாந்து
சவ்வாதின் மணமும் மாறவில்லை!
ஒரு மனமாகக் கேட்பாயடி—அதை
உள்ளத்திலிருத்தி உணர்வாயடி!

குடும்பக் கட்டுப்பாடு பற்றியவன்—அங்குக்
கூறியனவெல்லாம் என்ன வென்பேன்?
இடும்பை பல தீரும் வழிதனையே—அவனும்
இங்கிதமாகவே சொன்ஞனடி!

திட்டமிட்டிட்ட குடும்பத்தின்—நல்ல
சீரையும் எடுத்துச் சொன்ஞனடி
கட்டமில் வாழ்க்கை வகையெல்லாம்—அவன்
காது குளிர உரைத்தானடி!

தேடும் பொருளிங்கு எதுவுமில்லை—முன்ஞேர்
சேர்த்து வைத்த நிதியுமில்லை!
வீடு நிறைந்திடப் பிள்ளை பெற்ருல்—அந்த
வீடு வெறும் வீடு ஆகுமடி!

பேச்சில் வீரரெனக் காட்டாமல்—என்றும்
பேணிக் காட்டிட வேண்டுமடி
காச்சுப் பீச்சென்ற பிள்ளைப் பெருக்கமும்
காண்பவர் வாழ்க்கையில் நரகமடி!

வண்டியிழுத்திடுங் காளையிரண்டு—பள்ளம்
வந்தாலும் தாண்டி வலித்திடல்போல்
கண்ட இவ் வாழ்க்கைச் சகடமென—இதைக்
கருத்தாயிழுக்க வேண்டுமடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டும் வள்ளுவம்

நான்முகனூர் நல்கிட்ட முப்பானூலதுவை
கல்லாமை நன்றோ மாந்தர்களே.

தமிழ்மறை புகன்ற பழம்பெரும் புலவர்
தமிழ் உறைகின்ற செந்நாப் போதர்
தமிழ்குறை போக்க புகன்றனர் மறையை
தமிழ்உரை மக்காள் போற்றுக அவரை.

சொல்லாமை சிறந்தநெறி கள்ளாமை சிறந்த அறம்
பொய்யாமை சிறந்ததென்ற பொய்யா மொழியதுவும்
மாநிலத்தார் மாண்புக்காய் பலமொழியில் பொய்க்கவிட்டு
மானிடர்கள் போற்றுகின்ற பொதுநூலாய் திகழ்கின்றது.

மானமதை விளக்கிட்டார் கவரிமான் துணையாக
அடக்கமதை அளித்திட்டார் ஆமையின் வடிவாக
உடுக்கைதனை இழந்தவரின் கையதுவே நட்பாக
உவமைதனை உணர்த்திட்டார் உணர்கின்ற பொருளதுவால்.

விருந்தோம்பல் என்பதுவே மிகச்சிறந்த பண்பாடு
விருந்தினையே பெரிதாக மதித்தனரே தமிழினத்தார்
விருந்தினரின் முகத்தினையே அனிச்சம் பூ என்றிட்டார்
விருந்தளிப்பான் முகம்கோணில் வாடிவிடும் என்றனரே.

வேலையின்றித் தவித்திடாமல் வேலைக்காய் அலைந்திடாமல்
வேந்தரெல்லாம் போற்றிவந்த வேதநூல் வழிப்படியே
ஏர்க்கால் பூட்டிடுங்கள் ஏரெடுத்து உழுதிடுங்கள்
ஏழுலகம் வந்தடையும் எளிதாய் உம்மடியில்.

கடலின் நடுவினிலே கலங்குகின்ற கப்பலுக்கு
கரைதன்னைக் காட்டிடுமே கலங்கரை விளக்கதுவும்
சேற்றினிலே வழுக்கிடாமல் ஊன்றுகோல் துணைபுரியும்
வாழ்வினிலே வழுக்கிடாமல் மறையதுவும் துணைபுரியும்.

ஊக்கமது இருந்திட்டால் ஆக்கமது வந்திடுமே
ஆக்கமது வந்திட்டால் அறவாழ்வும் சிறந்திடுமே
ஊக்கமது ஊட்டவல்ல ஓங்கார நூலதுவும்
ஓயாது உழைப்பதற்கு சங்கநாதம் ஒலித்திடுமே.

கோமகனும் குடிமகனும் கோமானும் வறியவனும்
கோலமுடன் கொழிந்திடவே கொடுத்துவிடும் வழியதனை
இல்லறமும் துறவறமும் பொருளியலும் போரியலும்
பல்லறமாய் கொடுத்திங்கே வழிகாட்டும் வள்ளுவமே.

செல்வி. வசுந்தராதேவி பெரியதம்பி
4-ம் வருடம்
மருத்துவ பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஷாடபூதிகள்

பெண்கள் :

பெண்களின் விடுதலை வேண்டுமே என்பார்
பெண் அவதூற்றையும் செவ்வனே செய்வார்!

நாட்டிலே பஞ்சம் என்பது தெரிந்தும்
நகைகள் நட்டுகள் தேவையே என்பார்!

மகளுடைய திருமணம் நடைபெறும் போது
சீதனம் கொடிது, கொடிது என்பார்
மகனுடைய திருமணப் பேச்சின் போது
சீதனம், டொனேஷன் என்று தொடங்குவார்!

ஆண்கள் :

வம்பு கதைத்திடும் பெண்டுகள் என்பார்
வம்பளப்பதில் பெண்களை வெல்வார்!

சீலைகள் சட்டைகள் செலவெனச் சொல்வார்
சிகறெற் சாராயம் செலவெனக் கொள்ளார்!

மனதினும் உடலினும் கற்பு என்பார்
மனைவிக்கு ஈந்து அதைத் தாம்கொள மறுப்பார்!

— தரணி யூரான் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுச் செல்வம் குழந்தையடி—நீயும்
விரும்புஞ் செல்வம் குழந்தையடி
நாட்டுச் செல்வம் குழந்தையடி—பேணும்
நல்ல செல்வங் குழந்தையடி!

குழந்தையில்லா வீடு பாலையாம்—இந்தக்
குவலயம் கூறிடு மாப்போல
குழந்தையாடலும் இன்பமடி—அவர்
கூறும் மழலைகள் சொர்க்கமடி!

தாயாய் மலர்ந்திடும் அவ்விருப்பம்—எல்லாத்
தையலர்க்கும் அது நல்விருப்பம்
தாயாய் மலர்பவள் வாழ்வினிலே—தோல்வி
தாண்டவம் ஆடிடல் ஏனடியோ?

அளவுக்கு மீறி மிஞ்சிவிட்டால்—எல்லாம்
அமுதும் நஞ்சாகப் போகுமடி
அளவாய் அறிவாய்ப் பெற்றெடுத்தால்—என்றும்
அளவில்லா இன்பம் மலருமடி!

திருமணம் என்பது வெறும் உடற்சேர்க்கையன்று. அது உணர்ச்சிகளின் சேர்க்கை. சிந்தனைகளின் சேர்க்கை. வாழ்க்கை வளங்களின் சேர்க்கை.

—காண்டேகர்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமூச்சு

பெருமூச்சாக வளர்ந்து வந்த நெற்பயிரும்
கெட்டுக் கெட்டாய் காய்த்து நின்ற மிளகாய் கண்டும்
குலையோடு சாய்ந்து நின்ற வாழையடியும்
புயற்காற்றோடு மழை பொய்த்துப் போய்விடவே
மூர்ச்சையற்று படிப்படியாய் மடிந்தனவே.
கைக்கு எட்டியது வாய்க்கு எட்ட வில்லை யென்றும்
எப்பாடு பட்டாலும் வாழ்வில் விடிவு இல்லையென்றும்
இயற்கையே எம் உயர்வை விரும்புவதில்லை யென்றும்
இது நம் விதியன்றி வேறொன்றும் இல்லை யென்றும்
எண்ணி மனம் நொந்து விட்டார் பெருமூச்சு.
பட்டகடன் வட்டி மூச்சாய் வளர்ந்திடவே
ஓலைக் கூரையூடாய் கதிரவன் ஒளி புகுந்திடவே
வீட்டு அத்திவாரம் வருடம் ஐந்தை கடந்திடவே
மூத்தமகள் வயதும் இருபத்தைந்தை எட்டிடவே
தந்தையின் உடல் நிலையும் பலவீனம் ஆகியதே
வட்டிப் பணம் சேர்க்க வந்த செட்டியாரும்
கோவில் வரிப்பணம் அறவிட வந்த கணக்கப் பிள்ளையும்
நோயாளியைப் பார்க்கவந்த அயலவரும்
தாயோடு அழுதுநின்ற பிள்ளைகளும்
ஒரு மூச்சைக் கண்ட பின்பு விட்டனரே பெருமூச்சு.

த. கோபாலசிங்கம்
அபிவிருத்திக்கல்வி

---

சட்டம் ஒரு இருட்டறை; வக்கீலின் வாதம் ஒரு விளக்கு. அது ஏழைக்கு எட்டாத விளக்கு.

— பேரறிஞர் அண்ணா —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏய் மனிதா!

வற்றிய வயிருேடு
வாடி வதங்கியே
வாழ்ந்து வருகின்ருயே...!
அவர்க்கு......
வற்ருத சொத்துக்கள்
வந்து குவிந்திட
வாய்த்தது உன் உழைப்பே !!
உன்னை உணராமல்.....
உழைப்பை உறிஞ்சியே
உத்தமர் அவராகின்ருர்!
உன்னில் உரமுண்டு
உழைத்து நீ கொட்ட !!,
உறிஞ்சும் அவர் வாழ்வதா ? !!!

— மாசிலாமணி நடேசராஜா —

பசித்துச் சாவதைவிட, பசியை மாற்றும் முயற்சியில் மடிவது மேலல்லவா!

—கேசவ தேவ்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்றம் போக்கி நாம் மகிழ்வோம்.

— நெல்லை — நடேஸ் (கலைப்பீடம்)

கடலோர முள்ள
குடிலோரம் தன்னில்
கொடியோர்கள் தந்த
இடராலோ வாழ்வில்
மடியாத துன்பு
முடியாத இந்த
விடியாத நிலையை
எண்ணி எண்ணி
ஏங்கித் தவிக்கும்
திண்ணிய நெஞ்சத்துத்தீரர்காள்
கரைவலை வீசி
ஆழ்கடல் வலைவீசி
திரை கடலோடித்
திரவியம் தேடி
சம்மட்டியார்கள்
சங்கையாய் வாழ
உங்கள் வாழ்வையேன்
மாய்த்திடுகின்றீர் ......

* * *

சுரண்டிச் சுகித்து
கொழுத்து வாழ
வரட்டுத் தத்துவங்கள்
இரவினில் பெற்ற சுதந்திரத்தின்
இலட்சணங்கள் இதனை நாங்கள்
வலைவீசிடும் வலிய கரங்களால்
மாற்றம் செய்வோம் — கொடு
நாற்றம் போக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னகை அணிந்து புன்னகை

சிந்தும் பூவையர் விரும்பி நாடுவது

**அஸீஸ் நகை மாளிகையே**

129, என். சி. வீதி,

திருகோணமலை.

எங்களிடம்

ஆங்கில மருந்துகள் ஊசி மருந்துகள் மூலிகை மருந்துகள் ஆயுர் வேத மருந்துகள்

மற்றும்

சாய்ப்புச் சாமான்கள், சில்லறைச் சாமான்கள், பால் உணவுப் பொருட்கள்

சகாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. இன்றே விஜயம் செய்யுங்கள்

**ஏ. எஸ். எம். ஜெகநாதன் அன் கோ**

159, ஏகாம்பரம் வீதி,

திருகோணமலை.

தெலிபோன்: 362.

அழகிய தங்க வைர நகைகள் தங்கள் மனத்திற்குகந்த

நவீன முறையில் கிடைக்கும் இடம்

**வி. எஸ். இ. நகை மாளிகை**

இல. 8, காசுக்கடைத் தெரு, திருகோணமலை.

**V. S. E. JEWEL HOUSE**

No. 8, CASH STREET, TRINCOMALEE.

for

Fashionable Jewelleries & Diamonds

Phone: 2 9 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தம் புது டிசைன்களில்

பட்டு
பருத்தி
நைலெக்ஸ்
அக்கோபா
சாறிகள்

கண்கவர் டிசைன்களில்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்

## ஆதித்தன் ரெக்ஸ்ரைல்ஸ்

ஆடவர் விரும்பும் சேட் சூட்டிங்
துணிகளும் சிறுவர் விரும்பும்
றெடிமேற் ஆடைகளும் தரம் தெரிந்து
நயமாகப் பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்

## ஆதித்தன் ரெக்ஸ்ரைல்ஸ்

**115, மத்திய வீதி,**
**திருகோணமலை.**

பீடிகளில் சிறந்தது

## மலர் பீடி

எப்பொழுதும் மலர் பீடிகளைக்
கேட்டு வாங்குங்கள்
மறவாதீர்கள் மலர் பீடிகள்

## மலர் பீடி ஸ்தாபனம்

**440, மின்சார நிலைய வீதி,**
**திருகோணமலை.**

## GOLD HOUSE

Cordially inviting
for
Repute Jewellery
and
Textiles

*Visit Today*

## GOLD HOUSE

**71, Main Street,**
**Kalmunai.**

சிறந்த பவுண் தங்க நகைகளுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்

## சாந்தினி ஹோல்ட் ஹவுஸ்

**57, மெயின் வீதி,**
**மட்டக்களப்பு.**

பாவித்த பழைய நகைகளுக்குப்
பதிலாக புதிய நகைகள்
மாற்றிக் கொடுக்கப்படும்.

பழைய
தங்கம், பொன், வெள்ளி
கூடிய விலைக்கு வாங்கப்படும்.

## SANTHINE GOLD HOUSE

No. 57, Main Street,
**Batticaloa.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GNANAMS

PHOTOGRAPHERS
BLOCK MAKERS
PHOTO STAT PRINTERS
PICTURE FRAMERT

&

Dealers In Glass Wares

**Head Office:**
**301. Clock Tower Road,**
JAFFNA.

**Branch:**
**81, Stanley Road,**
JAFFNA.

*T'Phone: 7067*

With Best Compliments
From

# NEW VICTORS

**23, Clock Tower Road,**
**JAFFNA.**

With The Compliments
From

# SUBHAS CAFE

JAFFNA.

With The Best Compliments
From

# *New Dilka*

CREAM HOUSE AND HOTEL

408, Hospital Road,
JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With Best Compliments**

**from**

## New Lanka Stores

**209, Colombo Street**

**KANDY**

*Dial :* *2527*

இலங்கைப் பல்கலைக் கழக

கொழும்பு வளாகத்

தமிழ்ச் சங்கத்திற்கு

எமது வாழ்த்துக்கள்

## அரவிந்த ஜுவலர்ஸ்

நம். 167, செட்டியார் தெரு

கொழும்பு-11

இலங்கைப் பல்கலைக் கழக

கொழும்பு வளாகத்

தமிழ்ச் சங்கத்திற்கு

எமது வாழ்த்துக்கள்

## ஸ்ரீ விக்னேஸ்வரா

நம். 120, ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்

இலங்கைப் பல்கலைக் கழகக்

கொழும்பு வளாகத்

தமிழ்ச் சங்கத்திற்கு

எமது வாழ்த்துக்கள்

## சிவன் மோட்டர் ஸ்ரோர்ஸ்

70/1, மானிப்பாய் வீதி

யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூர் உற்பத்தி விற்பனையாளர்

# வெலிகம ஸ்டோர்ஸ்

இல. 139. 4-ம் குறுக்குத் தெரு

கொழும்பு – 11

தொலைபேசி : 23271

*With Compliments from*

## THASAN TRADERS

**Commission Agent for Dry Fish**
**& All kinds of Local Produce**

22250

No. 68, 4th Cross Street

COLOMBO – 11

With Compliments from

## LINGAM TRADERS

100, Fourth Cross Street

COLOMBO—II

**Telephone : 86739**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With The Best Compliments of:*

# YARL METAL SALES CENTRE

No. 6, & 30, MODERN MARKET,
JAFFNA

T'Phone: 7596

Wholesales and Retailers with A
Guarantee for Fair Price

**OVER 5,000,000**
DEPOSITORS ENJOY
FACILITIES AND CONCESSIONS
FOR

# SAVING

THROUGH

**THE NATIONAL SAVING BANK**

WITH
20, BRANCHES AND OVER 3000 POST OFFICES
AND SUB-POST OFFICES
TO SERVE THEM IN THEIR OWN VILLAGE

THE MOST CONVENIEN
MEANS OF MEETING YOUR
IMMEDIATE NEED IS

THE SAVING PASS BOOK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments*
*from*

**GLOBE HARDWARE**

**General Merchants**
**&**
**Manufacturers' Representative**

170, Colombo Street
KANDY

Dial : 2296

With Best Compliments
from

**TRINCO HOUSE**

No. 183, Colombo Street
KANDY

*Dial : 2395*

With Best Compliments
from

**Island Forage Stores**

205, Colombo Street
KANDY

*Dial : 3330*

With Best Compliments
from

**Ceylon Forage Stores**

No. 285, Colombo Street
KANDY

**Dial : 2494**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருக்குப் போன்ற உண்மையான
பாவனைப் பொருட்களான

லிட்டோ (LITO)

சூட்கேஸ், ரவலிங்பாக்,
பெல்ட்டுக்களைப்

பெற இன்றே நாடுங்கள்
எங்கும் கிடைக்கும்.

உற்பத்தியாளர்கள்:

J. J. இன்டஸ்ரீஸ்

5, கல்லூரி வீதி,

திருகோணமலை.

பொன் நகை அணிந்து புன்னகை

புரிந்து புத்தம் புது மலரெனத்

திகழும்

அரிவையர் விரும்புவது

ஆர். பி. ஜுவலர்ஸ்

162, ஏகாம்பரம் வீதி,

திருகோணமலை.

உங்கள் தேவைக்கு

ஒரு முறை வாருங்கள்

புஹாரி ஸ்ரோர்ஸ்

148, வடகரை வீதி,

திருகோணமலை

சிறந்த முறையில் குறித்த நேரத்தில்
சிக்கன செலவில் வேண்டிய முறையில்
வானொலி கருவியை திருத்திக் கொடுக்க

திருகோணமலையில் சிறந்த

ஓர் ஸ்தாபனம்

கை-பை றேடியோ சேவிஸ்

51, A, பிரதான வீதி,

திருகோணமலை.

உரிமையாளர்:

சா. குலசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுயிர்த் தோழனுடன் என் கருத்தைப் பகிர்ந்து..........!

வ. திவ்வியராசா
அபிவிருத்திக்கல்வி
இறுதியாண்டு

அன்புமிகு தோழ,

ஆண்டு பல கடந்த நீண்ட இந்த இடைவெளியில் என்னுள் மூண்ட பல கருத்துக்களை உ னுடன் பரிமாற வேண்டுமென்று தூண்டுகின்ற வேளையிலே இதை எழுதுகிறேன்.

நேற்றிருந்த உலகமல்ல இன்றிருக்கும் உலகம். உலகளாவிய பிரச்சனைகள் படு பயங்கரமாய் உக்கிரமடைந்து கொண்டிருக்கிற உலகம் இது. கணத்துக்குக் கணம் உலகம் வெகு வேகமாய் மாறிக் கொண்டிருக்கிறது. இந்த வேகத்தைப் பார்க்கும் பொழுது ஒருவேளை நமது பூமிதான் ''கடுகதி'' பெயரை மாட்டிக் கொண்டு வேகமாய்ச் சுழலத் தொடங்கி விட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

உலகப் பிரச்சனைகள் பற்றி இவனுக்கென்னடா அக்கறை என்று நீ கேட்கமாட்டாய் உலகப் பிரச்சனைகளில் நமக்கென்ன அக்கறை என்று ஒதுங்கி இருக்கக்கூடிய காலமா இது?......

சங்கிலித் தொடராக சர்வதேசப் பிரச்சனைகள் எல்லாம் நமது நாட்டையும், நமது வீட்டையும், ஏன் நம்மொவ்வொருவரையும் தனித்தும் ஒருமித்தும் பாதிக்கத்தான் செய்கின்றன. எங்கே மானுட குலத்தையே இந்தப் பிரச்சனைகள் மூழ்கடித்து அழித்து விடுமோ என்று அஞ்சத் தோன்றுகிறது. அந்த அளவுக்குப் பிரச்சனைகள் வெடித்துக் கிளம்பிய வண்ணம் இருக்கின்றன. மனிதன் தானே போடுகின்ற முடிச்சுக்களை அவிழ்க்க முடியாமல் இன்று தவியாய்த் தவிக்கிறான்' தானே உருவாக்கிய வலையினுள் தானே சிக்கிக் கொண்டு விடுபட முடியாமல் காலைக்கையை அடித்து அவதிப்படுகிறான். விடுபடுவதற்காய் காலையும் கையையும் அடித்து அவன் செய்கின்ற பிரயத்தனங்கள் மேன்மேலும் அவனைச் சிக்கலுக்குள் சிக்க வைக்கின்றன.

சில சாதாரண விசயங்கள் கூட இன்று மனிதனுக்கு மறந்து போய் விட்டன. தான் ஒரு 'மனிதன்' என்பதையே அவன் மறந்து விட்டான். மனிதன் இன்று தலைகீழாக நடந்து கொண்டிருப்பதற்கு இந்த மறதி தான் காரணமோ? ... ஒரு வேளை இவன் தலைகீழாக நின்று 'சிரசாசனம்' செய்தால் தான் தான் மனிதன் என்பதும்கூட ஞாபகம் வருமோ என்று எண்ணுகிறேன். சரி, தன்னை மறந்தாற் பரவாயில்லை. தன்னோடு தன்னைப் போலவே வயிறும், வாயும் உருவமுமுள்ள மானுடங்களும் கூடவே உலாவுகின்றன என்பதையுமல்லவா இவன் மறந்து விட்டான். இல்லையென்றால் தான் மாத்திரம் சாப்பிடவேண்டும், தான் மாத்திரம் உடுக்க வேண்டும், தான் மாத்திரம் பேச வேண்டும், தான் மாத்திரம் அனுபவிக்க வேண்டும் என்றெல்லாம் இவன் எப்படி நினைக்க முடியும், நடக்க முடியும்? உண்மையிலேயே மனிதன் தன்னை மறந்து விட்டான் என்றுதான் நினைக்கிறேன்.

'மறதிக்கு மருந்து மாஸ்டற்றை பிரம்பு' சின்ன வயதிலே யாரோ பயமுறுத்திய வார்த்தை இது. ஆனால் மனிதன் தன்னையே மறந்து பிரச்சனைகளுக்குள் மாட்டிக் கொண்டிருக்கிற இந்த 'மகாமறதிக்கு' என்ன மருந்தோ?

சில படிச்ச அறிவான மனிசர் 'இதைச் செய் இது புண்ணியம் அதைச் செய்யாதை அது பாவம்' என்று உபதேசம் பண்ணி ஞாபகப்படுத்தலாமென்கின்றனர். இன்னுஞ் சில மனிசர் ''மனிசற்றை இயல்பு மற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிசரை மறக்கிறதுக்காய் தன்னை மறக்கிறதுதான் அதுக்கொண்டும் செய்யேலாது நாங்கள் இருக்கும்வரை எங்கடை பாட்டைப் பார்த்துக் கொண்டு போவம்'' என்று பிரலாபிக்கின்றனர். ஆனால் எனக்கோ இந்த நியாயங்களில் இணக்கமில்லை.

'உபதேசத்தால் உலகத்தைத் திருத்தி விடலாம்' என்று நான் நினைக்கவில்லை. ''எங்கடை பாட்டைப் பார்த்துக் கொண்டு தப்பி ஓட முயற்சிக்கிறதாலும் பிரச்சனைகளிலேயிருந்து விடுபட்டுவிட முடியாது. ஒரு சிலர் இந்தப் பிரச்சனைதான் முக்கியம் இதைத் தீர்த்துக் கொண்டு மற்றதைப் பிறகு பார்க்கலாம் என்று உபாயங்களைச் சொல்லுகிறார்கள். அதுதான் தோழா நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி பிரச்சனைகள் பின்னிப் பிணைந்திருக்கின்ற பொழுது 'அதை முதற் செய்வம் இதைப் பிறகு செய்வம்' என்று எப்படி எண்ணமுடியும்? செய்யமுடியும்?...... விழலுக்கிறைத்த நீராகத்தான் அது முடியும் என்பது எனது துணிபு. வள்ளுவனின் குறளொன்றை நான் அடிக்கடி சொல்லிப் பார்த்துக் கொள்வதுண்டு.

''நோய் நாடி, நோய் முதல் நாடி அது [தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்''

நம்மவர்கள் நோய் நாடுகிறார்கள் நோய் முதல் நாடுவதில்லை. ஆழமாக உட்புதைந்து கிடக்கும் அடி வேரைப்பற்றிச் சிந்திக்காது நுனிக் கொம்பர்களைப்பற்றிக் கதைத்துக் கொண்டு நுனிக் கொம்பர்களை வெட்டுவதால் மரத்தையே வெட்டி விடலாம் என்று முனைவது வீண் ! நோய் முதல் நாடுகின்ற சிலரும் அடிவேரைச் சரியாகத் தாம் தாம் கண்டு பிடித்ததாக வாய் வீரம் பேசி நிற்கிறார்கள் வாய்ப்பச் செயல் செய் செய்வதில்லை ! உயிர்த் தோழ, அதனால் நான் காணும் முடிவு வாய்ச் செயலுடையோராயில்லாது வாய்ப்பச் செயல் செய்வோராய் களத்திலே காரியசித்தராய்க் கருமமாற்ற வேண்டுமென்பதாகும்.

இது நமது தியாகமல்ல. நமது பணி என்று நான் நினைக்கிறேன். உனதெண்ணம் என்னவோ ?

அன்புடன்
**உன்னுயிர்த்தோழன்**



# சங்கச் செய்திகள்

## சங்க நிர்வாகக் குழு: 1976

| | | |
|---|---|---|
| காப்பாளர்கள் | : | பேராசிரியர். ஆ. சதாசிவம் |
| | | பேராசிரியர். ஆ. அ. ஹூவர் |
| பெரும் பொருளாளர் | : | கலாநிதி. க. பாலசுப்பிரமணியம் |
| தலைவர்கள் | : | இ. ஸ்ரீரஞ்சன் |
| | | ஆ. பத்மநாதன் |
| உபதலைவர் | : | செல்வி. ச. சாந்தகுமாரி |
| செயலாளர் | : | செ. சண்முகதாஸ் |
| உபசெயலாளர் | : | அ. சா. குணசீலன் |
| இளம் பொருளாளர் | : | கி. பாலதாசன் |
| இதழாசிரியர் | : | அ. சத்தியசீலன் |

### நிர்வாகக் குழு உறுப்பினர்

செல்வி. க. கருஷ்ணுவதி

செல்வன். பொ. பாலசிங்கம்

செல்வன். க. தனபாலசிங்கம்

செல்வி. மா. சகலகலாவதி

செல்வன் என். சண்முகலிங்கன்

செல்வி. ந. மனோகரி

செல்வி. நிர்மலா போல்

செல்வி. சி. சந்திரிகா

செல்வன். வி. பி. ஆறுமுகம்

### மலர்க்குழு

செல்வன். செ. கார்த்தி

செல்வி. அ. அன்ரனி

செல்வன். க. பூலோகநாதன்

செல்வன். அ. வே. அன்ரன்

செல்வன். செ. ரவீந்திரன்

செல்வன். க. ஸ்ரீரஞ்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் சிந்தனையிலிருந்து.......

"தமிழ்த்தாய்' என்கின்ற பதத்தில் தொனிக்கின்ற 'தாய்மையை' எண்ணிப்பார்க்கும்போது எம் தமிழ்மொழிக்கு நாம் இதயத்தில் அளிக்கின்ற இடம் எத்தனை உன்னதமானது என்பது தெளிவாகிறது. இத்தகு உயரிடத்தில் வைத்துப் பார்க்கும் நம் மொழியின் வளர்ச்சிநிலை, சங்ககால தமிழ் வளத்தோடு ஒப்பிட்டு நோக்குங்கால், மந்தநிலையில் மனவருத்தம் தருவதாயுள்ளது. இன்றையநிலையில் இதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்பதே இன்றைய கேள்வியாய் நம் மத்தியில் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது.

நாம், பல்கலைக்கழக மாணவர்கள், இந்தப் பிரச்சனைக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள். அது நியாயபூர்வமாய், அதேசமயம் செயல்முறையில் ஆக்கபூர்வமாய் இருக்கவேண்டும் என்பது தமிழ்ச் சமுதாயத்தின் எதிர்பார்ப்பாகும். நம் சங்கம் இதயபூர்வமாக தமிழ்ச் சமுதாய வளர்ச்சிக்காக எந்த போலித்துவ வாதங்களையும் சாராது தன் பணியை சுயாதீனவழியில் நேர்மையாகச் செய்து வருகிறது— இனியும் செய்துவரும் என்பது உறுதி. இவ்வழியில் நம் அமிழ்தினுமினிய தமிழ்மொழி இன்னல் நீங்கி நன்மைபெற நாம் உழைப்போமாக.

செ. சண்முகதாஸ்



# "தரவுகள் தாண்டிய நிகழ்வுகள்"

— ச. வாசுதேவன் —

(சிறு கதை)

என்வலைப்பும் கையுமாக வேர்க்க விறு விறுவிறுக்க வந்த சோமனுக்கு அறையில் வந்து சேட்டைக் கழற்றிய பின்பும் புழுக் கம் தீர்ந்ததாகத் தெரியவில்லை. அது உடற் புழுக்கமா? அல்லது உள்ளத்தின் புழுக்கமா? என்றெல்லாம் அறிவு ரீதியான தாக்கத்திற்கு இப்பொழுது அவனது உள்ளம் தயாரா கவும் இல்லை, அவனது நினைவெல்லாம் இப் பொழுது சில நாட்களாக கல்யாணி பற்றிய தாகவே இருந்து வருகிறது என்பதை அவன் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும், ஆனால் ஒப்புக் கொள்வதென்பது அவனது மனத் துக்கு என்னவோ கேவலம் என்பது போலத் தான் இன்னமும் தோன்றுகிறது. சோமன் அவ்வளவொன்றும் பெரிய பணக்காரக் குடும்பத்தவனல்ல நான்கு தங்கைகளுக்கும் ஐந்து தம்பிகளுக்கும் அண்ணனாகப் பிறந் ததே அவன் செய்த பாவம், இந்த பத்து உருப்படிகளையும் வளர்க்கவெனத் தேய்ந்து போன இயற்கைச் சொத்துக்களினால் அவ னது பெற்றோருக்கேற்பட்ட இல்லாமையே அவனுக்கு இயற்கை கொடுத்த தண்டனை, ஆனாலும் இன்று சோமன் ஒரு பட்டதாரி, சோமசுந்தரம் பி. எஸ். சி என்று தனது நீண்ட பெயரோடு அடிசனல் மூன்று எழுத் துக்களையும் இப்பொழுது அவன் சேர்த்துக் கொண்டதுதான் காரணமோ என்னவோ அவனுக்கு இப்போ சமூகத்தில், இல்லை, கல் யாணச் சந்தையில் நல்ல கிராக்கி, அந்த கிராக்கியில் ஏற்பட்டுள்ள ஒரு விண்ணப்பம் தான் இந்த மூன்று நாளாக அவனது அரிப் புக்குக் காரணம், அவனது அப்பா ஏகாம் பரத்தை விடத்தாய் விசாலாட்சியின் கெஞ்சுதலை அவனுக்கு வந்த கடிதத்தில் அவ னால் உணர முடிந்தது, சென்ற முறை லீவில் வீட்டுக்கு அவன் சென்றபோது ஒருநாள் வழமை போல தங்கை சாந்திதான் அவ னுக்கு உணவு பரிமாறினாள், அப்பொழுது இவன் நிலத்தைப் பார்த்தபடியே தட்டில் தன் முழுக்கவனத்தையும் செலுத்தியிருந் தான், அண்ணா! கொஞ்சம் குழம்பு விட்டா, பயம் கலந்த மரியாதையாக வந்த தங்கை யின் கேள்விக்கு ஓம்! என்ற பதிலோடு தலை நிமிர்ந்த அவனிடம் ஏதோ சொல்லவேண் டும் என்ற தயக்கம் அவள் முகத்தில் பளிச் சிடுகிறது; அதைக் கிண்டி எடுக்க வேண்டும் என்பதற்காகவே, எப்பிடி? இப்ப சொந் தக்காரர் ஆரும் வாறேல்லையா? இந் தச் சில ஆண்டுகளாக இல்லாமையினால் வராத அந்த யாரோக்களைப் பற்றியே அவன் வினவினான். வாறவைதான்! சாந்தி இழுத்து முடித்தாள், வாறதெண்டால், அப்பிடி ஆர் வாறவை? அவனது கேள்விக்குப் பதில் சொல்வதா? இல்லையா என்பது போன்ற அவளது தயக்கத்தைப் புரிந்து கொண்ட அவன் மீண்டும்,

ஆ..., ஆர்வாறவை, ஏன் வாறவை? அவனது அந்த அழுத்தத்தைப் புரிந்து கொண்ட சாந்தி மாமா வாறவர், அத்தை வாறவ, கந்தையா மாஸ்ரர் வேறை...... வேறை! கீறல் விழுந்த இசைத்தட்டாக ஒலித்த அவளது தயக்கத்தை அவன் கலைக்க முயன்றான். வேறையெண்டால், வேறையா? வேறை , தரகர் சிவசம்புவும் அடிக்கடி சாதகங்களோடை வாறவர். அம்மாவுக்கு விருப்பமில்லை அப்பாதான் அவரோடை கன நேரம் கதைப்பார், இதை, ரகசியம்போல அண்ணனுக்கு மட்டுமே கேட்கக்கூடியதாகச் சொல்லி முடித்தாள் அந்த தங்கை, அவனுள் ஒரு மகிழ்ச்சியும் எவர் எவர் எந்தப் பெண் ணைப் பேசுகிறார்கள் என்ற ஆவலும் இருக் கத்தான் செய்தது. ஆனால் அந்த உந்துதல் களுக்கெல்லாம் கல்யாணம் முடிக்கவேண்டு மென்ற அவாதான் காரணமல்ல, கல் யாணச் சந்தையில் தனது மதிப்பை எடை போடும் ஒரு மதிப்பீடே அதற்குக் காரணம் அந்த உந்துதலினால் அவன் கேட்கிறான், எத்தனை பொம்பிளையளை இதுவரையும் பேசினவை, சாந்தியின் விரல்கள் லிஸ்ட் போடுவது போல ஒவ்வொன்றாக மடித்து எண்ணிக் கணக்கினைக் காட்ட வாய் சொல்லுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமாவின்ரை மகள் கமலாவைத்தான் முதல் வந்து கேட்டவை, பிறகு ராசாத்தி, ராணி, பொன்னையா மாஸ்டரின் மகள் கிளி இப்படியே அவள் எண்ணுக் கணக் கோடு சொல்லிக் கொண்டிருந்தபோது அவளது இரண்டு கைகளின் விரல்களும் மடித்துமுடிந்து எண்ணிக்கைக்காக அவள் தடுமாறுவது அவனுக்குச் சிரிப்பாக இருக்கிறது. சோமனது மனம் எப்படியாவது இன்று தங்கைக்குத் தனது காதல் விவகாரத்தைச் சொல்லிவிட வேண்டுமென்று துடித்துக் கொண்டது ஆனுல் இது வல்லத் தருணம், இதுவல்ல இடமும் கூட என அவன் அறிந்திருந்ததனுல், இன்று சாந்தியைப் படத்துக்குக் கூட்டிக் கொண்டு போக வேண்டும் அங்குதான் விபரமாகக் கதைக்க முடியும் என முடிவு எடுத்துக் கொண்டான்.

சாந்தி பின்னேரம் படத்துக்கு போவம், என்ன? ஓம்! அவயது வியப்பு முகத்தில் மலர்ச்சியாகக் காட்சியளித்தது.

அந்த மாலையும் வந்தது, அவர்கள் இருவரும் ஏறத்தாள ஒரே முகவெட்டையும் ஒரே உடற்கட்டையும் கொண்டிருப்பதனுல் அண்ணன் தங்கை என்று எழுதி ஒட்டியிருந்தது. இல்லாவிட்டால் அவனது கிராமத்தவர் சில வேளை அவர்களைக் கூடத் தப்பாக நினைத்து விடுவார்கள் இத்த முக ஒற்றுமை சோமனுக்கு ஒரு திருப்தியாயிருந்தது. இது பற்றியே ஏதும் நினைக்க ஆற்றலற்ற சாந்தியோ, அண்ணனேடு, ஒரு பட்டதாரியோடு, நான் வெளியில் போகிறேன் என்ற மிகையான மகிழ்வோடு தலை நிமிர்த்தி நடந்து கொண்டிருந்தாள் படம் ஆரம்பித்து முடிவதற்குள் அவன் சொல்ல வேண்டிய அனைத்தையுமே சொல்லி முடித்தான். சாந்தி! நான் உனக்குக் கொஞ்சம் கதை சொல்ல வேணும், சொல்லுங்கோ! சாந்தியின் இந்த மரியாதையான அழைப்பு அவனுக்கே வெட்கமாக இருந்தது. அவனது பல்கலைக்கழக வாழ்வில் குடும்பத்தை நான்கு வருடம் பிரிந்திருந்தான் அதற்கு முந்திய காலத்தில் மட்டும் அவனைத் தங்கைகள் கூட நீ, என்றுதான் அழைத்தனர். ஆனுல் இப்பொழுதெல்லாம் நீங்கள் என அவர்கள் அழைக்கும்போது அவனுக்கே மிகுந்த தாழ்வுணர்ச்சியை ஏற்படுத்தியது போன்றிருந்தது. இருந்தாலும் அவற்றையெல்லாம் சிந்திக்க நேரம் இல்லை என்பது போல கதை முழுவதையும் சொல்லி முடிக்க வேண்டிய ஆவலில் சொல்லத் தொடங்கினுன். சாந்தி நான் இப்ப ஒரு புதுக்கதை சொல்லப் போறன் அது உனக்குத் திடீரென அதிர்ச்சியாக இருக்கலாம்! அவனது பீடிகையைக் கலைக்க முயன்ற அவள், அதுக்கென்ன எனக்குத்தானே சொல்லுங்கோ! அவளது ஆதரவுக்கு கண்களால் நன்றி சொன்ன சோமன், இல்லைச் சாந்தி, நான் எதிர்பாராமலே... ஒரு காதலிலே விழுந்திட்டன்!

இந்த விழுந்திட்டன் என்ற வார்த்தையே, தன்மீது குற்றமேதுமில்லை என்று தன்னைத்தானே தேற்றிக் கொள்வதற்காகச் சொல்கின்ற வார்த்தைப் பிரயோகம் என்பதை அவள் புரிந்து கொள்ளக் கூடுமோ? என்பதை அவளது கண்களுக்குள் ஆராய்ந்தான் இருளில் மின்னிய அவளது கண்கள் தான் ஏதும் அறியவில்லை என்ற பாவத்தைக் காட்டியது! ஆனுலும் நான் இன்னும் அவளைத்தான் கட்டுறதெண்டு தீர்மானிக் கேல்லை!

மனமார அவன் ஒரு பொய்யை அவளுக்குச் சொல்லி அதன் மூலம் என் பிரதி பலிப்பு வருகிறது என்று ஆராய்ந்தான். உங்களுக்கு விருப்பமெண்டால் அம்மா ஒண்டும் சொல்லமாட்டா சாந்தியின் வார்த்தைகள் அவனை உற்சாக முட்டின, அம்மா பரவாயில்லை சாந்தி ஆனுல் அப்பா நினைப்பார் தனக்கு நான் ஏதோ துரோகம் செய்கிறதெண்டு! நினைப்பதெல்லாம் சொல்லாகி வார்த்தையில் வரும்போது அவை எவ்வளவு தூரம் முழுமையை இழந்து விடுகின்றன என்பது அவனுக்கு இப்போது புரிந்தது. அவன் மீண்டும் பேசத் தொடங்கினுன், நான் காதலிக்கிறதாலையோ, அவளைக் கல்யாணம் செய்கிறதாலையோ, குடும்பத்தைப் பார்க்கமாட்டன் எண்டோ, உங்களையெல்லாம் மறந்திடுவன் எண்டோ நீயும் நினைச்சிடக் கூடாது! நீங்கள் எல்லாம் நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலே வாழ்க்கைப் பட்ட பிறகு கூட என்னுலே கலியாணம் செய்ய முடியும், ஆனு, எண்டைக்கும் என்னுலே கல்யாணியைத் தவிர இன்னெரு பெண்ணை நினைச்சுப் பார்க்க முடியாது, பேசி முடித்தபோது அவனுக்கு மூச்சு முட்டியது இப்ப ஒரு சிகரட் அடிச்சால்... சீ... சாந்திக்கு முன்னுலே குடிக்கக் கூடாது. தன் மனத்தின் ஆசைகளை அவளுக்காகவே அவன் உதறிஞன். அண்ணு அண்ணி என்ன செய்யிரு? தங்கையின் இந்தக் கேள்வியால் அவன் உள்ளமெல்லாம் பூரித்துப் போஞன், அண்ணி என்று அவள் கேட்டதன் மூலம் அவளை கல்யாணியை அண்ணனுக்கு மனைவியாக அங்கீகரித்துக் கொண்டாளோ? ஓ.. என்ன கேட்டனீ? அவனது குழப்பத்தைத் தீர்க்க முயன்ற அவள் அண்ணி என்ன செய்யிரு? எண்டு கேட்டஞன். என்ருள் அண்ணி இப்ப இமிகிறேஷனிலே வேலை செய்யிரு என்னேடை படிச்சவ தான் நல்ல வடிவு, குணமும் கொஞ்சமாவது குறையில்லை. இனி தகப்பனும் நல்ல காசுக்காரன், நல்ல குடும்பம் மொத்தத்தில் அவள் ஒரு பண்பான பெண், அவ்வளவு தான் எனக்கும் வேணும் அவள் கேட்காத விடயங்களையும் சொல்லி முடித்தான். சாந்தி இவன் சொன்ன விபரங்களைக் கேட்டுப் பூரித்துத்தான் போனுள் என்பது அவனுக்குப் புரிந்தது, பின்னையென்ன அண்ணனுக்கேற்ற அண்ணிதானே?

சாந்திதான் மீண்டும் கேட்கிருள்! அண்ணு, எப்பிடி அவவுக்கும் உங்களைப் போலகதை கவிதை எல்லாம் எழுதவருமா அல்லது... அவளது இழுவை, அண்ணனுக்கு எதிர்மாருக, இலக்கிய ஆர்வமே இன்றிப் பிறந்து அடிக்கடி அவனிடம் திட்டு வாங்கிக் கொள்ளும் தன்னைப் போல அவளும் இருந்து விட்டால், ஒத்துப் போகாதே என்ற தயக்கத்தைக் காட்டியது.

ஓ அவள் அதிலையெல்லாம் கெட்டிக்காரி! அப்பாடி என்பதுபோல சாந்தி ஒரு முறை மூச்சுக்காற்றை உள்ளே இழுத்து விட்டாள். அந்த இழுவையோடு இன்னும் ஒரு கேள்வி அவளிடமிருந்து வெளிப்பட்டது. சில வேளை அண்ணி படிப்பாலையும் பணத்தாலையும் உயர்ந்தவ எண்டதாலே, எங்களையும், அப்பா அம்மாவையும் புறக்கணிச்சால், அதை, அதை, என்னுலே தாங்க முடியாது! அது ஒண்டு மட்டும் இல்லாமல், எங்களில் உண்மை அன்பு செலுத்துற அண்ணியெண்டால் உங்களுக்காக நான் கல்யாணம் செய்யாமலே இருக்கவும் தயார்.

இதுபற்றி இதுவரை நான் சற்றேனும் சிந்திக்கவில்லையே? அவள் மீது கொண்ட மோகம் தானே காரணம்? அவன் தன்னையே கேட்டுக் கொண்டான், அவளது கேள்வியில் நியாயம் இருக்கிறது என்பதை சோமன் உணர்ந்து கொண்டான். அண்ணனது ஒட்டுறவை இழக்க விரும்பாத ஒரு அன்புத் தங்கையின் ஆதங்கமான எதிர்பார்ப்புக்கள் அவனுக்கு நியாயமாகப்படாதா என்ன? இருந்தாலும் அவள் அப்படியானவளல்ல என்பதை நிரூபிக்க முயன்று அவள் அளவில் வென்று தன்னளவில் வெற்றியா தோல்வியா என்று காணமுடியாது தவித்து வெளியேறிஞள். படம் முடிந்த அன்றோடு சாந்தியின் மனதில் தனது சுமைகளை நிறைத்த நிறைவோடு அவன் கொழும்புக்கு ரயிலேறி விட்டான். இதெல்லாம் நடந்து இதுவரை ஒருமாதம் இருக்கலாம், நேற்றுத்தான் அந்தக் கடிதம் வந்தது. அம்மாவின் முத்து முத்துக்களிஞலான அந்தக் கடிதம் அவனது விருப்பத்திற்கு தாங்கள் ஒத்துக் கொள்வதாகவும், அவனது தெரிவை நிச்சயப்படுத்தி நாளைக் குறிக்கலாம் என்பதாகவும் அது பிடிக்காவிட்டால் உடனே வேறு சம்பந்தம் பேசுவதா? என்பதாகவும் கேட்டிருந்தது.

பிரச்சனைகள் சிறிதாக இருக்கும் போது பிறக்காத இக்கட்டுக்கள் அவை பூதாகரமான போது நெஞ்சை முட்டுமே. அது போல இப்பொழுது அவனது நெஞ்சைப் பிரச்சனை முட்டத் தொடங்கியது. கல்யாணம் செய்து விடுவது என்ற எதிர்பார்க்கை நிறையைப் போகிற வேளையில் தனது தங்கை, அந்த தியேட்டரின் இருளின் கண்கள் பனிக்கக் கேட்டாளே. அந்தக் கேள்வி! அது அவனது மனதில் நிலையாக நின்றது. அவள் அண்ணனிடம் கேட்டது போலவே அவன் கல்யாணியிடம் இப்படி இப்படிச் செய்வாயா என்று கேட்டு விடலாம்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அது எந்தளவிற்கு நாகரீகமானது என்றுதான் அவன் தயங்கினான். எப்படியாயினும் தன் பிரமச்சரியத்தின் விளிம்பான அம்மாவின் கடிதத்திற்கு பதிலிறுக்க முன் கல்யாணியோடு சாந்தி கேட்ட கோணத்தில் நெருங்கிப் பார்த்தேயாக வேண்டும். அதுவே பரஸ்பர புரிந்து கொள்ளல்கள் முழுமையானதற்கான அத்தாட்சியும்கூட! இதைத் தீர்மானிக்கும் போது அவனுள் ஒரு துணிவு பிறந்தது. அந்தத் துணிவோடுதான் நேற்று மாலையே கல்யாணியைச் சந்திக்க அவன் கிளம்பினான்.

மாலைநேரம் நான்கு மணியானதால் கல்யாணி வழமையாக பஸ் எடுக்கும் ஹோல்டில் சனம் அதிகம்தான் அதிகமான சனக்கூட்டமே ஒருவரை ஒருவர் குறிப்பாகப் பார்த்துக் கொண்டு தனிமையைக் குலைக்காத ஒரு பரபரப்பாக அவன் அடிக்கடி விரும்புவான். எனவே இந்தப் பரபரப்போடேயே கதையைத் தொடக்கினான். தொடக்கிய கதை நேரான வழிக்கு வருமுன்பே கல்யாணியின் தோழி, தங்கள் இருவரினதும் கூடவே வேலை செய்கிற இன்னொருவனின் தகப்பனின் சாவீட்டுக்குப் போகவேண்டும் என்ற குண்டைத் தூக்கிப் போடுகிறாள், என்ன? குமாரின்ரை அப்பாவா செத்தது. நான் கட்டாயம் போக வேணும் சுந்தரம். கல்யாணி தான் சொன்னாள். அவனை அவள் சுந்தரம் என்றுதான் அழைப்பது வழக்கம். இவனும் அவனது மென்மையான மனத்தையும், மற்றவர்களுக்கு இரங்கும் பண்பையும் புரிந்து கொண்டவனாக அவளை விட்டு, அடுத்த நாள் அவசியம் சந்திக்கவேண்டும் என்ற நிபந்தனையோடு விலகுகிறான்.

அதற்குப் பிறகு சனிக்கிழமையான இன்று காலை அவள் தங்கியிருக்கும் விடுதிக்குப் போனான். கல்யாணி! எப்படி செத்தவீடு?

கேட்டபிறகு தான் நினைத்தான். செத்த வீட்டைப்பற்றி இப்படியா கேட்பது? இது சரியான கேள்வியா? என்று. ஆனால் கல்யாணி அது பற்றியெல்லாம் சிந்திக்காமலே பதில் சொல்லத் தொடங்கினாள். செத்த வீடா? அந்த வீட்டை நினைக்கவே வயித்தைக் குமட்டுது! ஏன்? ஏன்? அவன் பதறினான்.

ஒரு சின்ன வீடு. ஒரே ஊத்தை வீடு. அதுகளின்ரை வீட்டுச் சனம், சீ............ குமார் மட்டும் ஒவ்வீசுக்கு மினுக்கிக் கொண்டு வந்திடுவார். வீடும் ஆக்களும் வெறும் பழங்காலச் சனங்கள் போலை கிடக்குது.

அவளது இந்தப் பதிலே தான் நினைத்த கோணத்தில் அவளை நெருங்கிப் பரீட்சிக்கச் சரியான போர்மூலா என அவன் நினைத்ததனால் மேலும் அவளது வாயைக் கிளறினான்.

அதுக்கென்ன செய்யிறது. அவன்தான் குடும்பத்தைப் பார்க்கிறான் எண்டு சொல்லுவாய்! பிறகு அந்தச்சனமே கூடாது என்கிறாய்.

அவனது கேள்வி சரியாகத் தான் வேலை செய்திருக்கிறது அதுக்கெண்டு இப்பிடியா வீடும் அலங்கோலமாயிருக்கும் சீ.......... எனக்கு ஏன் வந்தன் எண்டு நினைப்பு வந்தது!

ஓகோ..................நிலையான வீடுகளே சாவீட்டின் போது தாறுமாறாகி விடுகின்றனவே, இவள் சாவீடே நேராக இல்லை என்று மனம் புழுங்கிக் கொள்கிறாளே? அப்போ என்னுடைய வீடு? ஏழ்மை என்பதற்காக அந்தச் சனக் கும்பலையே வெறுக்கிறாளே அப்போ, நானும் என்னைச் சேர்ந்தவர்களும்?

அவனுக்குத் தங்கை சாந்தியின் கேள்விகளுக்கு பதில் கிடைத்து விட்டது!

கல்யாணி நான் ஒருக்கா ஒரு பிரண்டை மீற் பண்ண வேணும். பின்னேரம் வாறன், என்று சொன்னபடியே அவன் புறப்பட்டு விட்டான். வருகிற வழியில் தான் அவன் இந்த இரண்டு என்வலப்புகளையும் வாங்கி வந்தான். அம்மாவுடைய கடிதம் அவனது நெஞ்சில் மீண்டும் படமாக ஓடியது.

துவாயினால் வேர்வையைத் துவட்டிய சோமன், கடிதங்களை எழுத வேண்டும் என்கின்ற உந்துதல் மேவ, வழமை போல முதலில் என்வலப்புகளுக்கு விலாசமிட்டு ஒரு பக்கத்தில் வைத்தான்.

அந்த இரண்டு விலாசங்களில் ஒன்று திருமதி ஏகாம்பரத்துக்கும், மற்றொன்று செல்வி கல்யாணிக்கும், என்று எழுதி வைத்ததைப் பார்த்துவிட்டு மெலிந்த புன்னகையோடு கடிதங்களை வரைய ஆரம்பிக்கிறான். எழுத எழுத வியர்வை குறைகிறது, உடற் புழுக்கமும், உளப் புழுக்கமும் தேய்கிறது, யன்னலுக்கூடே தெரிகின்ற சூரியனும் மேற்குக் கரையோரம் சாய்கிறது, இனி என்ன அவனும் ஒரு அவளுக்குக் கணவனாகி விடுவான் தானே அந்த அவள்?

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# பொருளாளர் பார்வையிலே...

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மூத்த தமிழ்ச்சங்கமான எமது தமிழ்ச்சங்கம் அரை நூற்றாண்டு என்னும் காலவெள்ளத்தைத் தாண்டி இன்றும் புது வெள்ளமாகப் பாய்ந்து கொண்டிருக்கின்றது. எமது சங்கத்தின் இலட்சியம் மாணவர்களிடையே திறமைகளை வளர்த்தலும் ஊக்குவித்தலுமாக இருந்து வருகின்றது. இந்த வகையில் கடந்தகாலங்களில் கதை, கவிதை, கட்டுரை, பேச்சு, விவாதத்திறன், நடிப்புத்திறன் — இவற்றினூடாக பல்கலைக்கழக தமிழ் மாணவர்களிடையே ஒற்றுமையையும், பரஸ்பர நல்லெண்ணத்தையும் எமது சங்கம் பேணிக்காத்து வருகின்றது. இதில் ஏற்படும் பணத்தேவைகட்கு அங்கத்தவர்களிடையே வருடாந்த பங்குப்பணம் சேகரித்தல் நடைமுறையாக இருந்து வருகின்றது.

எமது வருடாந்த சஞ்சிகையான "இளந்தென்றல்" சிறப்புடன் வெளிவருவதில் வர்த்தகப் பெருமக்களின் ஆதரவு என்றுமே எமக்குக் கிடைத்து வருகின்றது.

கடந்த காலங்களில் எமது சங்கத்தினது கலைத்திறனை வரவேற்பதில் கொழும்பு வாழ் தமிழ் மக்களுடன், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு தமிழ் மக்களும் பேராதரவு காட்டியுள்ளனர். இவர்கள் மத்தியில் நடாத்தப்பட்ட நாடகத் தொடரில் பதினொருவது நாடகம் வரை இவர்களது நிதியுதவியுடன் மேடையேற்றப்பட்டன.

சங்க அங்கத்தவர்களிடையே காணப்பட்ட உற்சாகம் நாடகத் தமிழுடன் நில்லாது இயல் இசையுடன் கூடிய 'இளந்தென்றலாக' கடந்த இரு ஆண்டுகளிலும் கண்டவர் உள்ளத்தில் களிப்பூட்டும் நீங்காத நினைவாக இடம் பிடித்துள்ளது. இதன் தொடரில் இவ்வருடம் நடைபெறும் இளந்தென்றல் கலைவிழாவிற்கு வேண்டிய நிதியினை ஒரு இன்னிசை நிகழ்ச்சியை நடாத்தி பெற்றுக் கொண்டோம்.

இதழாசிரியரின் அயராத உழைப்பினையும், இவ்வருடம் மலரின் சிறப்பிற்கு உரமிட்டு வளர்ப்பதில் பெரும் பங்கேற்ற இவ்வாண்டு தமிழ்ச்சங்க நிர்வாகக்குழுவினது அயரா முயற்சியையும் போற்றுகின்றேன்.

எமது சங்கத்தில் காணப்படும் மறுமலர்ச்சி மேலும் சிறப்புற வருகின்ற வருடங்களிலும் உங்களது பேராதரவு மேலும் பெருகிவருமென உளமார நம்புகின்றேன்.

கிருஷ்ணபிள்ளை பாலதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளந்தென்றல் சிறக்க இசைத் தென்றற் கலைஞர்
பரமேஸ் கோணேஷ் தரும் நல்வாழ்த்துக்கள்

## ஈழத் தமிழிசைக் கலை முன்னோடிகள்

மெல்லிசை மன்னர்

# பரமேஸ் கோணேஷ்

※ ஈழத்தின் முதலாவது தமிழிசைத் தட்டைத் தயாரித்தவர்கள் (1970)

※ முதன் முதலாக நாற்பதிற்கும் மேற்பட்ட இசைக் கருவிகளை ஒன்றிணைத்து ஈழத் தமிழிசை உலகிலும், சிங்கள உலகிலும் புதிய ஓர் சாதனையை நிலைநாட்டியவர்கள்,

※ தமது சொந்த லேபல்களிலேயே அதாவது PKM இசைத் தட்டுக்களில் தமிழ்ப் பாடல் களையும், சிங்களப் பாடல்களையும் வெளியிட்ட முதலாவது இலங்கைத் தமிழ்க் கலைஞர்கள்.

※ தமது பாடல்களின் மெட்டிற்கு சிங்களப் பாடல்களை உருவாக்கி, அதில் வெற்றி கண்டு, சிங்கள இசைத் தட்டுத் தயாரிப்பாளர்களையும் தமிழ்ப் பாடல்களை உருவாக்குவதற்கு முதல் வழிகாட்டிகளாக இருந்தவர்கள்.

※ கவிஞர், இசையமைப்பாளர், பாடகர் இசைத்தட்டுத் தயாரிப்பாளர்கள், இசைத்தட்டு விற்பனையாளர்கள் (பரமேஸ் கோணேஷ் றெக்கோட்ஸ்பார்) விநியோகஸ்தர்கள் அத்தனை திறமைகளையும் தம்மிற் கொண்டு செயற்படுத்தி வரும் முதலாவது இலங்கைத் தமிழ்க் கலைஞர்கள்.

※ ஈழத்தில் முதன் முதலாக மெல்லிசை, பொப் இசை, (இசைத் தென்றல்) மேடை நிகழ்ச்சியினுல் பதினுறுக்கும் மேற்பட்ட வாத்தியக் கருவிகளை ஒன்றிணைத்து இயக்கிய வர்கள்.
இசைத்தென்றல் நிகழ்ச்சிக்கு மண்டப வாசலிலேயே அனுமதிச் சீட்டுக்களை விற்பனை செய்து ஒரே இரவில் ஏழு மணிக்கும, பத்து மணிக்கும் இரு நிகழ்ச்சிகளை நடத்தியவர்கள். தொடர்ந்து ஆறு தினங்கள் ஒரு மாகாணத்தில் எட்டு இசைத் தென்றல் நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தியவர்கள். (29-8-72 முதல் 4-9-74 வரை வடமாகாணம்).

※ இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஈழத்துப் பாடல், ஈழத்துத் தமிழ்ப் பொப் இசைப் பாடல் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கு முன்னரே இசைத்தட்டு வடிவில் தமது பாடல்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு அன்பளிப்புச் செய்து அவற்றை இந்தியப் பாடல்கள் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளிலேயே ஒலிபரப்புச் செய்த முதலாவது இலங்கைத் தமிழ்க் கலைஞர்கள்.

※ ஈழத்துத் தமிழ்ப் பொப் இசைப் பாடல்களென்று ஆங்கிலச் சொல்லையும் (Pop) சேர்த்து அழைக்கப்பட்ட பாடற்களுக்கு ஈழத்துத் தமிழ் துள்ளு இசைப் பாடல்களென்ற தமிழ்ப் பெயரைச் சூட்டி, பொப் இசைக்கு முதன் முதலாக இப்பெயரை அறிமுகப்படுத்திய வர்கள். (23-8-1973 அன்று பரமேஸ் கோணேஷ் வெளியிட்ட ''இசைத் தென்றல்'' மலரிலிருந்து நாட்டு நடனம், நாட்டு இசை இவைகூட பொப் (Pop) என்ற வரிசை யில் அடங்கக் கூடியவை. சுருக்கமாகச் சொன்னுல் துள்ளு இசைப் பாடல்கள் என்பது மிகப் பொருத்தமாகும்.) இம்மலர் வெளியீட்டின் பின்னரே பத்திரிகைகளிலும், வானொலி யிலும் பொப் இசைக்கு துள்ளு இசைப் பாடல்கள் என்று குறிப்பிடுகிருர்கள்.

※ முதன் முதலாக ஈழத்துச் சிறப்புப் பாடல்களை (யாழ்பாடி யாழ்ப்பாணம், மீனிசை பாடி வரும், திருகோணமலை எங்கள் நாடு) மெல்லிசையிலும், பொப் இசையிலும் மக்கள் மனதில் இடம் பிடிக்கும் வண்ணம் உருவாக்கியவர்கள்.
மனமாளிகை ரோஜா என்ற பாடலில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மலைநாடு, இலங்கை வானொலி, ஆலயங்கள், ஆகியவற்றை இணைத்துக் கவிபுனைந்து அப்பாடல் வெளிவந்த பின்னரே இதே பாணியில் வேறு சில பொப் பாடல்கள் வெளிவந்தன.


※ முதலாவது இலங்கைத் தமிழிசைத் தட்டை இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர், வானொலி நிலையங்களிலும் மற்றும் சில வெளிநாட்டு வானொலி நிலையங்களிலும் ஒலிபரப்பச் செய்த முதலாவது இலங்கைத் தமிழ் கலைஞர்கள்.
இத்தனை உண்மைகளையும் எடுத்துக்கூடிய நான் தொடர்ந்தும் நேயர்கள் கேட்கும் கேள்விகளுக்குக் கடிதமூலம் பதிலளித்து அவர்களின் சந்தேகத்தைத் தீர்த்துவைக்கக் காத்திருக்கிறேன். அன்றும் இன்றும் என்றும் புகழ் குன்ருது ''இசைத் தென்றல்'' வீசிவரும் ஈழத்து மெல்லிசை மன்னர் பரமேஸ் கோணேஷ் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

T. K. செல்வக்குமார்
நிகழ்ச்சி அறிவிப்பாளர், பரமேஸ், கோணேஷ், திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Servic
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# அஞ்சலி செலுத்துகிறோம்



**S. L. M. அபூபக்கர்**

அபிவிருத்திக் கல்வி நெறி

இரண்டாம் வருடம்

தோற்றம்: 27-05-1947 மறைவு: 11-03-1976

இயற்கையின் சோதனையால் எம்மை விட்டுப் பிரிந்து சென்ற எம் இனிய நண்பர் S. L. M. அபூபக்கர் அவர்களுக்கு நினைவாஞ்சலி செலுத்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்க நிர்வாகக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றே விஜயம் செய்யுங்கள்!

◐ பாடசாலைப் புத்தகங்கள்

◐ நூல் நிலையப் புத்தகங்கள்

◐ பாடசாலை உபகரணங்கள்

மற்றும் பாடசாலைத் தேவைகளுக்கு

# கலைவாணி புத்தக நிலையம்

10, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 221

130, திருகோணமலை வீதி,
கண்டி.
தொலைபேசி: 3196

Visit:

## For All Your Modern Printing Requirements

# *Kalaivani Printing Works*

LEADING PRINTING WORKS IN THE NORTH

**No. 10, MAIN STREET, JAFFNA.**

Phone: 221

Phone: 3196

Grams: " **Kalaivani** "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்லவேண்டும் இவர்களுக்கு!

- பல்வேறு சிரமங்களையும் எதிரேற்று இந்த மலர் சிறப்புற வெளிவர வேண்டி இடையறாது பாடுபட்ட நமது தமிழ்ச் சங்கச் செயற்குழு உறுப்பினருக்கும்,

- தேவையான நேரங்களில் பல வழிகளிலெல்லாம் தகவுரை தந்து உடனுழைத்த மலர்க்குழு உறுப்பினர்க்கும்,

- மலரின் தரத்தினை நிலைநாட்டும் சீரிய கருத்துக்களுடனான கட்டுரைகள், கவிதைகள் ஆசிரிய ஆக்கங்களைத் தந்துதவிய விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்கும்,

- மலர் வளம்பெற உவந்து விளம்பரம் தந்துதவிய விளம்பரதாரருக்கும், அதனைச்சேர்க்க அரும்பாடுபட்ட இனிய நண்பர்க்கும் நண்பிகளுக்கும்,

- மலருக்கான ஆக்கங்களையெல்லாம் பல்வேறு சிரமங்களுக்குள்ளேயும் சரி பிழை பார்த்து தகவு கண்ட சகல விரிவுரையாளர்களுக்கும்,

- மலரின் முகப்பினை அழகுற வரைந்து தந்த எனது இனிய நண்பன் ஆ. பத்மநாதனுக்கும்,

- எனக்குப் பக்கபலமாய் பலவழிகளிலும் இறுதிவரை உழைத்த நண்பர்கள் சி. இரத்தினராஜா, வ. திவ்யராசா, சா. லோகீதராஜா த. கோபாலசிங்கம், ச. ஜெகதீஸ்வரன் க. ராமஜெயம் யாழ் நகர் நண்பர்கள் சி. சிறீகாந்தவேள் ச. சதானந்தீஸ்வரன், இ. ஸ்ரீதரன் ஆகியோருக்கும்.

- இத்தனை உழைப்புகளுக்கு மலரென்ற உருவம் தந்து குறுகிய காலத்துக்குள்ளேயே அழகுற முடித்துத் தந்த கலைவாணி அச்சகத்தாருக்கும் விவேகானந்தா அச்சகத்தாருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள்.

— ஆசிரியர்

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.................................

Kalaivani Printing Works Jaffna. 231—76

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org